
விசா
பொய்மான்
பாலகுமாரன்
பொய் மான்
பாலகுமாரன்
விசா பப்ளிகேஷன்ஸ்

35840

# பொய் மான்

பாலகுமாரன்

2378236

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண்: 16, பழைய எண் 55
வெங்கட்நாராயணா ரோடு
தி.நகர், சென்னை–600 017.
☎: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559

முதற் பதிப்பு: டிசம்பர், 2002
உரிமை: ஆசிரியருக்கு©

POI MAAN

By: Balakumaran

First Edition: December, 2002

வெளியீடு: விசா பப்ளிகேஷன்ஸ்

No. of Pages: 128

Paper used: 11.6 N.S. Book Print

விலை ரூ. 32/-

Available at:
THIRUMAGAL NILAYAM
New No: 16, Old No: 55,
Venkatnarayana Road,
T.Nagar, Chennai - 600 017.
Phone: 24342899, 24327696

கிடைக்குமிடம்:
திருமகள் நிலையம்
புதிய எண்: 16, பழைய எண்: 55,
வெங்கட்நாராயணா ரோடு,
தி.நகர், சென்னை–17.
போன்: 24342899, 243427696

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 23610810

Printed at: Chennai Micro Print (P) Ltd., Chennai - 29.

35840
5328742

யோகி ராம்சுரத்குமார்

# முன்னுரை

இனிய ஸ்நேகிதங்களுக்கு வணக்கம்

வாழிய நலம்.

இந்தப் பொய்மான் ஒரு உண்மைக் கதை. சம்பவங்களும், சம்பவங்களின் தொடர்பாக ஏற்பட்ட மன ஓட்டங்களும் அப்பட்டமான நிஜம். அங்குலம் அங்குலமாக எனக்குச் சொல்லப்பட்ட வாழ்க்கை. எனக்கு இந்தக் கதை சொல்லப்படுகிறபோது இந்தக் கதையில் ஏற்பட்ட அவமானங்களும், துக்கங்களும் மிக எளிமையாக சிரிப்போடு சந்துஷ்டியோடு எனக்கு சொல்லப்பட்டன. அவமானத்தை உறிஞ்சி பசுமையாக வளர்ந்து பெரிய மலராய் மலர்ந்து சந்தோஷத்தில் பரிமாறப்பட்டது. அவமானம் இல்லையெனில் நான் மிகச்சாதாரணமாகவே இருந்திருப்பேன் என்று விவரிக்கப்பட்டது.

ஒருவேளை இந்தக் குறிப்பிட்ட காதலில் ஜெயித்திருந்தாலும் நான் பெரிதாய் எதுவும் சாதித்திருக்க மாட்டேன். இந்த காதல் கொடுத்த அவமானம், இந்தத் துக்கம் கொடுத்த தனிமை, இவை இரண்டாலும் ஏற்பட்ட தீவிரம் என்னை மிக நல்ல நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது என்று கதையின் நாயகன் என் எதிரே உட்கார்ந்து சொன்னபோது, தோல்விகளில் துவண்டுபோய் கிடக்கிறவருக்கு தன் அவமானங்களைப் பற்றி எந்த வெட்கமும் பயமும் இல்லாது பிறரோடு பரிமாறிக் கொண்டு அதை அவர் வீடு ரசிப்பதையும் உட்கார்ந்து ரசித்துக் கொண்டு பழைய நினைவுகளில் நிற்றல் என்பது வெகு அரிதான விஷயம். மிகுந்த வலியுள்ளவர்களுக்கு இது கிடைக்கிறது.

கதை படிப்பது என்பது ஒரு பொழுதுபோக்கல்ல. நேரம் கொள்ளிகளுக்கு இந்த உலகத்தில் பல்வேறு விஷயங்கள் இருக்கின்றன. ஆனால் கதை படித்தல்

என்பது ஒரு தவம். வளர்ச்சியைக் குறித்த விசாரணை, அனுபவங்களையும், அணுகுமுறைகளையும் பற்றிய ஒரு அலசல். தொடர்ந்து வலிவோடு நடப்பதற்குண்டான பாடம்.

சில கதைகள் எழுதும்போதும், எழுதிய பின்னும் ஒரு சந்தோஷத்தையும், நிறைவையும் கொடுக்கும். யாருக்கோ இது நிச்சயம் உபயோகமாகும் என்ற நம்பிக்கையைக் கொடுக்கும்.

தொடர்ந்து என் எழுத்துக்களை பிரசுரித்து வரும் நேசமான விசாபதிப்பகத்தாருக்கும் என் நன்றி.

எனக்கு ஓவியம் வரைவதில் தனி ஈடுபாடு காட்டியிருக்கும் ஷ்யாமுக்கு என் அன்பு.

இதைப்படித்துவிட்டு முடிந்தால் அல்லது முடியும் போது எனக்கு இது பற்றி ஒரு கடிதம் எழுதுங்கள்.

80/4, வாரன் சாலை,
மயிலாப்பூர், சென்னை–4.

என்றென்றும் அன்புடன்
பாலகுமாரன்

என் அன்பு நண்பர்
கரூர் **S.சேதுக்குமார்**
அவர்கட்கு சமர்ப்பணம்.

36840
328742

# பொய் மான்

தீபத்தை மெல்லத் தூண்டிவிட அந்த சிறிய அறை முழுவதும் பிரகாசமாயிற்று. பாட்டிலில் இருக்கின்ற பசுநெய்யை மெல்ல தீபத்தின் அகன்ற தட்டில் மஞ்சுளா கவிழ்த்தாள். இன்னும் மூன்று மணி நேரத்திற்கு இந்தச் சுடர் நிதானமாக எரியும். நடுவே ஒரு முறை எட்டிப் பார்த்து மறுபடியும் நெய்விட வேண்டும். நெய் விட்டதும் லேசாக ஒரு புகை எழுந்து வீடு முழுவதும் பசுநெய் வாசனை அடித்தது.

இந்த இடத்திற்கு வருகிறவர்கள் எல்லோருமே பசு நெய் வாசனை அடிக்கிறதே என்று முகம் மலருவார்கள். சுகமாக இருக்கிறது என்று சொல்லுவார்கள். ஆழ்ந்து மூச்சு இழுத்து விட்டு ஆஹா.. ஆஹா என்று பாராட்டுவார்கள். இந்தப் பசுநெய் பண்ணையிலிருந்து வருகிறது. பண்ணையில் இரண்டு பசுக்களுடைய பாலிலிருந்து மட்டுமே எடுக்கின்ற நெய்யாக இது இருக்கிறது. அந்தப் பசுக்கள் ஈரமான தடிமனான அகத்திக்கீரை மெல்வதாலும் புற்களை மேய்வதாலும், தவிடு புண்ணாக்கு என்று சாப்பிடுவதாலும், அதே நேரம் வேலையாட்கள் பசுக்களை ஆறேழு முறை சுற்றி ஓட்டி வருவதாலும் அந்த நடை பழகுவதால் மடி கனத்தும், நல்ல நீர் குடிப்பதால் வயிறு பெருத்தும், உணவு இடையறாது சாப்பிடுவதால் வேளாவேளைக்கு பால் கறந்தும் பசுக்கள் ஆரோக்கியமாக இருந்தன. பண்ணை ஆட்கள் பால்காய்ச்சி வெண்ணெய் எடுத்து நெய்யாக

உருக்கி கொண்டு வந்து பாட்டிலில் இறக்கி விடுவார்கள். அந்த நெய் பூஜை அறைக்குண்டான நெய்.

விவசாயம் மட்டுமே இருந்த பண்ணையில் பசுக்களும் வாங்க மஞ்சுளாவின் புருஷன் சேதுராமன் தான் வேகமாக திட்டங்கள் வகுத்தார். பத்து பசுக்களும், நான்கு எருமைகளும் வாங்கி வந்தார். நாட்டுப் பசுக்கள் மூன்றும், ஜெர்ஸிப்பசுக்கள் இரண்டும் கலப்பின பசுக்கள் மீதியாகவும் பசுக் கொட்டகையை நிறைத்திருந்தன.

சேதுராமனும், மஞ்சுளாவும் பண்ணைக்குப் போனவுடன் கொட்டகைக்குத்தான் வேகமாக நடப்பார்கள். பசுக்களைப் பார்க்கத்தான் பிரியப் படுவார்கள். மெல்லப்போய் முதுகையும், கழுத்தையும் தடவிக் கொடுப்பார்கள். உடலை வருடுவார்கள். கயிறு பிடித்துக்கொண்டு பசுக்களோடு பண்ணையைச் சுற்றி வருவார்கள். பிறகுதான் பழத்தோட்டங்களையோ, தேக்கு மரக்கன்றுகளையோ பார்வையிடுவார்கள்.

"பசு ரொம்ப பாடு. கார்டன் போறாதா? என்னாத்துக்கு பசுக்கொட்டகை. சாணமும், ஈயும், கொசுவுமா இருக்கும்." மஞ்சு சொன்னாள்.

"நான் அதே கேள்விய திருப்பி கேட்கட்டுமா. எதுக்கு கார்டன். எதுக்கு தோட்டம். வெறுமன செடி வளர்க்கவா. வெறும் செடிய பார்த்து என்ன பண்ணப் போற. அந்தச் செடிக்கு ஒரு உபயோகம் வேண்டாமா. பழம் மரம்னு சொல்லுவ. பழமரம் வாங்கி நட்டு வளர்த்து பழம்பறிச்சு அத்தினியும் நாம சாப்பிட முடியுமா. இல்லை. வெளியதானே கொடுக்கணும். ஆனால், பசுவளர்க்கறது ஒரு புண்ணியம். அதாவது நீ என்னதான் தோட்டத்தை சுத்தி வந்தாலும் நிறைவு இல்லை. அந்தத் தோட்டத்துல ஒரு நாலு பசு இருந்து அந்தப் பசு பராமரிக்கற வேலைய நீ உட்கார்ந்து பார்த்தின்னா போதும். என்னமோ பெரிய சந்தோஷம்



வந்து ஒட்டிக்கும். அதைத்தவிர மஞ்சு, ரொம்ப ரகசியமா ஒண்ணு சொல்லட்டுமா."

"என்னா."

"எனக்கு மாடு மேய்க்கறது பிடிக்கும். ரொம்ப நாளா மாடு மேய்க்கணும்னு ஆசை."

சேதுராமன் ரகசியக் குரலில் சொல்ல, மஞ்சு வாய்விட்டுச் சிரித்தாள்.

"ஏன் இப்படி?"

"எனக்கொரு வாத்தியார் இருக்காரு. பசங்க படிக்காட்டி, போடா, போய் மாடு மேய்க்கப் போங்கடா அப்படின்னு சொல்வாரு. நான் கொஞ்சம் நல்லா படிக்கற பையன். ஒரு தடவை கூட என்னைப் பார்த்து சொல்லலை. அவரு மத்த பசங்களை சொல்றபோது மாடு மேய்ச்சா எப்படி இருக்கும்னு நான் நினைச்சுப் பார்ப்பேன். இந்த ஊர்ல எங்க தெருவுல இருக்கற மாடுகளை நான் மெல்ல மேய்க்கலாம்னு ட்ரை பண்ணபோது கிட்டவராத முட்டிடும் அப்படின்னு சொல்லி விலக்கிடுவாங்க. மாடு மேய்க்கறது அப்படிங்கற விஷயம் என் கைக்கு கிடைக்காம ரொம்ப ஏக்கமாகவே இருந்தது. அதான் இந்த நாப்பத்தோரு வயசுல மாட்டுப்பண்ணை வச்சி மாடு மேய்க்கணும்னு தீர்மானம் பண்ணிட்டேன்."

"அட. அந்த மாதிரி வேற எதுனா ஆசை இருக்கா."

மஞ்சு கொஞ்சினாள்.

"இருந்தது. நானே பிறகு துடைச்சு எடுத்துட்டேன்."

"என்னா இருந்தது."

"சோன்பப்படி விக்கணும்னு ஒரு ஆசை இருந்தது."

மஞ்சு வயிற்றைப் பிடித்துக் கொண்டு குலுங்கக் குலுங்க சிரித்தாள்.

"என்னய்யா இது, ஏன் சோன்பப்படி விக்கணும்."

"அந்த மணி சத்தம், அந்த சோன்பப்படின்னு கூப்பிடறது, எதிர ஸ்வீட். அந்த சின்னவயசுல எனக்கு சோன்பப்படி சாப்பிடறதுக்கு கிடைக்காது. கேட்டா தரமாட்டாங்க. எதிர்க்க ஒரு ஜாடி நிறைய சோன பப்படி, விக்கலாம், எடுத்து எடுத்து சாப்பிடலாம். வேணுங்கறபோது மணி அடிக்கலாம். இல்லாதபோது அப்படியே தள்ளிகிட்டு ஊர் ஊரா சுத்தலாம். எவ்ளோ நல்ல வேலை. நான் சோன்பப்படி விக்க ணும்னு நினைச்சேன்."

மஞ்சு மறுபடியும் சிரித்தாள்.

குழந்தைகள் அப்பாவையும், அம்மாவையும் வினோதமாகப் பார்த்தனர்.

தொலைவிலிருந்து பார்த்த பண்ணை வேலை யாட்கள் "அம்மா குஷாலா இருக்கறாங்க. கொசு வலை, பெட்ஷீட்டுன்னு நிறைய விஷயம் கேட்டுட வேண்டியதுதான்."

"அம்மா குஷாலா இருக்கணும்னு இல்லை. ஐயா கிட்ட போய், இந்த மாதிரி கொசுவலை இருந்தா நல்லாயிருக்கும், படுக்கணும்னு கேட்டா சட்டுனு சரின்னு கொடுத்துடுவாரு."

"அப்படி இல்லைடா."

"ஐயா செய்யற எல்லாத்தையும் அம்மா ஒரு தட வைக்கு ரெண்டு தடவையா செக் பண்ணி, ஏன் கொசு வலை அப்படின்னு ஒரு கேள்வி கேட்டுட்டுதான் கொடுப்பாங்க. நேரடியா அம்மாவை கேட்டா தடங்கல் இல்லாத வாங்கிக்கலாமில்ல."

"ஆறு பக்கெட், ஆறு பாண்டு கேட்டேன். அம்மா நாலு பக்கெட் நாலு பாண்டுதான் கொடுத்தாங்க. ஐயா இருந்தா ஆறும் கிடைச்சிருக்கும்."

"ஆறு பக்கெட் தேவையே இல்லை. இருந்துதுன்னு வச்சுக்கோ பக்கத்துல இருக்கறவன் வாங்கிட்டு



போவான். அப்புறம் நாம திருப்பி எடுக்கறதுக்கு மறந்து போயிடுவோம். அது எங்களதுன்னு அப்புறம் சொல்வான். தேவையே இல்லை. நாலு பக்கெட், நாலு பாண்டு அம்மா சொன்ன கணக்கே போதும்."

அவர்கள் பேசிக்கொள்ள தொலைவே சேதுராம னும், மஞ்சுவும் மாடுகளை பார்த்தபடி மெல்ல பண்ணையைச் சுற்றி வந்தார்கள்.

"அப்புறம்... அப்புறம் வேற என்ன கனவு."

"இளவயசுக் கனவு இல்லை. ஒரு இருவது வயசுக் கனவு."

"அடேங்கப்பா. இருவது வயசுலயும் நீங்க கனவு தான் கண்டீங்களா. ஒழுங்கா படிக்கவும் இல்லை. வேலைக்கும் போகலைன்னு சொல்லுங்க" என்று மஞ்சு கேலி செய்ய சேதுராமன் அதைப் புறக்கணித் தார்.

"வேற என்ன கனவுன்னு கேட்கலையே."

"கேட்கறேன். என்ன கனவு?"

மஞ்சு மறுபடியும் கேட்டாள்.

"குதிரை ஏறி இளவரசர் மாதிரி போகணும். இந்த வஞ்சிக் கோட்டை வாலிபன் படத்துல எல்லாம் அப்ப டியே டைட் பேண்ட்டும் கவுன் மாதிரி ஒரு சட்டை யும், கழுத்துல முத்துமாலையும், காதுல தொங்கட்டா னையும் போட்டுக்கிட்டிருக்காங்களே அந்த மாதிரி நீளமுடி வளர்த்துகிட்டு இடுப்புல கைவச்சுகிட்டு கொங்கு நாட்டு இளவரசர் அப்படின்னு வரணும்னு ஆசை."

"எதனால அந்த மாதிரி. எதுக்கு சரித்திர காலத்துக் கும், புராண காலத்துக்கும் போறீங்க."

"இந்த காலத்துல லவ் பண்ண விடமாட்டாங்க. சரித்திர காலத்துல ஈஸியா லவ் பண்ணலாம் அப்

படின்னு ஒரு எண்ணம். அதைத்தவிர இந்தக் கனவுக்கு ஒரு பாட்டும் உண்டு."

"என்ன பாட்டு."

"சினிமாப்பாட்டு."

"அதான் என்னான்னு கேட்கறேன்."

"ரோஜா மலரே ராஜகுமாரி ஆசைகிளியே அழகிய ராணி அருகினில் வரலாமா. வருவதும் முறைதானா."

இம்முறை மஞ்சு சிரிக்கவில்லை. அவளுக்கு அது என்ன என்று தெரியும்.

அருகே வந்து அவர் தோளில் கைவைத்துக் கொண்டாள்.

"நீங்க ரொம்ப நல்லா பாடுவீங்க இல்ல. பாடுங்களேன்."

சற்றும் தயங்காமல் சேதுராமன் பாடினார்.

"ஏழை என்றாலும் ராஜகுமாரன்
ராஜா மகளின் காதல் தலைவன்
உண்மை இதுவன்றோ..."

என்று பெண் குரல் பாடுவதையும், தன் குரலில் சேதுராமனே பாடினார்.

"வானத்தின் மீதே பறந்தாலும்
காக்கை கிளியாய் மாறாது
கோட்டையின் உள்ளே நுழைந்தாலும்
ஏழையின் பெருமை உயராது..."

தொடர்ந்தார்.

ஆனால் வாழ்க்கை மாறிவிட்டது. அவருடைய கோட்டை, அவருடைய கொடி, அவருடைய சாம்ராஜ்ஜியம் என்று பெரிதாக வந்துவிட்டது.

இளவரசராக இருந்தவர் சக்ரவர்த்தி ஆனார். [illegible] சக்ரவர்த்தி என்று அவருக்கு போன வாரம் தான் பட்டம் கொடுத்தார்கள். ஈரோடு நகரத்தின்



கனவான் என்று அவரைச் சிறப்பித்தார்கள். மஞ்சுவை முதல் லேடி என்று மரியாதை செய்தார்கள். நீண்ட செங்கோலும் கொடுத்து அரசனைப் போல உட்கார வைத்து அருகே மஞ்சுவையும் உட்கார வைத்து படபடவென்று கைதட்டினார்கள்.

சிறுதொழில் என்ற அளவிலே இருந்து கொண்டு ஏற்றுமதி பத்து கோடிக்கு செய்தவர் என்ற புகழை அவர் தட்டிக்கொண்டு போனார்.

படுக்கை விரிப்புகள், மேஜை விரிப்புகள், தலையணை உறைகள், திண்டு உறைகள், சோஃபா உறைகள், நாப்கின், சுருட்டி வைக்கின்ற துணி என்று பல்வேறு விஷயங்களை அவர் மிக நறுவிசாகச் செய்தார்.

"என்னய்யா, அவன் மட்டும் அப்படியொரு எக்ஸ்போர்ட் ஆர்டரை பிடிக்கறான். இந்த ஊர்ல வேற துணி தைக்கிறவனே இல்லையா, ரெடிமேட் ஆளே இல்லையா. அவனுக்கு மட்டும் கிடைக்குதே எப்படி"

அவர்கள் குமுறலாய் கேட்பார்கள்.

இந்தக் கேள்வியை அவரிடம், அவருக்கு மரியாதை கொடுத்த அன்று, ஒரு நிகழ்ச்சியாகவே கேட்கப்பட்டது.

அவர் வாய்விட்டுச் சிரித்தார்.

"மற்றவர்கள் பொறாமைப்படும்படி நான் உயர்ந்திருக்கிறேன் என்று நீங்கள் சொல்ல எனக்கு பெருமையாக இருக்கிறது. ஒரு வேளை என்னுடைய இந்த பெருமை கூட மற்றவருக்கு பொறாமையை கொடுத்து விடக்கூடும்" என்று அவர் சொல்ல ஜனங்கள் வாய் விட்டுச் சிரித்தார்கள்.

"ஆயினும் அதுபற்றிக் கவலைப்படாமல் இதில் எந்த ரகசியமுமில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது ரகசியமாயின் அதை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இதற்கு [illegible]

சென்ஸ் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். ரசனை உணர்வு என்று நாம் தமிழிலே அதை குறித்துக் கொள்ளலாம். நம் தேசத்தவருக்கு இன்ன நிறம் பிடிக்கும் என்று ஒன்றை கண்டுகொள்ள வேண்டியிருக்கிறது. அதை அதிகமாக மேன்மைப் படுத்த வேண்டியிருக்கிறது. அதாவது பிங்க் என்ற நிறம் ரோஜாப்பூ வர்ணம் ஆங்கிலேயர்களுக்கு மிகவும் பிடிக்கும். அவர்களுக்கு வெள்ளை அதிகம் பிடிக்காது. மூடிவைக்கின்ற விஷயத்திற்கு மட்டுமே வெள்ளை வைத்துக் கொள்வார்கள். நடுநடுவே கருப்பு வரிகள் ஓடினால், நீலம் இருந்தால் அவர்கள் மிகவும் விரும்புவார்கள். அதற்குப் பின்னணியில் மஞ்சள் பூக்களை வைத்துப் பாருங்கள். அதை மேஜை விரிப்பிலே ரொட்டி சுற்றுகிற ஒரு துணியாக இருப்பின் நிச்சயமா அவர்கள் கை அந்த ரொட்டிக்கு போகும். ரொட்டி புதுமையாக இருப்பது போலத் தோன்றும். ஒரு பழைய ரொட்டியை அந்தத் துணியிலே சுற்றி வைத்தாலும் அந்த ரொட்டி தின்றுவிடப் படும். காரணம், ரொட்டியின் மேன்மையல்ல. அந்தக் கலரின் சொகுசு, அந்த நிறத்தின் தன்மை அதுதான், அந்தக் குறிப்பிட்ட துணி அதிகமான அளவில் விற்பதற்குக் காரணம். நான் அப்படித்தான் விஷயங்களை அணுகுவேன்.

அமெரிக்கருக்கு என்ன பிடிக்கும் என்று ஆராய்வேன். ஜப்பானியருக்கு எந்த வர்ணம் நன்றாக இருக்கும் என்று நினைப்பேன். அதிகம் பூக்கள் போட்ட, பொடி பூக்கள் போட்ட, சிறுசிறு பூக்கள் போட்ட, இலைகளோடு கூடிய பூக்கள் போட்ட, துணிகளை ஜப்பானியர்கள் விரும்புகிறார்கள். மத்திய கிழக்கில் வாழும் அராபியர்களுக்கு என்ன நிறம் பிடிக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்."

அவர் கூட்டத்தைப் பார்த்துக் கேட்டார்.

கூட்டம் சற்று அமைதியாக இருந்தது.



"சொல்லுங்கள். உங்களைத்தான் கேட்கிறேன் உங்களுக்கும் உலகம் தெரியுமல்லவா. பேப்பர் படிக்கிறீர்கள் அல்லவா. இங்குள்ள பலபேர் உலகத்தைச் சுற்றி வந்திருக்கிறீர்கள் அல்லவா சொல்லுங்கள்."

"பச்சை" என்று ஒருவர் சொன்னார்."

எல்லோரும் ஆமாம்... ஆமாம் என்றார்கள்.

"இல்லை. தவறு. பச்சை நிறம் அவர்களுக்கு மதசார்புடையது. கொடி சார்புடையது. தேசம் சார்புடையது. அந்த நிறத்தில் படுக்கவோ உருளவோ அதை விரித்து வாய் துடைக்கவோ அவர்கள் விரும்புவதில்லை. எனவே அவர்களுக்கு பிடித்த நிறம் வெண்மை. அப்பழுக்கற்ற வெண்மை. இதை கண்டு பிடிக்கறதுக்கு எனக்கு ஒரு வருஷமாச்சு. கட்டம் கட்டமாக வட்டம் வட்டமாக விதவிதமான டிசைன் எடுத்துகிட்டு போயிட்டு திரும்பி வந்துட்டேன். அங்க இருக்கற நம்ம ஆளுங்க ஜப்பான்காரன், சீனாக்காரன் வாங்கறாங்களே தவிர மிடில் ஈஸ்ட் ஆளுங்க வாங்கலை. ரெண்டு ட்ரிப் போயிட்டு வரும்போது நான், மூணாவது ட்ரிப்லதான் ஒரு ஒன்றரை லட்சரூபாய் செலவு பண்ண பிறகுதான் இது தெரிஞ்சது.

வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் அனுபவம் வேண்டும். மற்றவரைக் கூர்ந்து கவனித்தல் வேண்டும். கூர்ந்து கவனித்து, சிந்தித்து தெளிவாக்கி அதைச் செயல்படுத்த வேண்டும். மிக விரைவாக செயல்படுத்த வேண்டும். மற்றவரை விட முன்னதாக செயல்படுத்த வேண்டும். செயல்படுத்துவது என்கிற விஷயத்திற்கு, கூர்ந்து கவனிப்பது என்கிற விஷயத்திற்கு, கூர்ந்து கவனித்ததை திட்டமாக்குவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும் தெரியுமா நண்பர்களே."

அவர் கூட்டத்திற்கு நடுவே நின்று உரையாற்றினார்.

பல தமிழ்ப் பிரமுகர்களும், இளைஞர்களும், நிர்வாகத் திறமை பெற்ற யுவதிகளும் அவரைக் கூர்மையோடு பார்த்தார்கள்.

"அப்படி கூர்மையாக கவனிப்பதை, அதனால் ஏற்பட்ட தெளிவை யாரோடும் பகிர்ந்து கொள்ளாதீர்கள். கூர்மையாக கவனிக்க வேண்டுமென்றால் தனியாக இருங்கள். தெளிவாக சிந்திக்க வேண்டுமென்றால் தனியாக இருங்கள். சிந்தித்ததை செயல்படுத்த வேண்டுமென்றால் தனியாக இருங்கள். என் வாழ்க்கையில் நான் மிகப் பெரியதாக மதிப்பது ஒரேயொரு பழமொழி. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல். தீதும், நன்றும் பிறர்தர வாரா. பார்ட்னர்ஷிப் என்ற பெயரில் மூன்று பேர், நான்கு பேர் உட்கார்ந்து கொண்டு, அவர் காக்கையின் நிறம் கருப்பு என்று சொல்கிறார் என்பதாலேயே இன்னொரு பார்ட்னர் அது வெளுப்பு என்று சொல்வதும், மூன்றாவது பார்ட்னர் அது கருப்பும் இல்லை வெளுப்பும் இல்லை என்று சொல்வதும், நான்காவது பார்ட்னர் ஏன், காக்கை பச்சையாக இருக்கக் கூடாதா என்று கேள்வி கேட்பதும் நடந்து விடுகிறது. ஆக, நான்கு பார்ட்னர்கள் என்பவர்கள் நான்கு பைத்தியக்காரர்கள்."

கூட்டம் சலசலத்தது. அவர் அமைதியாக அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"நான் சொல்வது உங்களுக்கு விருப்பமில்லாததாக இருக்கலாம். எல்லா இடத்திலுமே இது இப்படித்தான் நேருகிறது என்று நான் சொல்லவில்லை. சிலவற்றிற்கு விதிவிலக்கு உண்டு. நான்கு பார்ட்னர்கள் சேர்ந்து நன்றாக நடத்துகின்ற விஷயங்களும் உண்டு. இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இப்படி அமைவது மிகமிக அரிது. எனவேதான் பார்ட்னர் என்ற சுமையை ஏற்றுக் கொள்ளாமல் அவருடைய வார்த்தையையே



கேட்கவேண்டும் என்று வேறொருவருடைய கையைப் பிடித்துக் கொள்ளாமல், இன்னொருவருடைய உத்தரவைக் கேட்டே நான் செயலாற்ற வேண்டுமென்று தடையில்லாமல், தன்னந் தனியாக செயலாற்றுவது என்கிற சந்தோஷத்திற்கு நான் வந்தேன். வெற்றி பெற்றவனாக, கனவானாக நீங்கள் இங்கே எனக்கு கௌரவமளித்தீர்கள். நான் அப்படி வெற்றி பெற்றதிற்குக் காரணம் நான் தனியனாக இருப்பது. தன்னந்தனியனாக போராடுவது.

மனிதன் தனியனாக இருந்துவிட முடியுமா?

இல்லை. முடியாது என்று எனக்குத் தெரியும். மனிதன் கூடிவாழும் இயல்பினன். இதோ என்னுடைய மனைவி எனக்கு பங்குதாரராக, பார்ட்னராக என் குடும்பத்திலும், என்னுடைய அலுவலகத்திலும் இருக்கிறாள். இப்படி வாழ்க்கையில் பங்குதாராக இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாலேயே என்னுடைய கம்பெனியையும் அவர் கவனித்துக் கொள்கிறார். மனைவி என்கிற பங்குதாரர் இருக்க, வளர்ந்த பிறகு மகன் என்கிற, மகள் என்கிற பங்குதாரர் இருக்க, அவர்கள் அல்லாது வேறு ஒருவரை நீங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் உண்டா என்று சிந்தியுங்கள். ஆம் எனில் அது உங்கள் விருப்பம். என்னைக் கேட்டால் தனியனாக தன்னந்தனியாக ஒரு தொழிலை ஆரம்பித்து உங்கள் போக்கிலே நீங்கள் போய் ஜெயிப்பதே நல்லது. அதுவே, வெற்றியின் ரகசியம். அதுவே வெற்றியின் சூட்சமம் என்று சொல்லி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்."

"தன்னந்தனியா நீங்க எடுக்கற ஒரு முடிவு தப்பா வராதா ஸார்."

ஒரு இளைஞன் கேட்டான்.

"வந்திருக்கிறது."

"ஸார் இன்னொரு கேள்வி."

அவர் பேசி முடிப்பதற்குள் இன்னொருவன் எழுந்தான்.

"முடிச்சுடறேண்ப்பா."

"இல்லை ஸார். அது தொடர்பா ஒரு கேள்வி. தன்னந்தனியனாக முடிவெடுத்து தோற்று வருத்தப் பட்டிருக்கிறேன் என்று சொல்கிறீர்கள். என்னுடைய பேச்சைக் கேட்டிருந்தால் இந்தத் தவறு நேர்ந்திருக் காது என்று உங்கள் நண்பர் எவரேனும் சொல்ல, அப்பொழுது உங்கள் வருத்தம் பல மடங்கு அதிகமா யிருக்கும் அல்லவா. தனியனாக நின்று தோற்றுப் போனதைவிட இவர் பேச்சைக் கேட்காமல் போனோமே, இவரை ஆலோசிக்காமல் போனோமே, அந்த விஷயத்தைப் பற்றி அவரிடம் விவாதிக்காமல் போனோமே என்று நீங்கள் வருத்தப்பட்டிருக்கிறீர் களா" என்று கேட்க சட்டென்று இல்லை என்று சொன்னார்.

"எனக்குத் தெரியவில்லை. நான் தோற்றுப் போனேன். என் தெளிவு தவறு. நான் தோற்றுப் போனேன். அவர்கிட்ட கேட்டிருந்தா, இவர்கிட்ட கேட்டிருந்தா அப்படின்னு எல்லார்கிட்டயும் எல்லாத் தையும் கேட்டுட்டு உட்காரரது என் வேலையில்லை. எனக்கு கேட்பதற்கும் விருப்பமில்லை. தோத்துட்ட பிறகு எங்கிட்ட கேட்டிருந்தா நான் இப்படி சொல்லி யிருப்பேனே அப்படின்னுவாங்க. நாம் நிஜமாவே சங் கடத்துல இருக்கும்போது போய் கேட்டால் சிலருக்கு சொல்ல மனமிருக்கும். சிலர் தவறாக வழிகாட்டு வார்கள். சிலர் வழிகாட்ட மாட்டேன் என்று மறுத்து விடுவார்கள். பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல். நான் இடறிவிழுந்து தெரிஞ்சுக்கறேன் ஸார். என்ன. காஸ்ட்லி மிஸ்டேக். பரவாயில்லை. அடுத்த தடவை இந்த மிஸ்டேக் செய்



யவே மாட்டேன். எனக்கு போதிப்பவர் சொல்வதை விட, மிக அற்புதமாக என் தோல்வியின் மூலம் நான் கற்றுக்கொள்வேன். உண்மையாக மற்றவரிடமிருந்து கற்றுக்கொள்வதை விட நான் என் தோல்வியைப் பற்றி நான் பயப்படுவதேயில்லை. தோல்வி வெற்றிக்கு முதல்படி என்பது, நான் என் தோல்வியிலிருந்து கற்றுக்கொள்வதே அதிகம். அனுபவத்தில் அறிந்து கொண்ட சமாச்சாரம். ஒரு லட்சம் ரூபாய் நஷ்டமான இடத்தில் நான் இருபத்தைந்து லட்சரூபாய் சம்பாதித்து நேர் செய்து விடுவேன். ஒரு லட்சம் நஷ்டம் என்பது எனக்கு மறந்தே போயிருக்கும்" என்று சொல்ல கூட்டம் கைதட்டியது.

"என்னய்யா, தான் புடிச்ச முயலுக்கு மூணே காலுன்னு பேசறான்."

"இல்லை. அந்தாள் ஒரு கொள்கைய வகுத்துகிட்டு அந்த கொள்கையையே சரியா கடைபிடிச்சுகிட்டு வரான். அவ்ளோதான். உனக்கு பிடிக்கலைன்னா விட்டுரு. அதுக்காக மூணே கால், நாலே கால்னு அவரைப்பத்தி பேசாத."

யாரோ கீழே சண்டை போட்டுக் கொண்டிருந் தார்கள்.

ஆனால், ஒட்டுமொத்தமாக அவர் ஜெயித்து விட்டார் என்பதை அங்கீகரித்தார்கள். மனமார பாராட்டினார்கள்.

"உங்களுடைய ஜெயிப்பினால், உங்களுடைய வளர்ச்சியினால், உங்களுடைய முன்னேற்றத்தினால் ஈரோட்டினில் கணிசமாக சிலர் வெற்றி பெற்றிருக் கிறார்கள். உங்கள் வெற்றியை, வெற்றியின் கனியை அவர்களும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சாயம் துணி வியாபாரிகளும், தையற்காரர்களும், சாயம் தோய்ப்பவர்களும், தறிக்காரர்களும், நூல் நூற்போர்

களும், பேக்கிங் செய்கின்ற தொழிலாளர்களும் என்று பல்வேறு பேர் உங்களுடைய வெற்றியினால் பிழைத்துக் கொண்டு வாழ்க்கையை சந்தோஷமாக, மலர்ச்சியாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பத்தாயிரம் பேருக்கு எளிதாக நீங்கள் உணவளிக்கிறீர்கள் என்பது மிக சந்தோஷமான விஷயம். நீங்கள் தொடர்ந்து பல வெற்றிகளை பெற வேண்டும் என்று நாங்கள் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்" என்று வாழ்த்த கூட்டம் கலைந்து சாப்பிடப்போனது.

அன்று இரவு பூசணியும், தேங்காயும் வேறு சில விஷயங்களும் கொண்டு வந்து மஞ்சு அவரை வாசலில் நிற்கவைத்து திருஷ்டி கழித்து வெளியே போட்டாள். தேங்காய் சிதறியது. வீட்டின் பின்புறம் மிளகாய் காரல் எகிறி எகிறி அடித்தது.

அவர் கண்ணும் மூக்கும் எரிய இருமினார்.

"திருஷ்டி... திருஷ்டி போவட்டும். இருமினா ஒண்ணும் தப்பில்லை போவட்டும்" என்று உரக்க மஞ்சு கத்தினாள்.

"எத்தினி பேர் ஹா...ன்னு பார்த்தாங்க."

"சரி. உன்னையும்தான் பார்த்தாங்க. உனக்கு திருஷ்டி கழிக்க வேணாமா."

"உங்களுக்கு திருஷ்டி கழிச்சா எனக்கு கழிச்சாப் போல. ஒன்னும் ஆவாது."

கைகால் அலம்பிக் கொண்டாள். ஆனால், மறுநாள் காலை அவளுக்கு ஜுரம் கொதித்தது. கண் திறக்க முடியாமல் அனர்த்தினாள்.

சேதுராமன் பதறிப்போனார். டாக்டரை வீட்டுக்கு வரவழைத்தார்.

"ஒண்ணுமில்லை அலர்ஜி. நெஞ்சு முழுக்க சளி இருக்கு. தொண்டையில் புண்ணு இருக்கு. அதனால



ஜுரம் வந்திருக்கு. நான் ஆண்டிபயாடிக் ஆரம்பிச்சுடறேன். டக்குனு குறைஞ்சுடும். ரெஸ்ட் எடுத்துக்கட்டும்."

டாக்டர் போன பிறகு அம்மா மெள்ள எட்டிப் பார்த்தாள்.

"கூப்பிட்டாங்க போறியா, உன் வரைக்கும் போயேன். நீ ஏன் நூறு ஆம்பளைங்க இருக்கற இடத்துக்கு கூட்டிகிட்டு போற. மேடையில ஏத்தி உட்கார வச்சு ராஜா, ராணின்னு வேஷம்போட்டு தேவை தானா அது. உனக்கு ஒண்ணு சொல்லித்தரேன். நல்ல பொண்டாட்டி கிடைக்கறது கஷ்டம். நல்ல பொண்டாட்டி லட்சணமா இருக்கறது அதைவிட கஷ்டம். நல்ல பொண்டாட்டி லட்சணமா இருக்கறவ, தொழிலுக்கு உடந்தையா, துணையா இருக்கறதுங்கறது எந்த ஊர்லயும் இல்லாத விஷயம். எத்தனையோ உறவுக்காரங்க மஞ்சுக்கு என்ன, அவ ராணின்னு பேசிக்கிட்டிருக்காங்க. இவளைக் கொண்டு போய் மேடையில ஏத்தலாமா. டப்புனு அடிச்சுடுச்சு பார்."

சேதுராமன் அம்மாவின் பேச்சை மனதில்வைத்துக் கொண்டு, "ஸாரி மஞ்சு" அவள் காதோரம் கிசுகிசுத்தார்.

"நல்லாயிருக்கு போங்க. அம்மா சொன்னதை மனசுல வச்சுகிட்டு எங்கிட்ட பேசறீங்களா. மேடையில ஏறினதும், நீங்க நின்னு பேசினதும், அவன் கேள்வி கேட்டதும், அதுக்கு நீங்க பதில் சொன்னதும் எவ்ளோ நல்லா இருந்தது தெரியுமா. நான் ரொம்ப சந்தோஷமா அனுபவிச்சேன். எவளுக்கு கிடைக்கும் இது. அந்த திருஷ்டியெல்லாம் இல்லை. மிளகாய குமுட்டியில போட்டுட்டு அது சரியா நிக்குமோ நிக்காதோன்னு பயந்து ரெண்டு காதையும் பிடிச்சு தூக்கிகிட்டு கொல்லைப்புறம் ஓடினேன். பொக்குனு மூஞ்சியில அந்தக் கார நெடி அடிச்சது. அப்பவே தெரியும். ஜலதோஷம் பிடிக்கப் போவுதுன்னு நினைச்

சேல். அப்பவே மூச்சுத் திணறா மாதிரி இருந்தது. கண்ணைத் திறக்க முடியலை. உடனே இருமல் மருந்து சாப்பிட்டிருந்தா சரியாகியிருக்கும். நாளைக்கு காலையில எழுந்து நடமாடிடுவேன். யாராவது பையனை அனுப்பி ஹோட்டல்லேர்ந்து சாப்பாடு வாங்கிட்டு வரச்சொல்லுங்க. அம்மா நான் சமைக்கறேன்னு ஆரம்பிப்பாங்க. அவங்களால முடியாது.”

அன்று எல்லாவித உணவுகளும் வெளியிலிருந்து வந்தன. குழந்தைகள் ஆவலோடு உண்டார்கள்.

உணவு ருசியாக இருந்ததுபோல் பட்டதே தவிர வயிறை லேசாகப் பிரட்டியது. தொண்டை எரிந்தது.

பிற்பகல் வரை பாராட்டுப் போன்கள் பேசிக் கொண்டேயிருக்கும்படியாயிற்று. லேசாக உறங்கிய பிறகு மறுபடியும் எழுந்து சரக்கு எங்கே போக வேண்டும், இன்னும் எத்தனை நாளில் போகும் என்று தொழிற்சாலைக்குள் புகுந்து ஆராயத் தொடங்கினார்.

டூப்பியான் சில்க் என்று ஒரு துணி. அந்தத் துணியில் திரைச்சீலைகள் தைப்பதற்கு ஆர்டர் வந்தது. இது சாதாரண விஷயமில்லை. பன்னிரெண்டாயிரம் மீட்டர் டூப்பியான் சில்க்ஸில் திரைச்சீலைகள் தைக்க வேண்டும். அது தவிர டெரிகாட்டன் துணியில் படுக்கை விரிப்புகள் ஓரம் அடிக்க வேண்டும். அதே துணியில் தலையணை உறை செய்ய வேண்டும். இது அத்தனையும் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். சென்னையிலுள்ள கொரியரிடம் சரக்குகளை கொடுத்துவிட்டால் கண்டெய்னரில் போட்டு அவர்கள் அனுப்பி விடுகிறார்கள். இது அமெரிக்காவுக்குப் போன பத்தாவது நாளில் சேதுராமன் வங்கி கணக்கில் காசு வந்து சேர்ந்துவிடும். துணிகள் நன்றாக இருந்தால் இன்னும் அதிகமாக ஆர்டர் தருவார்கள்.

அமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய கடை நிறுவனர் டாரத்தி அம்மாள் என்று பெயர். ஐம்பது வயது. அவ



ருக்கு சேதுராமன் மீது மிகுந்த நம்பிக்கை. நல்ல சரக்கு கொடு, நான் கூடவே காசு தருகிறேன் என்று சொல்லி அதிசயமாக நடத்துகிறார்.

நான் இங்கு வந்து உன் சரக்கை சோதனை செய்யும்படி வைக்காதே. நீ ஒரு ஆள் போட்டு ஒவ்வொரு சரக்கையும் அங்குலம் அங்குலமாக சரிபார்த்து அனுப்பு என்று சொல்ல, டாரத்திக்கு அனுப்ப வேண்டிய முதல சரக்கை மஞ்சுவும் அவருமே சோதனை செய்து அனுப்பினார்கள். அற்புதம் என்று டெலக்ஸ் வந்திருந்தது.

ஒவ்வொரு சரக்கையும் சோதித்தேன். இரண்டே இரண்டு துணிகளைத் தவிர மற்ற எதிலும் தொந்திரவு இல்லை. அந்தத் துணிகளும் பேக் செய்யும்போது கிழிந்திருக்கக்கூடும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. எனவே அதையும் குறைக்காமல் முழு சரக்குக்கான தொகையை இன்று உன் வங்கிக்கு இ மெயிலில் அனுப்புகிறேன் என்று சொல்லியிருந்தார்.

அறுபது சதவீத லாபம். பத்து ரூபாய்க்கு வாங்கி பதினாறு ரூபாய்க்கு விற்றது. இரண்டு ரூபாய் இதர செலவுகள் போக நான்கு ரூபாய் நிச்சயமாக நிற்கும். அந்த நான்கு ரூபாய் நிற்பது பார்த்துதான் வங்கியில் பெரிய கடன் கொடுத்தார்கள். வங்கியில் கடன் கொடுத்ததினால்தான் இப்பொழுது இருக்கிற இந்த தொழிற்சாலை வீட்டை வாங்க முடிந்தது. பெரும் கூடமாக கட்டிக் கொள்ள முடிந்தது. மேஜைகள் வாங்கி போட முடிந்தது. இன்னும் ஆர்டர்கள் தேட முடிந்தது.

ஆனால், சேதுராமனுடைய ஸ்பெஷாலிட்டி மேஜை விரிப்புகள். இந்தக் கலர் நூலில் இந்த விதமாக நெய்யப்பட்டு, இந்த விதமான டிஸைனாக கொண்டு வரப்பட்டு அந்த டிஸைனை எப்படி தைப்பது என்று ஆறுவிதமாக உத்தரவுகள் தருவார்கள். இவர் நூல்

வாங்கி அந்த நூலை அவர்களுக்கு அனுப்பி, அந்த நூலை சரியென்று சொன்னதும், ஒட்டுமொத்தமாக வாங்கி, வாங்கியதை சாயம் தோய்த்து, சாயம் தோய்த்ததை பாவு போடச் சொல்லி பாவு போட்டதை நெய்யச் சொல்லி நெய்து வந்த சாம்பிளை மறுபடியும் அனுப்பி, சாம்பிள் சரியென்று அவர்கள் உத்தரவு சொல்ல தொடர்ந்து விசைத்தறியில் நெய்யச் சொல்லி விசைத்தறியில் நெய்து வந்ததும் அங்குள்ள பெண்களை உட்கார வைத்து அளவு கொடுத்து மேஜை விரிப்புகள் தைக்கச் சொல்லி, அந்த மேஜை விரிப்புக்கு உண்டான நாப்கின்களை ஏற்பாடு செய்து ஒவ்வொரு மேஜை விரிப்புக்கும் ஆறு ஆறு நாப்கின்கள் போட்டு தனித்தனியாக பிளாஸ்டிக் கவரில் போட்டு அமெரிக்காவுக்கு அடுத்த சரக்கு அனுப்ப, டாரத்தி அக மகிழ்ந்த போனார்.

அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வரும்பொழுது சென்ட் பாட்டிலும், பவுடர் சோப்பும் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்களும் வாங்கி வந்து சென்னையில் அவரைச் சந்தித்து அந்தப் பரிசுகளைக் கொடுத்தார். தொடர்ந்து வேறு என்ன செய்ய முடியும் என்று விவாதித்தார்.

படுக்கை விரிப்புகளும், திரைச் சீலைகளும், சோஃபா கவர்களும், கை துடைக்கும் டவல்களும், பெட்ஷீட்டும், டர்க்கி டவலும், கவுனும் கிட்டத்தட்ட ஆறு கண்டெய்னர்கள் முழுக்க இவருடைய துணியே அமெரிக்காவுக்குப் போகும்.

டாரத்தி ஆர்டர் கொடுத்துவிட்டுக் கவலைப் பட்டாள்.

“உன்னால் முடியுமா. நீ திணறுவாய் போல் தெரிகிறது. நீ ஏன் கவலையாகி விட்டாய்” என்று கேட்க “நிச்சயம் முடியும்” என்று உறுதி சொல்லி பதினோரு



மாதங்கள் மிகக் கடுமையாக உழைத்தார். இரவு பகல் பார்க்காமல் அலைந்தார்.

டர்க்கி டவல் நெசவு சரியாக இல்லை. கையில் வாங்கிய பிறகுதான் தெரிந்தது. அப்படியே திருப்பி அனுப்பினார். அவன் காசு கையில் இல்லை என்று சொன்னான்.

“ஒன்று ஞாபகம் வைத்துக் கொள். என்னை ஏமாற்றினால் உன்னை கடவுள் ஏமாற்றுவார்” என்று சத்தம் போட்டு வந்தார்.

அதேபோல் ஆயிற்று.

அவன் பயந்து போய் மன்னிப்பு கேட்டான். காசு கொடுக்க முடியாது. ஆனால் வேறு சரக்கு தந்து விடுவதாகச் சொன்னான்.

அவனுக்கு சிறிதளவு காசு உதவி செய்ய அவன் மறுபடியும் நல்ல சரக்காக கொண்டு வந்து கொடுத்தான். பிறகு உண்மையான மனிதனாக மாறினான். அவரைச் சுற்றி ஒரு நல்ல பட்டாளம், எது சொன்னாலும் மிகச் சரியாக செய்கின்ற பட்டாளத்தை சேதுராமன் ஏற்படுத்தினார். அவர்களுக்கு துன்பம் வந்தபோது கூடவே நின்றார்.

அவர் நள்ளிரவில் துணிகளுக்கு நடுவே தூங்கினார். பல் தேய்த்துக் கொண்டே கடையைச் சுற்றி வந்தார். சாப்பாட்டையும் துணிகளுக்கு நடுவே உட்கார்ந்தபடி மற்றவர்கள் வேலை செய்யும் போதே சாப்பிட்டபடியே கவனித்துக் கொண்டிருந்தார்.

“ரொம்ப தொந்திரவு பண்ணிக்கறீங்கப்பா. இப்படி வேலை செய்தீங்கன்னா பைத்தியம் பிடிச்சுட போகுது.” மஞ்சு சொல்ல அவர் மஞ்சுவையே உற்றுப் பார்த்தார்.

“மஞ்சு நாம ஏழையா, பணக்காரர்களா.”

"ரொம்ப ஏழையும் இல்லை. பெரிய பணக்காரங்
களும் இல்லை."

"நாம பணக்காரங்க ஆவனும்னு உனக்கு எண்ணம்
இருக்கா, இல்லையா."

"இருக்கு."

"சும்மாயிரு மஞ்சு. பணக்காரங்க ஆகறதுக்கு இது
தான் நேரம். இந்த ஒரு வேலையை நான் கஷ்டப்பட்டு
செய்தேன்னா பணக்காரங்க இடத்துக்கு நிச்சயமா
வந்துடுவேன்."

"எப்படி சொல்றீங்க."

"இதுல வர லாபம். நான் வேற ஏதாவது வாங்கிடு
வேன். நல்ல நிலைமைக்கு வந்துடுவேன். இன்னொரு
ஃபாக்டரி ஆரம்பிச்சுடுவேன். முதல் சரக்கு எப்படி
அப்பழுக்கில்லாத டாரத்திகிட்ட போச்சோ, அதே
போல இதை இன்னும் கவனமா செய்து இன்னும்
நம்முடைய பெருமைய உயர்த்திக்கணும். சேதுராமன்
கிட்ட எது கொடுத்தாலும் சரியா செய்வான் அப்ப
டின்ற நம்பிக்கை டாரத்தி மூலமா நிறைய பேருக்கு
பரவணும். ஒரு நாலு பேர் டாரத்தி அம்மா மாதிரி
கிடைச்சாங்கன்னாக்க இந்த ஈரோடுல என்னை அடிக்
கறதுக்கு ஆள் இல்லை. அதனால இந்த பதினோரு
மாசம் கண்குத்தி பாம்பாத்தான் வேலை செய்யணும்."

எல்லா இடத்திலும் நூறு ரூபாய் சம்பளம் என்றால்
இங்கே தைக்கிற பெண்களுக்கு நூற்றியிருபது ரூபாய்
சம்பளம். எல்லா இடத்திலும் டீ மட்டும் கொடுப்பார்
கள். ஆனால், இவர் மத்தியான சாப்பாடும் போடு
வார். சாப்பிட்டு கொஞ்ச நேரம் தூங்குங்க என்று
சொல்வார். காலைல எட்டு மணிக்கு வந்திருங்க
என்று சொல்வார். மத்தியானம் ஒன்றே கால் மணிக்கு
ஷட்டரை இழுத்து கடையை மூடி விடுவார்கள்.
உள்ளுக்குள்ளே சாப்பாடு பரிமாறுவார்கள்.



ஒன்றே முக்காலுக்கு சாப்பாட்டுக் கடையை
மூடித்து விடுவார்கள்.

ஒன்றே முக்காலிலிருந்து ரெண்டே முக்கால் வரை
பெண்களும், ஆண்களும், பையன்களும் ஏன் அவரும்
கூட அந்த ஃபாக்டரியிலேயே அயர்ந்து தூங்குவார்கள்.
மூன்று மணிக்கு டீ குடித்து மறுபடியும் வேலை
ஆரம்பமாகும். இரவு ஏழு வரை பெண்கள் அயராது
உழைப்பார்கள். ஏழு மணிக்கு மேல் பெண்களை
அனுப்பிவிட்டு ஆண்களை வைத்துக் கொண்டு எட்டு
எட்டரை வரை வேலை செய்து விட்டு, பிறகு எட்டரை
மணிக்கு ஆண்களையும் அனுப்பி விடுவார். மறுநாள்
காலை எட்டு மணிக்கு எல்லோரும் வந்துவிடுவார்கள்.
இங்கு வந்த பிறகே டீ குடிப்பார்கள்.

அங்குள்ள ஹாலில் டேப்ரிக்கார்டரை வைத்து அங்
கங்கே ஸ்பீக்கர் வைத்து விதம்விதமான கேசட்டுகள்
போட்டு அவர்கள் வேலை செய்யும்போது பாட்டு
கேட்கும்படியான ஒரு சுமூகமான சூழ்நிலையை
ஏற்படுத்தினார்.

"இந்த இடம் கொஞ்சம் நாறுதுங்கய்யா" யாரோ
சொன்னவுடனே அந்த இடத்தில் சாக்கடையை
சுத்தம் செய்யச் சொல்லி தரையை மெழுகி நாற்றம்
வெளியே வராத படிச் செய்து நாற்றமல்ல வாசனை
யாகவே ஹால் இருக்கும்படி பார்த்துக் கொண்டார்.

தீபாவளிக்கு ஒரு நாள் தாங்க லீவு. பொங்கலுக்கு
ஏழு நாள் லீவு தரோம், ஒரு வாரம் அதுக்கு மேலே
கேட்காதீங்க என்று சொல்லி பொங்கலுக்கு அத்தனை
பேரையும் அழைத்து வேட்டி, சட்டை கொடுத்து,
புடவை, ரவிக்கை கொடுத்து, கையில் காசும்
கொடுத்து, அனுப்பி மொத்தத்தையும் வேறு இடத்திற்கு
மாற்றி வெள்ளை அடித்து, மரச்சாமான்களை சரி
செய்து பழுது பார்த்து, புத்தம் புது பொலிவாய்
இருக்க, டாரத்தியின் சரக்குக்குண்டான காசு மறு

...டிவும் அந்த போன பலாச் சுளையாய் வந்து மடியில் விழுந்தது. கடனை அடைத்தார். மறுபடியும் கடன் வேண்டுமென்று கேட்டார்.

பணம் கொடுப்பதற்கு தயாராக தொடை தட்டி இருந்தது. இந்த முறை அவர் திருமண மண்டபம் வாங்கினார்.

கல்யாண மண்டபம் வாங்கியதில் மஞ்சுவுக்கு ரொம்ப சந்தோஷம்.

"என்ன பேர் வைக்கப் போறீங்க, கல்யாண மண்டபத்துக்கு"

மஞ்சு இடுப்பில் கைவைத்து சேதுராமனைப் பார்த்து ஆவலாக கேள்வி கேட்டாள்.

மஞ்சுவா சேதுராமன் கல்யாண மண்டபம் என்று சொன்னதும் பாய்ந்து அவரை அணைத்துக் கொண்டாள். கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்தாள்.

"அவ்வளோ கஷ்டப்பட்டு உழைக்கறீங்களே என்னு கேட்டேன். இன்னிக்கு கேட்கலை. அத்தினி கஷ்டப் பட்டு உழைச்சாதான் இந்த இடத்துக்கு வரமுடியும். இப்படி ஒரு இடம் வாங்க முடியும். இப்படி ஒரு இடம் வாங்கி அதுக்கு நம்ம பேரு வைக்கறபோது உண்டான சுகம், உண்டான சந்தோஷம் அது ரொம்ப தனி."

"இப்போ வாங்கின கல்யாண சத்திரம் உள்ளே நிறைய ரிப்பேர் பண்ணணுமே. சரியா பராமரிக்காம லேயே விட்டுருக்காங்க. எப்படி இந்த இடத்துல ஒரு நல்ல கல்யாணம் பண்ண முடியும். அந்தப் பக்கம் சாப்பாட்டுக் கூடமெல்லாம் நாறுது. கைவச்சா ஒரு ரூபா போயிடும் போல."

"போகட்டும், பரவாயில்லை. ஆனா யார் ரிப்பேர் பண்றதுன்றது தான் என் கவலை."

"நான் பண்றேன்."



மஞ்சு களமிறங்கினாள்.

அவரை வைத்துக் கொண்டு சுற்றிப் பார்த்தாள். என்னவெல்லாம ரிப்பேர் பண்ண வேண்டுமென்று சேதுராமனோடு பேசி தெரிந்து கொண்டாள். பிறகு காண்ட்ராக்டரை வரவழைத்து அவரோடு பேசி அவர் சொன்ன வேலைகளையும் அதற்குண்டான கஷ்டங்களையும் குறித்துக் கொண்டாள். அவர் கொடுத்த எஸ்டிமேட்டை அவரோடு விவாதித்து குறைத்தாள். மறுபடியும் கொண்டு வந்து சேதுராமனிடம் கொடுத்தாள்.

"ஒரு ரூபாய்க்கு மேலயே வருது. ஆனால் வேலை ரொம்ப நல்லாயிருக்கணும்கற மாதிரி சொல்றார். அவர் சொல்றத பார்த்தா உண்மையான ஆளாத்தான் தெரியுது. நான் சும்மா அவர்கிட்ட ரீல் அடிச்சிருக்கேன். வேற இடத்துல பெருசா நிலம் வாங்கிப் போட்டிருக்கோம். சின்னச் சின்னதா வீடு கட்டி வாடகைக்கு விடப்போறோம் அப்படின்னு சொல்லியிருக்கேன். அம்மா, அந்த காண்ட்ராக்ட் எனக்கே கொடுங்கம்மா அப்படின்னு கெஞ்சறாரு. இதை செய்யறத வச்சுதாங்க உங்களுக்கு காண்ட்ராக்ட் கிடைக்கும் அப்படின்னு சொல்லியிருக்கேன். ரொம்ப ஆர்வமா இருக்காரு. என்னை எட்டு மணிக்கு வரச்சொல்றாரு. அவரு ஏழு மணிக்கே வந்து உட்கார்ந்து வெத்தலைப் பாக்கு போட்டு காத்துகிட்டிருக்காரு. ரிப்பேர் மட்டும் பண்ணாதீங்கம்மா. முன் பக்கம் கொஞ்சம் தூக்கி கட்டுங்க. மொத்தமும் புதுசா மாத்தினா மாதிரி ஆயிடும். அப்போதான் உங்க பேரு ரொம்ப நல்லபடியா வரும் அப்படின்னாரு. நான் அதுக்கு ஆசை காமிக்கலை. ஆனா அவர் சொல்றபோது ஆசையா இருந்தது. உங்களாண்ட கேட்டுட்டு சொல்லலாம்னு அவராண்ட இப்போ வேணாம்னு சொல்லிட்டேன். நீங்க என்ன சொல்றீங்க."

"அதான் நல்லாயிருக்கும்."

"அப்போ கூட அம்பது ரூபா செலவாகுமே. இப்போலே ஒண்ணே கால் ரூபா. அது அம்பது ரூபா அப்படி இப்படின்னு ரெண்டு ரூபா ஆயிடும் போலிருக்கே. ரிப்பேர் பண்றதோட நிக்கலை. ஃபேன் வாங்கிப் போடணும். சேர் வாங்கிப் போடணும். கொஞ்சம் பாத்திரங்கள் வாங்கிப் போடணும். டேபிள் சேர், ஷெல்ப் பீரோ அந்த மாதிரி வாங்கிப் போடணும். மணமகன் ரூம், மணமகள் ரூம் ரெண்டுலேயும் பீரோ வேணும். இருக்கற அலமாரிக்கு பூட்டு சாவி வேணும். இந்த மாதிரி பலதும் இருக்கு. ரொம்ப நிச்சயமா ரெண்டு ரூபாய்க்கு மேல போகும். இப்போ கல்யாண மண்டபம் வாங்கின கடனே பெருசா இருக்கே. இதை அதிகமா இழுத்து விடறேனா."

"கடனை வாங்கி கல்யாண மண்டபமும் வாங்கிட்டோம். கல்யாண மண்டபம் ஓடினாத்தான் கடனை அடைக்க முடியும். ஓடணும்னா கூட காசு போட்டாவது ரிப்பேர் பண்ணி ஆகணும். அதனால நல்லபடியா ரிப்பேர் பண்ணு. காசு போறத பத்தி கவலைப்படாத. அதை எப்படியும் சமாளிச்சுக்கலாம். என்னுடைய கவலை கொடுத்த காசுக்கு ஏமாத்தாம வேலை நடக்கணுமே."

சேதுராமன் கவலையோடு சொன்னார்.

"அதை நான் பார்த்துக்கறேங்க. நீங்க கவலைப் படாதீங்க."

மஞ்சு துள்ளி குதித்தாள். அம்மா, குழந்தைகளை பார்த்துக் கொள்ள அவளுக்குத் துணையாக ஊரிலிருந்து வந்த ஒரு சிறு பெண்ணைப் போட அவள் மேற்பார்வையில் அந்த விஷயமும் தெளிவாக நடந்தது.

ஊரிலிருந்து உதவிக்கு வந்த அந்த இளம் பெண்ணே குழந்தைகளுடைய படிப்பையும் கவனித்துக் கொண் டாள்.



தொழிற்சாலையில் மஞ்சு பார்த்துக் கொண்டிருந்த வேலைக்கு இரண்டு ஆட்களைப் போட்டார். ஒரு பையன் தூரத்து உறவினராக இருந்தான். கஷ்டப்பட்டு மெல்ல மெல்ல மேலே வந்த கதையை அவர்களிடம் சொல்ல, அவர்கள் கஷ்டப்பட்டு உழைப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். பணியை புரிந்து கொண்டு செய்தார்கள்.

கல்யாண மண்டபத்தை சீர்செய்து நிமிர்த்த நான்கு மாதங்கள் ஆயிற்று.

"எத்தினி சுத்தம் பண்ணாலும் தரை நல்லாயில்லை. சுவரையாவது பெயிண்ட் பண்ணி பளபளன்னு பண்ணிடலாம். இந்த தரையை என்ன பண்ணப் போறீங்க. ப்ளீச்சிங் பவுடர் போட்டு மிஷினை ஓட்டிட்டேன். பாருங்க."

தரை மங்கலாகத்தான் இருந்தது.

"இதுல கைவச்சோம்னா, இரண்டரை ரூபா ஆகும்."

"சரி மாத்திடுங்க."

சேதுராமன் சொன்னார்.

மஞ்சு திகைத்துப்போய் அவரைப் பார்த்தாள்.

"வேற என்னா பண்ணச் சொல்ற. கல்யாண மண்டபத்துல இப்படி தரை இருக்கலாமா. இதை புதுசா மாத்தினாதான் நல்லாயிருக்கும். தரை மாத்திடுங்கப்பா."

தரைக்கு சலவைக்கல் போடப்பட்டது.

வேகமாக வேலை செய்தும் ஒரு மாதம் ஆயிற்று. மறுபடியும் சுவருக்கு வண்ணம் பூசப்பட்டது. சமையலறை பக்கமும் தரைகள் வேறுவிதமாக மாற்றப் பட்டன. கட்டில்கள் மெத்தைகள் போடப்பட்டன. சத்திரமும் நறுவிசாகியது.

நாலே முக்கால் ரூபாயையும் விழுங்கி கல்யாண மண்டபம் புதுப்பொலிவோடு இருந்தது.

"இதற்கு மேல் நீங்கள் கடன் கேட்டால் சற்று யோசிக்க வேண்டியிருக்கும்" என்று பேங்கிலிருந்து சொன்னார்கள்.

"நீங்கள் யோசித்தால் நான் வேறு வங்கிக்கு போக வேண்டியிருக்கும்."

சேதுராமன் வேகமாகப் பேசினார்.

வங்கி அவரை சமாதானப்படுத்தியது.

கல்யாண மண்டபத்தை வங்கியைக் கேட்காமல் விற்கமாட்டேன் என்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

வங்கிக் கடனை சரி செய்த பிறகே கல்யாண மண்டபம் விற்பது என்பதாக எழுதிக் கொடுத்தார்.

வங்கி சமாதானமாகியது. மேலும் காகு தர சித்தமாக இருந்தது.

மஞ்சுளா சேதுராமன் கல்யாண மண்டபம் என்று புதுப்பொலிவோடு இருந்த மண்டபத்தை பல பேர் வந்து பார்த்தார்கள்.

"நாற்பதாயிரம் ரூபா வாடகை கேட்குறிங்களே, இந்த ரோட்டுல அவ்வளவு துட்டு கொடுத்து யாராவது வருவாங்களா."

"வராட்டி போகட்டும். பூட்டிக் கிடக்கட்டும். நாப்பது ரூபாய்க்கு ஒத்த ரூபா குறையாது."

ஆனால், ஒரு மாதம் பூட்டியிருந்தது.

எல்லோரும் வந்து விசாரித்து விட்டு நாற்பது ரூபாயா என்று போனார்கள்.

சேதுராமன் என்ன செய்வது என்ற போது மஞ்சுளா ஒரு சின்ன ஐடியா சொன்னாள்.



"இந்த இடத்துல கல்யாணம் நடந்தா வந்து கலந்துக்குவாங்க இல்ல"

"எப்ப கல்யாணம் நடக்கும். எல்லாரும் வந்து வாடகைய கேட்டு வீட்டுக்கு போறாளே."

"நாமளா கல்யாணம் நடத்தறது."

"தோ, மஞ்சு நீயும் நானும் தான் மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கணும்."

சேதுராமன் கிண்டல் செய்தார்.

"அது அறுபது வயசுல கல்யாணம் பண்ணிக்கலாம். இதே மண்டபத்துலயே நாம கல்யாணம் பண்ணிக் கலாம். கவலையே படாதிங்க."

மஞ்சு அவருக்கு உறுதிமொழி கொடுத்தாள்.

"நான் சொல்றது வேறமாதிரி. அம்மா நல்லாயிருக்க ணும்னு ஒரு கல்யாணம். நம்ம ரெண்டு குழந்தைங்க நல்லாயிருக்கணும்னு ஒரு கல்யாணம். நாம ரெண்டு பேரும் நல்லாயிருக்கணும்னு கல்யாணம். அஞ்சு கல் யாணம். அஞ்சு தாலி. அஞ்சு கூரைப்புடவை. அஞ்சு சரிகை வேட்டி. அஞ்சு ஜோடி மாலை. அஞ்சு பந்தல், அஞ்சு சீர், அஞ்சு பேர் குடும்பத்துக்கும் விருந்து."

"நல்லாயிருக்கு. இதனால என்ன புண்ணியம்."

"எல்லாரும் மண்டபத்துக்கு வருவாங்க இல்ல. முக் கியமான ஆளுங்கள கூப்பிடுங்க. பெரிய ஆட்களை கூப்பிடுங்க. வந்து கல்யாணத்தை நடத்தி வைக்கச் சொல்லுங்க."

"கண்ணு, இந்தத் தந்திரமெல்லாம் எங்க கத்து கிட்ட."

"பேப்பர்ல சொல்லித் தராங்களே."

"எந்தப் பேப்பர்ல."

"அத்தினி அரசியல்வாதிகளும் கல்யாணம் பண்ணி வைக்கிறபோது, சினிமா நடிகருங்க கல்யாணம்

பண்ணி வைக்கற போது, நாம கல்யாணம் பண்ணி வைக்கக் கூடாதா. நம்ம கல்யாண மண்டபத்தை ஒரு நாலாறு பேர் வந்து பார்க்கணும்னா வெறுமனே கூட்டு பார்க்க வைக்க முடியுமா. வாங்க தாங்க கல்யாணம் பண்ணி வைக்கிறோம்னு ஊர்ல இருக்கற பெரிய மனுஷாள் அத்தனை பேரையும் கூப்ட்டு அவங்க முன்னயும், பின்னயும் நடந்து கல்யாண மண்டபத்தை பார்த்தா, ஒருத்தருக்கு நாலு பேர் பேசி நாற்பதாயிரம் ரூபா இங்கே வாடகை தரலாம் அப்படின்னு வரமாட்டாங்களா."

"நாற்பதாயிரம் ரூபா தரேன்னு சொல்லட்டும். அப்புறம் முப்பத்தஞ்சாயிரம் குறைச்சுக்கலாம். ரொம்ப வேண்டப்பட்டவங்க. முதன்முதல்ல வந்திருக்கீங்க, உங்க கையால நீங்க ஆரம்பிச்சு வைங்கன்னு ஒவ்வொருத்தர்கிட்டயும் பேசி வாங்கிக்கலாம். ஒரு மாசமா பூட்டிக்கிடக்கேன்னு எனக்கு பயமா இருக்கு. நாலே முக்கால் லட்சம் எப்படி அடைக்கப்போறோம் சொல்லுங்க. கல்யாணம் நடந்தா தானே."

சேதுராமன் மிக சந்தோஷமாக மஞ்சுவின் திட்டத்திற்கு ஒத்துக் கொண்டார்.

"உன்னை மாதிரி பொண்டாட்டி கிடைக்க கொடுத்து வைக்கணும்டா கண்ணு" என்று கொஞ்சினார்.

கல்யாணத் தரகரைக் கூப்பிட்டு எந்த ஜாதியாக இருந்தாலும் பரவாயில்லை. நல்ல ஏழையான ஜோடிகளை கொண்டு வாருங்கள் என்று சொல்ல, அவர் நிறைய பேர் அவருடைய இல்லத்தை நோக்கி படையெடுத்தார்கள்.

மஞ்சுவிடம் பல பேர் தூது போனார்கள்.

கிட்டத்தட்ட ஒரு அறுபது ஜோடி மனுக்களிலிருந்து ஐந்து ஜோடியை எடுத்தபோது அந்த ஊர் எம்.எல்.ஏ-



விடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ஒரு குறிப்பிட்ட ஜோடிக்கு திருமணம் செய்து வைக்குமாறு அவர் வேண்டிக் கொண்டிருந்தார்.

திருமண ஜோடியை வீட்டுக்கு அழைத்தபோது அவர்கள் காதலர்கள். வீட்டிற்கு எதிராக திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்கள். அப்பாவுக்கும், அம்மாவுக்கும் தெரியாமல் காதலிப்பவர்கள். நண்பர்களோடு வந்திருந்தார்கள்.

இந்தக் கல்யாணத்தை நீங்கள் நடத்தி வைத்தால் என் தாய், தந்தையர் எதுவும் செய்ய முடியாது என்று சொன்னார்கள்.

சேதுராமன் யோசித்தார். மஞ்சுவின் முகத்தைப் பார்த்தார். அவளும் கவலையோடு அவர் முகத்தைப் பார்த்தாள். இரண்டு பேரும் உள்ளே போனார்கள்.

"என்ன பண்ணப் போறீங்க" என்று அவள் கேட்க "மாட்டேன்னு சொல்லப் போறேன்."

"சொன்னது எம்.எல்.ஏ. அவர்கிட்ட மாட்டேன்னு சொன்னா பகைச்சிக்கற மாதிரி ஆகாதா."

"எம்.எல்.ஏ.வாக இருந்தாலும் சரி, எம்.பி.யாக இருந்தாலும் சரி, நான் இந்த விஷயத்தை ஒத்துக்க மாட்டேன். இதே எம்.எல்.ஏ. வேற ஒரு ஜோடியை அனுப்பட்டும். நான் நிச்சயமா பண்ணி வைக்கறேன். ஆனா, அப்பா அம்மா இல்லாத இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது. லவ்வர்ஸுக்கு நான் கல்யாணம் பண்ணி வைக்க மாட்டேன்."

"ஏங்க, ஏன்."

"எனக்கு லவ் பண்றதெல்லாம் பிடிக்காது."

"நிஜம்தானா."

"நிச்சயமா. பெத்தவ இருக்கா. அவளை விட்டுட்டு இந்தப் பொண்ணு ஓடிவந்து இவனை கல்யாணம்

பண்ணிப்பா. நாளைக்கு சரியா வாழலைன்னா நம்ம மேல இல்ல குத்தம் வரும். அது மட்டுமில்லை. பெத்த வங்க வயித்தெரிச்சல கொட்டிக்கிட்டு ஒரு பொண்ணு லவ் பண்றேன்னு சொல்லிட்டு ஒரு ஆளோட இங்க வந்தா அவளுக்கு வேலையும் கிடையாது. கல்யாண மும் கிடையாது. என் கூட எந்த சங்காத்யமும் கிடை யாது."

"லவ்வுன்னா அத்தனை வெறுப்பா."

சேதுராமன் கண்ணை மூடிக் கொண்டார். பேசாமல் இருந்தார்.

மஞ்சுவுக்கு அவருடைய முகபாவனை ஆச்சரிய மாக இருந்தது.

"எது பத்தியும் இவ்ளோ வேகமாக, கோவமா பேச மாட்டீங்களே.. எது பத்தியும் கடுமையா இருக்க மாட் டீங்களே. யோசனை பண்ணி சொல்றேன்னுவீங்களே. இவ்ளோ தீர்மானமா, எம்.எல்.ஏ. வந்து சொன்ன பிறகும் முடியாதுன்னு சொல்ற அளவுக்கு கோவமா எதுக்கு இருக்கீங்க. லவ் மேல அத்தனை வெறுப்பா."

"ஆமாம்."

"ஏன்."

"அப்புறம் சொல்றேன்."

சேதுராமன் எழுந்திருந்தார். டெலிபோனிடம் போனார்.

அந்த ஜோடிகளை அனுப்பிய எம்.எல்.ஏ.விடம் பேசினார்.

"ஐயா, வணக்கம். நீங்க ரெண்டு பேரை அனுப்பி யிருக்கீங்க. காதலர்கள்னு அவங்க சொல்றாங்க. சுத்திலும் நண்பர்கள் இருக்காங்க. தம்பி ஒரு இடத்துல பனியன் ஃபேக்டரியில வேலை செய்யுது. பொண் ணும் நல்லா டெய்லரிங் படிச்சருக்கேன்னு சொல்லுது.



அவங்களுக்கு கல்யாணம் பண்ணி வைக்க வேண்டி யது நிச்சயம்தான். ஆனால், அவங்க தாய் தந்தையரை கூட்டிக் கொண்டுவந்தால் நான் கல்யாணம் பண்ணி வைப்பேன். அவங்க அப்பா அம்மாவுக்கு எதிரா நான ஒரு காரியமும் பண்ணத் தயாராக இல்லை. இந்தக் கல்யாண மண்டபமெல்லாம் காதலர்களுக்குண்டான இடம் இல்லை ஐயா. தாய் தந்தையரோடு, உற்றார் உறவினர்களோடு, நண்பர்களோடு புடைசூழ சேர்ந்து செய்யறதுதான் கல்யாண மண்டபத்து கல்யாணம். இன்னிக்கு நான் இவங்கள சேர்த்து வச்சா நாளைக்கு இந்த கல்யாண மண்டபத்துல இந்த மாதிரியான கல்யாணங்கள் நடக்கலாம்னு வந்துரும். அதைத் தவிர எனக்கு காதலிப்பதும், காதல் கல்யாணம் செய்து கொள்வதும் பெற்றோர்கள் சம்பந்தமில்லாமல் பிரிந்து வெளியே வருவதும் பிடிக்காத விஷயம். இன்றைக்கே வேற ஒரு ஜோடிய அப்பா அம்மாவோட அனுப்புங்க. நான் அந்தப் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி வைக்கறேன். ஆனால், இப்படியில்லை. இதை செய்ய மாட்டேன். தயவு செய்து மன்னிச்சுக்கணும். நீங்க சொன்னாலும் ஒத்துக்க மாட்டேன்னு உறுதியா உங்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்" என்று சொன்ன பிறகு அந்த எதிர் முனையில் அமைதி இருந்தது.

"சரி, உன்னுடைய காரணம் எனக்குப் புரியுது. உனக்கு லவ் புடிக்குதோ புடிக்கலையோ. இது லவ் பண்றவங்க கல்யாண மண்டபம்னா உன் பிஸினஸ் அடிபட்டுப் போயிடும். சரி, அந்த ஜோடியை வேற விதமா பார்த்துக்கறேன். ஆனா, இன்னொரு ஜோடியை அனுப்பறேம்ப்பா, அதுக்கு கல்யாணம் பண்ணி வை. நான் இல்லாம இதெல்லாம் பண்ணிடா தப்பா" என்று கேட்க "என்னாங்க நீங்க இல்லாம இங்க ஒரு துரும்பு கூட அசையாது. வாங்க நீங்க"

என்று சொல்ல அந்த காதல் ஜோடிகள் வருத்தத்தோடு வெளியேறினார்கள்.

"பொண்ணு லட்சணமா இருக்கு. பையன் ராஜா மாதிரி இருக்கான். கத்தி நண்பர்களெல்லாம் பாதுகாப்பா இருக்காங்க. இந்த நாலு ஜோடியிலுமே இந்த ஜோடிதான் நல்லாயிருந்தது. என்னமோ முரட்டுத்தனமா வேண்டாம்னு சொல்லிட்டாரு."

யாரோ யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டார். அந்த நேரம் வேதனைப்பட்டார். உதறிவிட்டு வேலையில் மூழ்கிப்போனார்.

திருமணத்திற்கு எம்.எல்.ஏ.வைத் தாண்டி, ஆளுங்கட்சி எம்.பி ஒரு ஜோடியை அனுப்ப, அந்த ஜோடியை ஏற்றுக் கொள்ளலாமா என்று எம்.எல்.ஏ.வைக் கேட்டுவிட்டு எம்.எல்.ஏ. சரியென்று சொன்ன பிறகு எம்.பி.யையும் வரச்சொல்லி அந்த ஜோடியின் உறவுகளைக் கேள்வி கேட்டுப்பார்த்து அவர்களுக்கும் திருமணம் என்று தீர்மானம் செய்தார்.

எம்.பி. அனுப்பிய ஜோடி சற்று வசதியான ஜோடி. அதே போல கடும் ஏழையல்ல. ஆயினும் எம்.பி. என்கிற காரணத்தாலேயே அவர்களுக்கு அந்த கல்யாண மண்டபத்தில் இடம் கிடைத்தது.

திருமணத்திற்கு முதல் நாளே கிட்டத்தட்ட நானூத்தி அறுபது பேர் குழுமினார்கள். அத்தனை பேருக்கும் கதம்ப சாதம் போடப்பட்டது. இனிப்புகள் வழங்கப்பட்டது.

மறுநாள் காலை எல்லோருக்கும் திருமணம் நடக்கும் என்று சொல்லப்பட்டது.

ஒன்பது மணிக்கு சகலமும் வந்து சேர்ந்ததும் மெல்ல பெருந்தலைவர்கள் மூன்று பேரை மனைவிகளோடு வரச்சொல்லி எம்.எல்.ஏ. ஒரு பந்தலிலும் எம்.பி. ஒரு பந்தலிலும் மனைவியோடு நிற்க வைத்து



அவர்களிடம் தாலி தட்டை நீட்டி ஆசிர்வாதம் வாங்கி, அவர்கள் தாலி எடுத்துக் கொடுக்க மணமகன்கள், மணமகள்கள் கழுத்தில் தாலி கட்ட, கெட்டி மேளம் முழங்க, வெளியே வெடிசத்தம் காதைப் பிளக்க, மிகக் கனஜோராக விருந்து நடந்தது. வந்திருந்த வி.ஐ.பி.க்களுக்கு ஒரு பக்கமும், திருமணத்தைச் சார்ந்த உறவினர்களுக்கு ஒரு பக்கமுமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஹால் முழுவதும் ஆட்கள் முன்னும் பின்னும் அலைந்தார்கள். எல்லோருக்கும் திருமண தம்பதிகளின் பெயர் போட்ட துணிப்பை தரப்பட்டது. துணிப்பைக்குள் சாத்துக்குடி பழமும், வெற்றிலைப் பாக்கும், கல்யாண மண்டபம் பற்றிய சிறிய பாம்ப்லெட்டும் கொடுக்கப்பட்டன.

ஈரோடு மாலை தினசரி பத்திரிகைகளிலும், காலை தினசரிகளிலும், கோயம்புத்தூர் தினசரிகளிலும், அவருடைய கல்யாண மண்டபம் திறப்பு விழாவும், அங்கு ஐந்து கல்யாணம் நடந்ததும், எம்.பி. வந்ததும், எம்.எல்.ஏ. வந்ததும், கோயம்புத்தூர் நகரத்தின் முன்னணியான ஆட்கள் வந்ததும் விவரிக்கப்பட்டிருந்தன.

நல்ல முறையில் சிறப்பாக விவாகம் நடத்த மிக உன்னதமான இடம் மஞ்சுளா சேதுராமன் கல்யாண மண்டபம் என்று அவர் விளம்பரமும் கொடுத்திருந்தார்.

மணமகள் வகையறாவுக்கு ஆறு அறைகள், மணமகனுக்கு ஆறு அறைகள், ஆறு, ஆறு பாத்ரூம்கள், கழிவறைகள், ஆயிரம் பேருக்கு சமைக்கக்கூடிய பாத்திரங்கள் உள்ள சமையல் அறை, வழுவழுப்பான தரை, மிகப்பெரிய முகப்பு என்றெல்லாம் வர்ணித்திருந்தார்கள்.

அடுத்த மாதமே தொடர்ந்து எல்லா முகூர்த்த நாளிலும் கல்யாண மண்டபம் பதிவு செய்யப்பட்டது.

இரண்டு மேனேஜர்கள், மூன்று காவலாளிகள், மூன்று பேர் பெருக்குகிறவர்கள் என்று வேலையாட்களை அவர் நியமித்தார். கல்யாண மண்டபம் மிகச் சுத்தமாக இருக்க வேண்டுமென்று கட்டளையிட்டார். வெற்றிலைப்பாக்கு துப்பும் சட்டியையும், வாஷ் பேசின்களையும் வெகு நிச்சயமாக சுத்தம் செய்து வைக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்தார்.

எந்த இடம் அழுக்காகும் என்று தெரிந்து அந்த இடத்தை ஒரு முறைக்கு மூன்று முறை சுத்தம் செய்ய வேண்டுமென்று உத்தரவும் போட்டார்.

ஒவ்வொரு முறையும் தொழிற்சாலைக்குப் போகும் போது சட்டென்று கல்யாண மண்டபத்தில் இறங்கி எப்படி இருக்கிறது என்று பார்த்துவிட்டுப் போவது வழக்கமாக இருந்தது.

ஒரு மாதத்தில் எட்டு முகூர்த்தங்கள் இருக்க அது தவிர வெளியூரில் திருமணமாகி இங்கு வரவேற்பு விருந்து நடத்த வேண்டுமென்று இரண்டு திருமணங்கள் பதிவு செய்யப்பட வெகு எளிதாக வங்கிக்குக் காசு திருப்ப முடிந்தது. சந்தோஷமாகியது.

ஒப்பந்தம் அப்படியே இருக்கட்டும். வங்கி, இன்னும் கல்யாண மண்டபத்திற்கென்று கடன் கேட்டால் நாங்கள் கொடுக்க தயாராக இருக்கிறோம் என்று சொன்னது.

கல்யாண மேடைக்கு நேர் எதிரே ஒரு மேடை அமைத்து அந்த மேடையில் ஒரு பக்கம் தமிழர் நாகரீகம் பற்றிய சித்திரம் எழுதச்சொல்லி மேடையின் நான்கு மூலைகளிலும் மின்விசிறி பொருத்தி பிரசங்க மேடையாக அவர் மாற்ற சிரிப்பு நடிகர் அதற்கு ஸ்கிரீன் போட்டு நாடகம் நடத்தி விட்டுப் போனார்.



கல்யாணத்திற்கு வந்திருந்த கூட்டங்களும், வங்கியின் கூட்டங்களும் அதை ரசித்தன.

அமெரிக்கப் பெண்மணி டாரத்தியால் வியாபாரம் பெருகியது. ஆட்கள் அதிகமாக சேர்க்கப்பட்டார்கள்.

ஒரு நாள் அமெரிக்காவிலிருந்து போன் வந்தது. டெலக்ஸில் உட்கார் என்று உத்தரவு வந்தது.

'நூதனமாக ஒன்று செய்ய வேண்டும் சேதுராமன். நூற்றி மூன்று மாடிக் கட்டடம். மாடியின் உச்சியிலிருந்து நீல நிறப் பின்னணியில் வெள்ளை நிறப்புறா ஒன்று பறப்பது போன்ற துணி பேனர் செய்ய வேண்டும். கிட்டத்தட்ட நானூறு அடி நீளம். எழுபது அடி அகலம். உன்னால் செய்ய முடியுமா. இன்னும் ஒரு மாதத்திற்குள் என் கைக்கு கிடைக்கும்படி அனுப்ப முடியுமா. எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், ஒரே நீலமாக இருக்க வேண்டும். கலரில் மாற்றம் இருக்கக்கூடாது. அப்போது தான் எம்பி பறக்கின்ற ஒரு புறா இருப்பின் மிகச் சந்தோஷமாக இருக்கும்.

சேதுராமன் இது என்னுடைய பிரெஸ்டீஜ். ஒரு பேனர் நான் தொங்க விட்டால் யார் அதை தொங்க விட்டது என்று எல்லோரும் கேட்பார்கள். எங்களுடைய பிரஸிடெண்ட் என் ஊருக்கு வரும்போது அந்தக் கட்டடத்தின் கீழிருந்து அவர் விசை அழுத்த இந்த பேனர் பிரிந்து கீழே தொங்கும். மொத்த மக்களும் ஆரவாரம் செய்வார்கள். அப்போது எல்லார் பார்வையும் என் மீது படும். அது என் வியாபாரத்திற்கு உதவும். தயவு செய்து எனக்கு நீங்கள் உதவுங்கள்' என்று சொல்ல, சகலவிதமான நீலத்துணிக்காக சகல இடங்களுக்கும் சேதுராமன் அலைந்தார்.

பன்னிரெண்டு பேல்கள் வேண்டும். அங்கங்கே மடித்துத் தைக்க வேண்டியிருப்பதால் பன்னிரெண்டு

பேல்கள் கூடப்போதாது. பதிமூன்று பேல்கள் வேண்டும். ஒரு பேல் என்பது நூறு அடி. நானூறடிக்கு நாலு பேல்கள் வாங்க வேண்டும்.

ஐம்பத்திரண்டு பேல்கள் கொண்டு வந்து அவைகளை மிஷினில் தைக்க வேண்டும். ஐம்பத்திரண்டு பேல்களுக்கு ஒரே விதமான நீலத்துணி வேண்டும்.

பம்பாயில் இணைத்தது. அதை பரிசோதித்து இறக்கி ஐம்பத்தி மூன்று பேல்களையும் ஒன்றாக்கினார். இடைவிடாது தைத்தார்கள். மடித்து கெட்டியான தையலாக போட்டார்கள்.

அங்கு உட்கார்ந்து சேதுராமனும் வேலை செய்தார்.

நானூறு அடி உயரத்தில் எங்கே புறா வைப்பது என்று பார்த்து புறா படம் ஒன்று கம்ப்யூட்டரில் வரைந்து, அதை முன்னும் பின்னும் நகர்த்தி வைக்க, அறுபது அடி உயரப் புறாதான் சற்று லட்சணமாக இருந்தது. முப்பது அடியில் இரண்டு புறாக்கள் செய்தார். ஒன்று கீழே சிறகு விரித்து உட்கார்ந்த பேடைப் புறாவாகச் செய்து, இன்னொரு புறாவை சிறகு விரித்து மேலே பறக்கின்ற விதமாகச் செய்ய இரண்டு புறாக்களையும் மிக அழகாக டிஸைன் செய்தார்கள். கம்ப்யூட்டரில் செய்வது எளிதாக இருந்தது. ஆனால் இப்பொழுது வெள்ளைத்துணி வாங்க வேண்டும். வெள்ளைத்துணி புடைத்தாற் போல இருப்பது இன்னும் நன்றாக இருக்கும்.

கனமான வெள்ளைத் துணிக்குக் கீழே பஞ்சு வைத்தால் என்ன என்று தோன்றியது. அதில் அதிகம் பஞ்சு வைத்தார். தைக்கச் சொன்னார். கருப்புக்கண் எழுதப்பட்டது. புறாக்களின் கால் நகங்களுக்கும் கருப்பு வர்ணம் தீட்டப்பட்டது.

முன்னூறு அடி உயரத்திற்கு அவருக்கு ஒரு கட்டடம் இல்லை. என்ன செய்வது. அவர் ஈரோடு தாண்டி கரூர் போகும் சாலையில் நிலப்பரப்புக்கு லாரியில் இந்தத் துணியைக் கொண்டு போய், அங்கே சவுக்கு சட்டங்கள் போட்டு அந்த சவுக்கு சட்டங்கள் மீது துணியைப் பரப்பினார். உயரமாக ஒரு சவுக்குச் சட்டம் அடிக்கச் சொல்லி அதன் மீது ஏறி நின்று பார்த்தார். பெரும் புறா ஒன்று பறந்து கொண்டிருப்பதும், இன்னொன்று பறக்க எத்தனிப்பதாக மிக அழகாக இருந்தது. புறா நெஞ்சு புடைக்க இருப்பது தத்ரூபமாக இருந்தது.

ஒரே நாளில் பம்பாய்க்கு லாரியில் அனுப்ப, பம்பாயிலிருந்து விமானத்தில் துணி ஏறியது. ஆறு நாட்களில் அமெரிக்காவைப் போய் அடைந்தது. அங்கிருந்து விமானம் மூலம் டாரத்தியின் இடத்திற்கு வந்து இறங்கியது.

டாரத்தி சரக்கு வந்து சேர்ந்து விட்டது என்று சொன்னாள்.

இரண்டு நாள் ஒரே மௌனம்.

மூன்றாவது நாள் ட்ரங்கால் வந்தது.

டாரத்தி நடுங்கும் குரலில், கீச்சுக் குரலில் சேதுராமனை புகழ்வது தெரிந்தது. சேதுராமன் அவளுடைய வார்த்தைகளை புரிந்து கொள்ள முடியாமல் திண்டாடினார்.

"தயவு செய்து கம்ப்யூட்டரில் சாட் செய்யுங்கள். கம்ப்யூட்டருக்கு வாருங்கள்" என்று கேட்டார்.

கம்ப்யூட்டரில் டாரத்தி அவரைக் கொண்டாடினாள். கொஞ்சினாள்.

'மிக அற்புதமான வேலை. வீடியோ கேசட்டை உனக்கு அனுப்புகிறேன். மொத்த அமெரிக்காவும் யார் செய்தது என்று திரும்பிப் பார்த்தது. இதைப்பற்றி வெளியிடாத டிவி ஷோ இல்லை. அத்தனை டிவியிலும் எங்கள் பிரசிடெண்ட்டின் வரவேற்பு காட்டப்பட்டது.

குறிப்பாக இந்தப்புறா விருந்தது சொல்லப்பட்டு உலகமெங்கும் சமாதானம் தழைக்கட்டும் என்று அவர் பேசியதும், இந்தப் பேனரும் ஒத்துப் போய் விட்டன. உனக்கு நன்றியை எப்படி செய்வது என்று தெரியவில்லை. நீ பில் அனுப்பு. உன் பில் தொகைக்கு மேல் என்ன செய்ய வேண்டுமென்று எனக்குத் தெரியும்."

"கூடவே வைக்கலாங்களா." மஞ்சு கேட்டாள்.

"இல்லை. கூட வேண்டாம். என்ன உண்டோ அதையே அனுப்புவோம்."

என்ன விலைக்கு வாங்கினாரோ அந்த விலைக் குண்டான ரசீதுகளை இணைத்து, இது தான் எனக்கு செலவாயிற்று. இதற்கு மேல நீங்கள் ஒன்றும் தர வேண்டாம். உங்கள் சந்தோஷம் என்னை சந்தோஷப் படுத்தியது. பலப்படுத்தியது. நமது நட்பை உறுதிப் படுத்தியது. நீங்கள் சந்தோஷப்படும்படியான ஒரு காரியத்தை செய்திருக்கிறேன் என்று நானும் சந்தோஷப்படுகிறேன். உங்கள் சந்தோஷமே இதற்குண்டான விலையாக எடுத்துக் கொள்கிறேன். இதன் லாபமாகக் கருதுகிறேன். நம்முடைய நட்பு எனக்கு மிகப்பெரிய கௌரவம் என்று ஃபேக்ஸ் அனுப்ப, நட்புக்காகத்தான் எனில் சேதுராமன் நானும் உனக்கு நட்புக்காக ஒன்று செய்ய வேண்டியிருக்கிறது. நான் உனக்கு கொடுக்கக் கூடிய தொகையை உனக்கு அனுப்பாமல் என்னு டைய கம்பெனியில் உன்னுடைய ஷேராக ஒன்று போட்டு வைக்கிறேன் கம்பெனி வளர்ந்தால் அதுவும் வளரும். எல்லா ஆர்டர்களும் இனி உனக்கே என்பது நான் உறுதி செய்கிறேன். ஒரு வாரம் ஓய்வில் இருக்கப் போகிறேன். மறுபடியும் வந்து உன்னோடு வியாபாரம் பற்றி பேசுகிறேன் என்று முடித்திருந்தான்.

அவருக்கும் ஒரு வாரம் ஓய்வு எடுத்துக் கொண்டு எங்கேனும் போகலாம் என்று தோன்றியது. மஞ்சுவை



விரட்டி விரட்டி வேலை வாங்குகிறோமே தவிர குழந் தைகளோடு எங்கும் போவதில்லை என்று எண்ணம் வந்தது.

"ஹாங்காங் போகலாமா." மனைவி கேட்டாள்.

"போகலாம். ஆனால் மறுபடியும் எங்க தோசை, எங்க இடியாப்பம் அப்படின்னு அங்க போய் அலை யணும். அவங்க சாப்பாடு நமக்கு சரி வராது அவங்க சாப்பாடு சரிவராட்டி ஓய்வு நேரம் அனுபவிச்சாப் போல் இருக்காது"

"அப்போ எங்க போகலாம்."

"எதுனா கோவில் கோயிலா போகலாம் தஞ்சாவூர் போய், கும்பகோணம் போய் எங்கனா ஒரு இடத்துல தங்கிட்டு டூரிஸ்ட் கார் எடுத்துகிட்டு முன்னயும், பின்னயும் அலைவோம். சாப்பிடுவோம். தூங்குவோம்."

"சரி. போவோம்." என்று மஞ்சு சொன்னாள்.

"பல தடவை மெட்ராஸ் வரும்போது கடல் பார்த் திருக்கோம். ஆனா, குழந்தைங்க மலையே பார்த்த தில்லை."

"மலை பார்க்கணும்னு சொல்லு."

"ஏங்க கும்பகோணத்துலேர்ந்து, தஞ்சாவூர் போய், தஞ்சாவூர்லேர்ந்து திருச்சி போயிடுவோமா. அங்க தங்குவோமா."

"திருச்சி வேணாம்."

"ஏன்."

"திருச்சி வேணாம் விட்டுடேன்."

"மலை பார்க்கறதா இருந்தா திருத்தணி போவோம்."

"திருத்தணி சின்ன மலைங்க. திருச்சி உச்சி பிள்ளை யார் கோவில் நல்லாயிருக்கும். அங்கேர்ந்து பார்த் திருக்கீங்களா, நான் ரெண்டு தடவை போயிருக்கேன்."

"வேற ஏதாவது மலை போவோம். திருச்சி வேணாம்."

"நான் சொல்றதைக் கேளுங்களேன். கும்பகோணத்துல ரெண்டு நாள் தஞ்சாவூர்ல ரெண்டுநாள். திருச்சியில் ரெண்டு நாள்."

"வேற எங்க வேணா தங்கு. திருச்சி வேணாம்."

"ஏன்."

"வேணாம்னா கேளேன் மஞ்சு. ஏன், ஏன்னு ஒவ்வொண்ணுத்துக்கும் பதில் சொல்லிகிட்டிருக்க முடியுமா."

சேதுராமன் சற்று உரத்த குரலில் சொல்ல மஞ்சு அடங்கிப் போனாள்.

குழந்தைகள் இரண்டு பேரும் அப்பாவையும் அம்மாவையும் வினோதமாகப் பார்த்தார்கள்.

"அம்மாவையும் கூட்டிட்டு போலாமா. இல்ல அதுக்கும் கத்துவீங்களா."

"இதோ பார் நான் எல்லாத்துக்கும் கத்தறவனா கெட்ட புருஷனா, கொடுமைக்காரனா ஒரு போன் பண்ணாத இந்த விஷயம் எனக்கு பிடிக்கலை. அதுக்கு நான் கொஞ்சம் குரல் உயர்த்தினேன். அவ்வோதான் எப்போடா புருஷனை இழிவுபடுத்தலாம்னு இருக்கீங்க."

"நான் இழிப்பு படுத்தறேனா உங்களையா, மனசால கூட நினைச்சதில்ல. ஏன் இப்படி அபாண்டமா பேசறீங்க. ஏதோ உங்களுக்கு புடிக்கலை. என்ன புடிக்கலைன்னு ஒரு காரணம் கேட்டேன். காரணம் சொன்னா சரின்னு போயிடப் போறேன். நான் காரணம் சொல்லமாட்டேன். புடிக்கலைன்னு மட்டும் சொல்வேன்னா உங்களுக்குள்ள என்னமோ இருக்கே எனக்குத் தெரியாத என்ன விஷயம் உங்களுக்குள்



இருக்கணும். ஏன் இருக்கணும். அப்படின்னு ஒரு வருத்தம் வருது. கவலை வருது. சொல்ல மாட்டீங்க அவ்வோதான் சரி சொல்ல வேணாம்."

அவர்கள் காலையில் சண்டை போட்டார்கள், மாலையில் ஒரு குழு வீடு தேடி வந்தது.

"உங்களை ஏகமனதாக தேர்ந்தெடுத்திருக்கிறோம். நீங்கள் கனவான், உங்களுடைய மனைவி முதல் லேடி."

"அங்க பாருங்க என்னா சந்தோஷம். எப்படி சிரிக்கிறாங்க பாருங்க. நீர் ஏன்யா உம்முன்னு உட்கார்ந்துட்டிருக்கீர்."

"இந்த அடிப்படையான விஷயமே எதுக்கு தெரியுங்களா. உங்களை மாதிரி ஆதர்ஸ தம்பதிகளை உருவாக்கறதுதான். எப்படி ஆம்படையானும், பொண்டாட்டியும் பல்வேறு விஷயங்களில் ஒண்ணா ஈடுபட்டு மெல்ல மெல்ல வளர்ந்து மேல போயிருக்காங்க. அதே மாதிரி நீங்களும் வாங்கன்னு, உங்களை ஒரு முன்னு தாரணமா காட்டறதுதான்."

மறுபடியும் மஞ்சு வாய்விட்டுச் சிரித்தாள்.

அவர் தலை குனிந்து கொண்டார்.

"என்னய்யா நான் சொல்ல சொல்ல அமைதியா இருக்கீர்."

"இதெல்லாம் கண்ணுபடுங்க."

"தே, என்னா கண்ணுபடும், காதுபடும்னு. நீங்க என்னம்மா சொல்றீங்க."

"நான் ரெடிங்க. அவர் சரின்னு சொல்லிட்டா நான் வந்து மேடையில் உட்கார்ந்துப்பேன்."

"மூணு வருஷம் பார்க்கறேனே. நீங்களும் உங்க மனைவியும் ஒரு தடவை ராஜா ராணியா இருந்தீங்களே."

"ஆமாம்."

"என்னை செலக்ட் பண்ணும் போதுகூட மூணு போட்டி இருந்தது. இப்போ போட்டியே இல்லை இன்னொரு ஆள் சொல்லுங்கடான்னா சொல்லவே முடியலை. இவரை தான் சொல்றாங்க. குறிப்பா உங்களைதான் சொல்றாங்க. கல்யாண மண்டபத்தை தூக்கி கட்டினதே நீங்கதானாமே. ஒரு கல்யாணம் நடத்தணும்னு சொன்னதே நீங்கதானாமே. ஸார் கொடுத்த அந்த புறாக் கொடிதான் அமெரிக்காவ பட்டொளி வீசி பறந்ததாமே. அதுக்கு கூட நின்னதும் நீங்கதானாமே. சேதுராமன் நான் சொல்றது சரியா, தப்பா."

"நூத்துக்கு நூறு சரி. மஞ்சு இல்லாத எனக்கு வாழ்க்கையே இல்லை. மஞ்சு இல்லாம நான் ஜெயிக்கவே முடியாது. அது உண்மைதான். ஆனால் இதை போய் மேடையில் ஏறி சொல்லிக்கணுமான்னுதான் வெட்கமா இருக்கு."

"அம்மா சரின்னுட்டா நீங்க சரின்னு சொல்லிடுவீங்களா."

இன்னொரு வயசாளி சொல்ல,

"சரி சொல்லிடுவேன்" என்று சேதுராமன் சொல்ல எல்லோரும் மஞ்சுவைப் பார்க்க "நான் ஒத்துக்கறேங்க. அவரை ஒத்துக்கச் சொல்றேன். ஏதாவது காபி டிபன் சாப்பிடுங்க," என்று பரிமாற சகலரும் சிரித்துக் கொண்டே பல்வேறு விஷயங்களைப் பேசினார்கள். சிரித்தார்கள்.

"என்ன மூட் அவுட் ஆகிப்போச்சு உங்களுக்கு. ஏன், என்ன காரணம்" என்று ஒருவர் மட்டும் சரியாக சேதுராமனின் நாடியைப் பிடித்தார்.

"இல்லீங்க. நான் வெளிய போகலாம்னு சொன்னேன். ஹாங்காங் பக்கம் போகலாம்னு. இல்ல



லோககலாவே போகலாம். ஹாங்காங் போய் நம்ம சோத்துக்கு நாம அலைய முடியாது அப்படின்னுடுச்சு. என்னடா துட்டு போட்டு வெளிய கூட்டிட்டு போறேன்னா ஒரு பொண்டாட்டி வரமாட்டேன்னுட்டாளேன்னு ஒரு வருத்தம்."

"அடடே. மஞ்சு சொல்றது சரி."

"நீங்க இங்க இருக்கறதவிட திருச்சியில் போய் இறங்கி ஒரு நல்ல ஹோட்டலா பார்த்து விதம் விதமா நம்ம சாப்பாடு சாப்டுட்டு சமயபுரம், ஸ்ரீரங்கம் உச்சி பிள்ளையார் கோவில்னு போயிட்டு வரலாமே."

"இதை தாங்க நான் சொன்னேன்."

மஞ்சு உள்ளே பாய்ந்தாள்.

"திருச்சின்னா வேணாம்னாரு. நான் ஏன்னு கேட்டேன். ஒரு மாதிரி புறுபுறுன்னு சண்டை வந்துடுச்சு."

"அடிசக்கை, காலைலேர்ந்து சண்டையா, நாங்க தான் வந்து சமாதானம் பண்ணணுமா."

"என்னப்பா உன் பேர் சொன்னவுடனே இப்படி ஜகா வாங்குது விஷயம்."

அவர்கள் கேலி செய்ய அங்கு பெரும் சிரிப்பு எழுந்தது. அவர்கள் விடைபெற்று போனார்கள்.

மஞ்சு காலருகே உட்கார்ந்து கால் பிடித்து விட்டாள்.

"நான் ரொம்ப அதிகப் பிரசங்கியா, உங்களைத் தாண்டி நிறைய பேசறேனா. உங்களுக்கு அதுல வருத்தம் இருக்கா. சொல்லுங்க. இந்த க்ஷணத்துலேர்ந்து நான் பேசறதை நிறுத்திடறேன்."

"இல்லை மஞ்சு. நீ எது சொன்னாலும் சரியாத்தான் சொல்லுவே. ஆனால், திருச்சி எனக்கு பிடிக்கலை."

"ஏன்."

"சொல்றதா வேணாமான்னு தெரியலை மஞ்சு."

"ஏன். எங்கிட்ட மறைக்கும்படியான என்ன விஷ

யம். நான் உங்கிட்ட எதுவும் மறைச்சதில்லையே."

"இல்லை மஞ்சு, இந்த விஷயம் மறைச்சா நல்ல

துன்னு எனக்குள்ள தோணுது."

"ஏங்க, மறைக்கும்படி என்ன பண்ணிட்டீங்க."

"ஒரு பொண்ணை திருச்சியில லவ் பண்ணியிரு

க்கேன்."

"அவ்வோதானே, சின்ன வயசுல எல்லாரு

லவ்தான் பண்ணுவாங்க."

"நீயும் பண்ணியிருக்கியா மஞ்சு."

"சே, உடனே என் மேல பாயறதா, நமக்கு இதெல்

லாம் சரியா வராது. நல்ல அப்பா, அம்மா, ரெண்டு

தம்பி, நான் என்னாத்துக்கு லவ் பண்ணனும். போ

சத்ததுங்கதான் இந்த லவ்வுன்னு மாட்டிக்குமே தவி

எங்களுக்கெல்லாம் அந்த சிந்தனையே வரலை."

"சினிமா பார்க்கறபோது."

"சினிமாலதான் இந்த மாதிரி முட்டாள்தனமா

பண்ணுவாங்கன்னு நினைச்சுப்போமே தவிர, சொந்த

வாழ்க்கையில இப்படி விஷயங்கள் செய்யக் கூட

துன்னு சினிமா பார்த்தும், நாங்க தெரிஞ்சுகிட்டோம்

"லவ் பண்றது தப்புன்னு சொல்றியா."

"லவ்வுன்னா என்னான்னு புரிஞ்சுக்க சொல்றேன்."

"லவ்வுன்னா என்ன மஞ்சு."

"என்னை எட்டாம் வகுப்பு டீச்சரா மாத்திட்டீங்க

"அடடே. இதெல்லாம் எட்டாம் வகுப்புலயே

சொல்லிக் கொடுத்துடுவீங்களா."



"சொல்லிக் கொடுக்கணும்னு சொல்றேன். சொல்லிக் கொடுக்காததுனாலதான் கண்டதும் கண்டபடி லவ் பண்ணுதுங்க."

கையை ஆட்டிக் கொண்டு வேகமாகப் பேசினாள்.

"சரி. தெரிஞ்சதை நீங்க சொல்லுங்க. எட்டாம் வகுப்பு டீச்சராகவே சொல்லுங்க. லவ்வுன்னா என்ன."

"நான் படிச்சுருக்கேன். படிச்சதுலேர்ந்து சொல்றேன். படிச்சதை, புரிஞ்சதை சொல்றேன்."

"எதுவோ ஒண்ணு சொல்லேன்."

"காதல் என்பது மதித்தல்."

"இது படிச்சது. நீங்க புரிஞ்சிகிட்டது என்ன. அதைச் சொல்லுங்க."

"அதுவும் அது தான். மதிக்கறதுங்கற விஷயம் எப்போ வரும்னு யோசனை பண்ணிப்பாருங்க. அவரு உயரமா இருக்காரு அப்படின்னு ஒரு பொண்ணு ஒரு ஆளை மதிக்குமா. அவர் சிரிக்க சிரிக்க பேசறாருன்னு ஒரு பொண்ணு மதிச்சா அந்தப் பொண்ணு கெட்டிக் காரப் பொண்ணா. எப்போ மதிப்பு வரும்னு யோசனை பண்ணி பார்க்கலாமா. நீங்க சொல்லுங்க பார்க்கலாம்."

"ஒரு ஆள் நல்லவனா இருந்தா அவன் மேல மதிப்பு வரும்."

"ஆங். என் ராஜா. இப்போ சொன்னீங்களே அது வார்த்தை. ஆக ஒரு பொண்ணு எப்போ ஒரு ஆளை மதிக்கணும். அவன் நல்லவன்னு தெரிஞ்சா. ஒரு ஆளு நல்லவன்னு தெரிஞ்சுக்கறதுக்கு கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகாதா. ஒரு ஆளோட பேசிப்பழகி அப்புறம் மெல்ல மெல்ல வார்ற விஷயமில்லையா மதிப்பு. அதா வது காதல். ஐயோ எனக்கு இந்த நடிகரை ரொம்ப லவ்வு அப்படின்னு ஒரு பொண்ணு சொன்னா அதுக்கு எதோ போறலைன்னு அர்த்தம். மதித்தல்

அப்படிங்கற விஷயத்துக்கு எதிரா ஒரு ஆள்கிட்ட என்ன விஷயம் இருக்கு மதித்தல் விஷயத்தை பத்தி சிந்திக்காத ஒரு பெண் அல்லது ஒரு ஆண் ஏன் வேகப் படறாங்க. வேகப்படுகிறபோது மதிப்பு பற்றிய அக்கறை நகர்ந்து போய் விடுகிறது."

"சொல்லு மஞ்சு எனக்கு புரியலை."

"ஒரு விஷயத்தின் மீது அதிகமாக ஆசைப்படுகிற போது அந்த விஷயம் மதிப்புடையதா இல்லையா என்று பார்க்க முடியாமல் போய் விடுகிறோம். பசிக்கும்போது அவசரமாக தின்று விடுகின்ற கெட்ட பதார்த்தம் போல் பல இடங்களில் காதல் ஆகி விடுகிறது."

ஒரு திகைப்போடு மஞ்சுவை சேதுராமன் பார்த்துக் கொண்டிருந்தார்.

"நான் சொன்னது புரியலையா. இல்ல, ரொம்ப புரியும்படியா சொல்லிட்டேனா. ஏன் இப்படி உட் கார்ந்திருக்கீங்க."

"நல்லா சொல்ற மஞ்சு. ஆசை என்பது அதிகமாகிற பொழுது மதிப்பு பற்றிய அக்கறை இல்லாது போகிறது. நீ சொன்னதை நான் சொல்லிட்டேனா."

"கரெக்டா சொல்லிட்டீங்க."

"கெட்டுப்போன பண்டம்னு ஒண்ணு சொன்னியே அது என்ன."

"ரொம்பப் பசி எனக்கு. எதிர பக்கோடா வச்சிருக் காங்க. அது நாலு நாளைக்கு முன்னாடி பண்ண பக் கோடா. அதை சாப்பிடறது அவளோ நல்லதில்லை. வயித்தைப் பிரட்டும். ஃபுட்பாய்ஸன் ஆகும். ஆனா, ஆயிட்டுப் போகுதுன்னு இப்போ பசிக்கு வேணும்னு ஒரு பிடி எடுத்து சாப்பிட்டுட்டேன்னா அவஸ்தை படப்போறது நான், ஏனென்றால் அந்தப் பக்கோடா

36840



எப்படியிருக்கு என்ன விதம்னு தான் யோசிக்கறதே யில்லை. பசிக்கு அலைஞ்சிட்டேன்."

"பசிச்சா என்ன செய்யறது மஞ்சு."

"பசியை பொறுத்துகிட்டு, கவனமா தள்ளி வச்சுட்டு, இப்போ நல்ல பொருளா சாப்பிடறதுக்கு என்ன கிடைக்கும்னு தேடணும்."

"கிடைக்கலேன்னா."

"கிடைக்காம இருக்காதுங்க. ஒண்ணுமே கிடைக்க லேங்கறதெல்லாம் பொய். உலகத்துல இந்த பக்கோடா தவிர வேற பண்டமே இல்லைன்னு ஆயிப்போச் சுன்னா இந்தப் பக்கோடாவை தின்னுத் தொலைங்க. அப்படியிருக்காத, எதிர இருக்கறதுங்கறதுனாலயே, கைக்கு கிடைக்குதுங்கறதுனாலயோ, அது மட்டமா இருந்தாலும் தின்னுடலாம்னு போறது தப்பு."

"சரி. ஒரு உதாரணமா சொல்ற எனக்கு புரியுது. ஆசைப்பட்டு லவ் பண்ணாத, மதிச்சு லவ் பண்ணு அவ்ளோதானே."

"ஆமாங்க. ஆசைப்படாத மதிக்க கத்துக்கோங் கறேன். ஆசை வச்சா அங்க மதிப்பு பத்தின அக்கறை போயிடும்னு சொல்றேன்."

"ஆசை ஏன் வருது மஞ்சு."

"அட. ரொம்ப நேரத்துக்கு அப்புறம் நல்ல கேள்வி கேட்டீங்க. ஆசை எதனால் வருகிறது. நம்முடைய கற்ப னையினால் வருகிறது. நாம இது என்னமோ அற்புத மான விஷயம்னு நாம தான் கற்பனை பண்ணிக் கறோம்."

"கற்பனை எவ்விதம் வருகிறது."

"நமக்கு வேற வேலை இல்லை. நிறைய வேலையிருந் தால் இந்த மாதிரி கற்பனை பண்றதுக்கு, கனவு காண றதுக்கு நேரம் இருக்காது. அடுத்த வேலை, அடுத்த

வேலையில்லனு போகும். வேலையில்லாத நகம் கடிச்சு உட்கார்ந்து, இங்க உட்கார்ந்து, அங்க உட்கார்ந்து கண்டபடி சிந்தனை பண்ணி, சிந்தனை பண்ணியதின் மூலமா உடம்பு கிளர்ச்சி அதிகமாயிடும்."

"மஞ்சு இதெல்லாம் உனக்கு யார் சொல்லிக் கொடுத்தாங்க. எப்போ சொல்லிக் கொடுத்தாங்க." ஆவலாக சேதுராமன் கேட்க அருகே மஞ்சு உட்கார்ந்து கொண்டாள்.

"சொன்னா நம்பமாட்டீங்க. எங்க அப்பா கத்துக் கொடுத்தாரு. எங்கம்மாவை வச்சுகிட்டு எனக்கு சொல்லிக் கொடுத்தாரு."

சேதுராமன் திகைப்பாக மஞ்சுவைப் பார்த்தார்.

"ஆமாம். எங்கப்பா அவ்ளோ நல்ல மனுஷன். எங்கம்மா எங்கப்பாவை விட நல்லவங்க. இது நான் சொன்னா பொண்ணுக்கு ஏறாது. நீங்க சொல்லுங்க அப்போதான் ஏறும் அவ உங்களைதான் பெரிய விஷயமா கொண்டாடிட்டிருக்கான்னு எங்கம்மா எங்கப்பாகிட்ட சொல்ல எங்கப்பா நல்ல நாள் பார்த்து, நல்ல நேரம் பார்த்து, என்னை கிழக்க பார்த்து உட்கார வச்சு அம்மா, காதல்னா என்னான்னு நினைக்கிறேன்னு கேட்டாரு. நான் ஆடிப்போயிட்டேன்."

"கேட்கவே நல்லாயிருக்கு மஞ்சு. அப்புறம்."

சேதுராமன் வெகுளியான முகத்தோடு அவளைப் பார்த்தார்.

மஞ்சு அவர் தலையைத் தடவி விட்டாள்.

"ஏன் இமர்னு ஒரு அப்பா, தன் பொண்ணை பார்த்து காதல்னா என்னான்னு சொல்லித் தரணும். நீ யாரையாவது லவ் பண்ணியா."

"இதோ பாருங்க இந்த மாதிரி ஏதாவது ரவுஸ் பண்ணீங்கன்னா நான் ரொம்ப கெட்டவளாயிடு



வேன். நாம மறுபடியும் சண்டை போட்டுக்க வேணாம்."

"சண்டையெல்லாம் போட்டுக்கலாம். ஆனா, வீட்டுக்கு வர்றவன்கிட்ட காலைலேர்ந்து எங்க வீட்டுக்காரருக்கும் எனக்கும் சண்டை அப்படின்னு சொல்லக்கூடாது."

"நானா சொன்னேன். நானா சொன்னேன். நாக்கு மேல பல்லை போட்டு நீங்க சொல்லிட்டு, அப்புறம் என்னை வந்து சொல்றீங்களே. நல்லாயிருக்கு. நீங்க பேசறது."

எழுந்து நின்று இடுப்பில் துணியை வரிந்து கொண்டு அவரிடம் கை நீட்டி பேசினாள்.

"சரி. இதனால் என் மேட்டரை ஏமாத்தாத. உங்கப்பா உனக்கு என்ன லவ் பண்றத பத்தி சொல்லிக் கொடுத்தாரு. நீ யாரையாவது லவ் பண்ணியா."

"பனார்னு அடிக்கணும் போல இருக்கு. ஆம்படையானாச்சேன்னு பொறுத்துக்கிட்டிருக்கேன்."

"அடி பார்க்கலாம்" அவர் கன்னத்தை காண்பித்தார்.

மஞ்சு மெல்ல குனிந்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

"ஏன், ஏன் உங்கப்பா சொல்லிக் கொடுத்தார். நான் கேள்வியை விடமாட்டேன். சொல்லு."

"முட்டாளே, உனக்கு ஒண்ணும் தெரியலை. நான் சொல்றேன் கேளு. எதிர் வீட்ல ஒரு பொண்ணு. அந்தப் பொண்ணுக்கு ஒரு அக்கா, ரெண்டு அண்ணன். மூத்த அண்ணன் கல்யாணம் ஆன பொண்ணோட கசமுசா பண்ணிட்டான். அந்த ரெண்டாவது அண்ணன் ஒரு ஆங்கிலோ இண்டியன் பொண்ணை லவ் பண்ணி, அவளதான் கல்யாணம்

பண்ணுவேன்னு சொல்லி இன்னும் திக்கறவன், அந்த வீட்டுப் பொண்ணு வேற ஒரு பையனோட ஓடிப்போயிடுச்சு. எங்களை விட பணக்காரங்க, எங்களைவிட பெரிய குடும்பம். ஆனால் அந்த வீட்ல ஒரு ஆள் கூட சரியா இல்லியே அப்படின்னு எங்கப் பாக்கு ரொம்ப ஆச்சரியம். அந்தப் பொண்ணும் எங்க வீட்டுக்கு வரும் போகும். எங்கூட பேசும். அதே மாதிரி எங்க காலேஜ்ல மூணு நாலு பொண்ணுங்க லவ் மேட்டர்ல மாட்டி ஊர் சிரிப்பாப் போயிடுச்சு.

எங்க வயல்ல வேலை செய்யறவருடைய பொண்ணு சினிமா நடிகரை பார்க்கறேன்னு கிளம்பிப் போயிடுச்சு. அப்போ டிவி வந்த நேரம். ஒளியும் ஒலியும்க்காக காத்துகிட்டிருப்போம். எங்க அப்பா கூப்பிட்டு சொல்வாரு. அதெல்லாம் பாரு ஆனா, அது நிஜமில்லைன்னுவாரு. என்னா சொல்றாருன்னு முதல்ல புரியலை. இந்த மாதிரி நாலு அஞ்சு விஷயங் கள் பார்த்துட்டு அடடே இதெல்லாம் நிஜமில்லை, இதைப் பார்த்துட்டு அவங்க ஏமாந்து போறாங்கன்னு எனக்கு புரிஞ்சு போச்சு. எதிர்வீட்டுப் பொண்ணு நாங்களெல்லாம் பழகின பொண்ணு. அப்படியே பிச்சி கிட்டு பையத்தூக்கிகிட்டு போயிட்டான்னவுடனே, எங்கப்பா ரொம்ப கவலைப்பட்டாரு.

அம்மா, அவ பண்ணனது தப்பும்மா. அந்தத் தப்பை நீ பண்ணிடாதம்மா அப்படின்னு உட்கார வச்சு சொல்லிக் கொடுத்தாரு.

அப்பா, நான் ஏன் அந்தத் தப்பை பண்ணப் போறேன். நான் அப்படி பண்ணுவேன்னு ஏம்ப்பா நினைக்கறீங்கன்னேன்.

யார் மனசுல எதுவேணாலும் நடக்கலாம்மா. ஜாக்கிரதையா இருக்கணும்கறத்துக்கு வருமுன் காப்பது மாதிரி நான் இந்த விஷயத்தை சொல்றேன். இது காதல் அல்ல. அந்தப் பொண்ணு ஒரே மாசத்துல திரும்பி வரும்பாரு. காதல்னா என்னான்னு சொல்லிட்டு எங்கப்பா தன்னுடைய வாழ்க்கைய சொன்னாரு."

"அப்படியா, என்னா அது சொல்லு."

"எதை சொல்லச் சொல்றீங்க."

"உங்கப்பாவோட வாழ்க்கை."

"இன்னிக்கு சிவராத்திரிதானா."

"தூக்கம் வந்தா தூங்கு மஞ்சு."

"எங்கண்ணு நீ கேட்கறபோது நான் எப்படி தூங்க முடியும். எங்க அப்பாவும், எங்க அம்மாவும் ஒரே தெருவுல இருந்தவங்க. எங்க ஊர்ல யாதவர்கள் அதிகம். பசுமாடுகள் அதிகம் பால், வெண்ணெய், தயிருன்னு விஷயங்கள் அதிகம். எங்க ஊர்லேர்ந்து வெண்ணெய் சென்னைப் பட்டினம் வரைக்கும் போகும். பெங்களூர் பாம்பேக்குக்கூட போகும். ஊரால தாத்துக்கு அம்பது பேரு மாடு வளர்க்கறது, பால் கறக் கறது வெண்ணெய் எடுக்கறது வெளியூர் அனுப்பறது. மீதி இருக்கற பேரெல்லாம் குறைச்சலான விவசாயம் பண்ணுவாங்க. மத்தவங்களெல்லாம் இந்த வெண் ணெய் எடுக்கற விஷயத்துக்கு உதவியா இருப்பாங்க. எங்கப்பா எலக்ட்ரீஷியன். எங்கப்பாவுக்கு அப்பா அதாவது எங்க தாத்தாவுக்கு புண்ணாக்கு வியாபாரம். எங்க வீட்டுக்கு பேரே புண்ணாக்கு வீடு."

"சொல்லவே வேணாம். உன்னை பார்த்தாலே தெரியுது."

சேதுராமன் சொல்ல மஞ்சு பாய்ந்து அவர் காதை வலிக்கத் திருகினாள்.

"நான் புண்ணாக்கு, நீங்க வெறும் தவிடு. இரண்டு பேரும் ஒண்ணா சேர்ந்துகிட்டோம். ஆளைப்பாரு. பேச ஆரம்பிச்சா உடனே பொண்டாட்டிய கேலி பண்றதா."

"சரி. சரி சொல்லு, சொல்லு."

அவர் சமாதானப்படுத்தினார்.

"அந்த ஊர்ல எல்லாம் எலக்ட்ரீஷியன் ரொம்ப கம்மி. அதனால எங்கப்பாவுக்கு எப்பவும் டிமாண்ட் இருந்துகிட்டே இருக்கும். எங்கம்மா வீட்ல இருபது முப்பது மாடுவச்சு பால் கறந்து பெரிய பெரிய தொட்டியில மோட்டார் வச்சு அதை அலுமினியத்தோட ஜாயின் பண்ணி மத்து கடையக் கடைய வெண்ணெய் திரண்டு வரும். அதை எடுத்து வித்துடுவாங்க. நெய்யா உருக்கி எல்லா ஊருக்கும் அனுப்பிகிட்டிருந்தாங்க. எங்கம்மா நெய். எங்கப்பா எலக்ட்ரீஷியன்.

மாசத்துக்கு ஆறு ஏழு தடவை ரெண்டு பேரும் பார்த்துக்கும்படியான சூழ்நிலை. வீட்ல பெரியவங்களுக்கு மாடு மேய்க்கிற வேலையும், கொட்டாய் சுத்தும் பண்ற வேலையும் இருக்கும். வீட்ல மோட்டார் வேலை செய்யலை, மத்து கடையலை, கரண்ட் வரலை அப்படின்னா நேரா போய் அப்பாகிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு, மூணு மத்தும் வேலை செய்யலைங்க வாங்க, அப்படின்னவுடனே எங்க அப்பா போய் என்னான்னு பார்த்து சரி பண்ணிக் கொடுப்பாரு. ஒருத்தரையொருத்தர் பிடிச்சுப்போச்சு. ஆனா, வெளியில சொல்லலை. பயம். எங்கப்பா அவருடைய அண்ணாகிட்ட போய் இந்த மாதிரி இந்த வீட்ல ஒரு பொண்ணு இருக்கு. அதை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. அவ பேர் புனிதவதி. அந்தப் பொண்ணுக்கும் என்னை பிடிச்சிருக்கும்னு நினைக்கிறேன். அந்தப் பொண்ண நான் கல்யாணம் பண்ணிக்க முடியாதா அப்படின்னு கேட்டாரு.

சரிடா. டக்குனு ஆசை வச்சிடாத. கொஞ்சம் தள்ளியே இருந்துக்க. நான் போய் பார்த்துகிட்டு வரேன்னு சொல்லிட்டு அடுத்தபடியா மோட்டார் ரிப்பேருக்கு அண்ணன் போய் மோட்டார் கழட்டிகிட்டு வந்து



பொண்ணு ரொம்ப நல்லாயிருக்கு. ஆனா அவங்க நம்பளவிட பணக்காரங்கடா அப்படின்னு சொன்னார். முப்பது பசு, இருபது எருமை வச்சிகிட்டிருக்கறவங்க, நிச்சயமா பணக்காரங்கதான். இந்தப் பொண்ணுக்கு நிறைய செய்வாங்க. நாமளும் பெருசா கல்யாணம் பண்ணணும்னு நினைப்பாங்க. நமக்கு இன்னிக்கு இருக்கற லட்சணத்துல பெருசா கல்யாணம் பண்ண முடியாது. என்னடா சொல்ற அப்படின்னாங்க.

நான் லவ் பண்றேன்றது என் மனசுக்கு தெரியுது. ஆனா, வெளிய சொல்லலை. உங்களாண்ட மட்டும் சொன்னேன். அதே சமயத்துல நம்மால முடியாதுன்னு உதறிட்டுப் போகவும் முடியலை. நீங்க எனக்காகப் போய் அவங்க வீட்ல அவங்க அப்பா, அம்மா கிட்ட பேசுங்க. சரின்னு ஒத்துகிட்டா இந்தக் கல்யாணம் நடக்கட்டும் அப்படின்னு சொன்னாராம். இதுக்கு முன்னாடி அந்தப் பொண்ணுகிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கடா அப்படின்னு சொன்னாங்க, எங்க பெரியப்பா.

அந்தப் பொண்ணைக் கேட்கறதுக்கு பயமா இருக்குன்னு சொன்னாரு எங்கப்பா. இதெல்லாம் நானா போய் கேட்க முடியும்னாரு எங்க அப்பாவோட அண்ணாரு.

வேற யாரையும் தெரியாதண்ணா. எனக்கு யாரும் சிநேகிதக்காரங்களே இல்லை. நீதான் சிநேகிதம். நீதான் அண்ணன். நீதானே எனக்குப் பார்த்து நல்லது பண்ணணும் அப்படின்னு அவங்க அண்ணன் கையப் பிடிச்சு அழுதாரு எங்கப்பா. வேற வழி. தலைவிதியேன்னு எங்கப்பாவோட அண்ணாரு நேராபோய் அந்த வீட்ல எலக்ட்ரீஷியன் மாதிரி இங்க பார்த்து, அங்க பார்த்து, இங்க நின்னு, அங்க நின்னு தனியா அந்தப் பொண்ணு வரும்போது உங்கிட்ட ஒரு நிமி

னும் பேசணும் சொன்னாரு. அந்தப் பொண்ணு பயந்துடுச்சு. யாரு? எங்கம்மா, என்னான்னு பயந்தது.

தம்பி மேல கண்ணு வச்சாக்க இது என்ன அண்ணன் வந்து தனியா பேசணுமகறான். இந்தாள் எதுவோ வம்புன்னு சொல்லிடப் போறானேன்னு அந்தப் பொண்ணுக்கு பயம். அதெலலாம் பேச முடியாது அப்படினுடுச்சு எடுத்தவுடனேயே சிக்கல். எங்க அப்பாவோட அண்ணாரு மூஞ்சி சிவந்து போய், வந்து அந்தப் பொண்ணு சகிப்படாதுடா ஒரு நிமிஷம் பேசணும்னா அதெல்லாம் ஒண்ணும் பேசமுடியாது. நீங்க எனனா இங்க பேசறதுன்னு சன்னுபுள்ளுன்னு சொல்லிடுச்சு. நேரா வந்துட்டேன்.

நான் இனிமே அந்த வீட்டுப்பக்கமே போக மாட்டேன் அப்படின்னு உட்கார்ந்துட்டாரு. புலீபுலீன்னு ஒரே அழுகையாம்.

எங்க அப்பாவுக்கு என்ன பண்றதுன்னே தெரியலை. மகளே, எதுனா ரிப்பேருக்குன்னு கூப்பிடுங்க, அப்புறம் பேசிக்கறேன் அப்படின்னு உள்ளுக்குள்ள கறுவிகிட்டு அந்தப் பக்கம் போகாதயே இருந்துட்டாங்க. மூணுநாள் கழிச்சி அந்த பொண்ணு வந்து ரொம்ப அவசரமா கூப்பிடறாங்க. எலக்ட்ரீஷியனை வரச் சொல்லுவாங்கன்னு. இங்க யாரும எலக்ட்ரீஷியன் இல்லை அப்படின்னுட்டாரு அண்ணாரு.

ஏன் உங்க தம்பி எலக்ட்ரீஷியன் தானே. என்னா இல்லைன்னு சொல்றீங்க அப்படின்னுச்சு அந்தப் பொண்ணு.

தே, போகப் போறியா இல்லையா. அப்படின்னு மிரட்டினாரு அண்ணாரு. அம்மா விறுவிறுன்னு போயிட்டாங்க. மாரியம்மன் கோவில்ல அப்பாவைப் பார்த்து என்னா, உங்க அண்ணன் ஒரு மாதிரியா நடந்துக்கறாரு. அது எனக்கு புடிக்கலை அப்படின்னாங்க.



ஏன்னா நடந்துகிட்டாரு எங்க அண்ணனை அவரைப்பத்தி குத்தம் சொல்றதுக்கு நீ யாருன்னு கத்த ஆரம்பிச்சிட்டாரு எங்கப்பா. பக்கத்துல இருக்கறவங்க ரெண்டு மூணு பேர் திரும்பி பார்த்தாங்க. எங்கம்மாவுக்கு ஒரே பயம். அப்பா வந்து கத்தவே, ஏன் கத்தறீங்க. உங்க அண்ணன் வந்து உங்கூட தனியா பேசணும்னா நான் என்ன பண்ணுவேன். நான் உங்க மேல உயிருக்குயிரா இருக்கேன். அவரு வந்து அப்படி பேசினா எனக்கு எவ்வோ கஷ்டமா இருக்கும் அப்படின்னு சொலலியிருக்காங்க அம்மா.

அடிப்பாவி நலல வேலை சொன்னியே. நான தாண்டி எங்க அண்ணனை அனுப்பினேன். எனக்கு உன் மனசு தெரியாம இருந்தது. அண்ணனை போய் கேட்டுட்டு வரச்சொன்னேன். வாய் வார்த்தையா தெள்ளத் தெளிவா கேட்டுக்கலாம்னாரு அண்ணாரு நீங்களே கேட்டுட்டுவாங்கன்னு அனுப்பினேன். அண்ணன் ஒரு நிமிஷம் உங்கூட பேசணும்னு சொன்னது எனக்காகத்தானே தவிர அவருக்காக இல்லை. அது உத்தம புருஷன். என் கல்யாணத்துக்கு பொண்ணு பார்த்து கிட்டிருக்கோம். தகைஞ்சிடும் போல இருக்கு. அவரு உங்கிட்ட வந்தது அதுக்காகத்தான் உன்கிட்ட ஒரு வார்த்தை கேட்கலாம்னுதான். நீ உள்ள புகுந்து குழப்பிடாத தாயேன்னு சொன்னாரு.

எங்க அம்மாவுக்கு ஒரே வெட்கம். ஒரே சிரிப்பு நேரா கோவில்லேர்ந்து வீட்டுக்கு வந்து அண்ணன் கால்ல விழுந்து நான் தப்பு பண்ணிட்டேன். மன்னிச்சுக்கோங்கன்னு சொல்லிட்டுப் போயிடுச்சு.

அப்பாவோட அண்ணாருக்கு மறுபடியும் பயம். அப்புறம் எங்கப்பா போய் பேசி சமாதானமாகி அண்ணனுக்கு கல்யாணமான அடுத்த மூணாம் மாசமே அப்பாவுக்கும் கல்யாணம் ஆச்சு. அந்த அஞ்சு மாசத்துல வீட்ல பார்த்துப்பாங்களாம். தெருவுல

பார்த்துப்பாங்களாம். மாட்டுக் கொட்டாய்ல பார்த்துப்பாங்களாம். சினிமா தியேட்டர்ல பாத்துப்பாங்களாம், பத்தடி தூரத்துல நின்னு ஒருத்தரையொருத்தர் பார்த்துப்பாங்களே தவிர பேசினதுகூட இல்லையாம். அதுக்கு முன்னாடியாவது ஏதாவது பேசுவாங்களாம்.

காதலிக்கறதை பாவம்னு சொன்ன பிறகு, கல்யாணம்னு உறுதியான பிறகு பேசிக்கவே இல்லையாம். பார்க்கறதோட நிறுத்திகிட்டாங்களாம். இதுக்கு பேர்தான் லவ், இதுதான் லவ்.

ஏன் கல்யாணம்தான் நிச்சயமாச்சே போய் பேசியிருக்கலாமே.

எங்கப்பா தடாலடியா போய் வாடி சினிமாக்குப் போகலாம் அப்படின்னு கூப்பிட்டா எங்கம்மா வந்திருக்கணுமே, அவர் கூப்பிடலை. சில நேரங்கள்ல ஆபீஸ் போச்சு அதுப்போச்சு, இதுப்போச்சுன்னு சில்மிஷம் பண்ணுவாம். கல்யாணம்னு சொன்னவுடனே ஏன் அமைதி ஆயிட்டாங்க.

அங்கதான் ரெண்டு பேரும் மதிக்க ஆரம்பிச்சுட்டாங்க. போய் கூப்பிட்டோம்னா அவளுக்கு இடைஞ்சல் வரும் அவளைச்சுத்தி கேலி வரும். அவளுக்கு இடைஞ்சல் பண்ணக்கூடாதுன்னு அப்பா அமைதி ஆயிட்டாரு. யாரை லவ் பண்ணோமோ அவனே புருஷனா கிடைச்சுட்டான். இதை மரியாதையா காப்பாத்திக்கணும். இவள் வெறும் காதலி இல்லை. வீட்டுக்கு மருமகளா வரப்போறவ. அப்படின்னு அமைதி ஆயிட்டாங்க. நடவடிக்கைதான் அமைதி ஆச்சு. அப்போ இந்த மாதிரி இத்தனை டிவி. சேனல் கிடையாது. ரேடியோல இருக்கற விவிதபாரதி ரொம்ப பிரபலம்.

டிரான்ஸிஸ்டரும் வந்துடுச்சு. ஆனா, டிரான்ஸிஸ்டர் சின்னதா இருக்காது. பெருசா இருக்கும்.



எங்க போனாலும் அங்க தூக்கிட்டுப் போய் பாட்டு போட்டு எங்கப்பா வேலை செய்துகிட்டிருப்பாங்க.

அப்பா இவங்க வீட்ல எப்போ வேலை வரும்னு காத்துகிட்டிருந்து மறக்காத ரேடியோ செட் எடுத்துகிட்டுப் போயிடுவாங்க. அரை மணிநேரம் வேலையை ஒரு மணி நேரம் பார்ப்பாராம். எங்கம்மா ஹாலுக்கு வரவே மாட்டாங்களாம். ரூம்ல உட்கார்ந்து கதவு இடுக்கு வழியா பார்த்துகிட்டிருப்பாங்களாம். கதவிடுக்கு வழியா அவங்க பார்க்கறாங்கன்னு இவருக்கு தெரியுமாம்.

எங்கப்பாவுக்கு பிடிச்ச பாட்டு என்ன தெரியுமா. சிரித்து சிரித்து என்னை சிறையில் இட்டாய் கன்னம் சிவக்க சிவக்க வந்து கதை படித்தாய். எங்கப்பா அதை பாடினபோது இப்போ நாலு வருஷம் முன்னாடி அந்தக் கிழவிக்கு மூஞ்சி என்னமா சிவந்து போச்சு. எப்படி ஒரு சிரிப்பு. முழுக்க ஒரு ஆனந்தத்தோட சிரிப்பு. ஏன் பாடறேன்னு சொல்லி பட்டுனு அவர் தோள்பட்டையில் ஒரு அடி அடிக்கறாங்க. அப்பாவும், அம்மாவும் லவ் பண்றதைப் பார்க்கறதுக்கு கொடுத்து வைக்கணுங்க. நான் பார்த்திருக்கேன்."

மஞ்சு கண்ணில் நீர் திரள சொன்னாள். அவருக்கும் கண்ணோரம் நீர் கரை கட்டியது.

இதுவும் ஒரு வகையான காதல்தான் என்று சேதுராமன் நினைத்துக் கொண்டார்.

அப்பாவையும், தாயையும் காதலிக்கும் மனைவியை அவரும் காதலித்தார். மனைவியின் தகப்பனையும், தாயையும் காதலித்தார்.

"எங்க அப்பா அம்மாக்குள்ள சண்டை வரும். ஆனா, அது ஒருத்தர் மேல ஒருத்தருக்குண்டான அக்கறையினாலதான் வரும் சண்டையே தவிர, ஒரு நாளும் நெல் முனையளவு கூட ஒருத்தரையொருத்தர் வெறுத்த

இல்லை. ஒரு நாளைப் போல நாலு மணிக்கு சோறு சாப்பிடறீங்களே நல்லவா இருக்கு. இப்படித்தான் அம்மா கோச்சுப்பாங்க. பொண்ணுங்களுக்கு நூல் புடவை போதும்னு சொன்னா நான் என்னா பண்ணு வேன்னு தெரியாது. போய் நல்ல பட்டுப்புடவையா எடு அப்படின்னுதான் அப்பா கத்துவாரு.

எலக்ட்ரீஷியன் பொண்டாட்டிக்கு ஏன் பட்டுப் புடவை அப்படின்னு எங்கம்மா சொல்லிட்டாங் களாம். கடுங்கோபம் வந்துடுச்சு.

அவரு அங்க போய் இங்க போய் கடன் வாங்கி இடம் புடிச்சு ஷெஸ்ப் அடிச்சு ஒரு எலட்க்ரிகல் கடை ஆரம்பிச்சுட்டாங்க. மூணு நாலு பேருக்கு வேலை சொல்லிக் கொடுத்து சுத்தியுள்ள கிராமங் களுக்கெல்லாம் அவங்கதான் எலட்ரிகல் வேலை செய்தாங்க. காண்ட்ராக்ட் எடுத்தாங்க. பள்ளிக்கூடம், ஹோட்டல், வீடுன்னு தடதடதடன்னு கோச்சுகிட்ட நேரம் வேலைபிடிச்சுடுச்சு.

அவர் நல்ல நிலைக்கு வரக்காரணம் அப்பாவோட கோபம்தான். அம்மாவோட தூண்டுதல்தான். அப்போ லவ்வுன்னா என்னன்னு தெள்ளத் தெளிவா தெரிஞ்ச துவால தான் என்னை கூப்பிட்டு, இது ஜாக்கிரதையா செய்ய வேண்டிய விஷயம் கண்ணு. எங்கனா மனசை சடுபாடு பண்ணிடாத அப்படின்னாரு.

நான் ஜாதகப்படியே கொஞ்சம் திமிர் பிடிச்சவ. செல்லமா வளர்ந்த பொண்ணு. நான் லவ் பண்றா மாதிரி நம்மூர்ல யாரும் ஆள் இல்லைப்பா. எங்கனா வெளியூர்லேர்ந்து ஆள்வந்தா ஒரு வேளை செய்யலாம். நம்மள தேடிகிட்டு எங்கேயிருந்து வெளியூர் ஆள் வரப் போகுது. அதனால நீங்க கவலையே படாதீங்கன்னு சொல்லிட்டேன்.

ஆனா, லவ் பண்றதுதான் உத்தமம்கற மாதிரி காலம் மாறிப்போச்சு. இதுங்க பாரு எவ்ளோ நல்ல குடும்பம்.



கொஞ்சம் சுதந்திரமா குழந்தைங்கள விட்டவுடனே அதுங்க தாந்தோனியா போயிடுதுங்க. அதைப் பார்த்து பயந்துகிட்டுதான் உங்கிட்ட பேசினேனே தவிர உன் மேல அவ நம்பிக்கையா பேசலைன்னாரு.

"என்னை பிடிச்சுருக்கான்னு கேட்ட போது பிடிச்சு ருக்குன்னு சொன்னியே புரிஞ்சு சொன்னியா, புரி யாத சொன்னியா" ஆவலோடு சேதுராமன் கேட்டார்.

"நாகசாமி கவுண்டர் கல்யாணத்துக்கு வந்திருந்தீங்க இல்ல. அங்க பார்த்தோமே."

"யாரு..."

"நான், எங்கம்மா, எங்க சித்தி, எங்க பட்டாளமே பார்த்தது."

"நான பார்க்கலையே."

"நாங்க பார்க்க வரோம்ன்னா வந்து சொல்ல முடி யும். நீங்க என்னா பண்றீங்க, ஏது பண்றீங்க எப்படி அப்படின்னு நாங்க மூலைக்கு ஒருத்தரா நின்னு பார்த்தோம். உங்களை சீட்டு ஆடக் கூப்பிட்டாங்க."

"ஆமாம்."

"நீங்க போகலை."

"ஆமாம்."

"அது எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது."

"எனக்கு சீட்டு ஆடத் தெரியாது."

"இது ஆச்சரியமான விஷயமில்லை. தெசவு பண்ற வங்க நிறைய பேரு, சீட்டு ஆட்டத்துலதான் வாழ்க்கை யையே தொலைப்பாங்க. மார்கழி பனிலேர்ந்து நூல் அறுத்துட்டாங்கன்னா அப்புறம் தாயப்பால், சீட்டு அப்படின்னு நாள் பூரா சூதாட்டம்தான். சாப்பிடறது, சூதாடறது... சாப்பிடறது சூதாடறது. எனக்கு கொஞ்சம் கூட பிடிக்காது."

"எனக்கும் பிடிக்காது மஞ்சு."

"நேரத்தை கொலை பண்றவன்தான் சீட்டாடுவான். உழைக்கணுங்கற வெறி இல்லாதவன் தான் சீட்டு ஆடுவான். கொஞ்சம் உழைச்சிட்டு ரொம்ப உழைச்சிட்டதா அலட்டிக்கறவன் தான் சீட்டு ஆடுவான். உழைக்கிறவன் ஓய்வெடுக்கணும்னா புது வேலையில உட்கார்ந்துக்கணும். அப்போ அதுதான் ஓய்வு. ஒரே வேலையையே செய்தகிட்டிருக்காத வேலையை மாத்தி மாத்தி செய்யறபோது அவனுக்கு ஓய்வே தேவைப்படாது. சீட்டாட்டமே அவசியம் இருக்காது.

நீங்க சாப்பிடும் போது நாங்க எதிர்க்கத்தான் உட்கார்ந்துகிட்டோம். நிதானமா சாப்பிட்டீங்க. அதுவும் எனக்கு பிடிச்சிருந்தது. சும்மா உருட்டி உருட்டி விழுங்காத ரொம்ப நாசூக்கா சாப்பிட்டீங்க, எங்க வீட்ல எல்லாருக்கும் அது பிடிச்சிருந்தது."

"எங்கம்மா கத்துக் கொடுத்தது."

சேதுராமன் பதில் சொன்னார்.

"சாப்பிடற விஷயம் அம்மா சொல்லித்தராத வராது. உருட்டி உருண்டை பிடிச்சு சாப்பிடவே கூடாது. எங்க வீட்ல புறங்கையில் அடிப்பாங்க. கரும காரியத்துக்குத்தான் அப்படி பிடிப்பாங்க. சாப்பிடும் போது உதிரியாத்தான் சாப்பிடணும். அந்த கல்யாணத்துல முன்னாடி கை கழுவ, முந்தி முந்தி கழுவ சண்டை. ரெண்டு மூணு பேர் கை கழுவறதுக்கு ட்ரை பண்றாங்க. நீங்க நிதானமா காத்திருந்து எல்லாரும் போன பிறகு ஒரு கிழவியை கை அலம்புங்கன்னு சொல்லி, அந்தம்மாவை மொள்ள கூட்டிகிட்டு போய், வெளிப்பக்கம் விட்டு அப்புறம் கை அலம்ப வச்சிட்டுப் போனீங்க. யாரும் எதுவும் உங்களைச் செய்யச் சொல்லலை, ஆனா, நீங்களா செய்தீங்க. இது அத்தனையும் எனக்கு பிடிச்சிருந்தது."



"இதெல்லாம் நான் நடுவுல கத்துகிட்டேன் மஞ்சு. எனக்கு சொல்லிக் கொடுத்தாங்க."

"யாரு."

மஞ்சு கண்களை இடுக்கிக் கொண்டு கூர்மையாக பார்த்தபடி கேட்டாள்.

சேதுராமன் மௌனமாக உட்கார்ந்தார்.

"கேட்கறேன் இல்ல. யார் கத்துக் கொடுத்தது. இதெல்லாம் அம்மா கத்துக் கொடுத்ததுன்னு சொல்லாதீங்க. நான் நம்ப மாட்டேன். சாப்பாடு பிசைஞ்சு சாப்பிடக்கூடாது. கலந்து சாப்பிடணும்னு அம்மா சொல்லிக் கொடுத்திருப்பாங்க. ஆனா, கை கழுவற இடத்துல இருக்கற சண்டைலேர்ந்து நகர்ந்துபோய் மத்தவங்களுக்கு உதவி செய்யற புத்தி எப்படி வந்தது."

சேதுராமன் மெல்ல எழுந்து ஜன்னல் பக்கம் போனார்.

மஞ்சு அருகே போய் நின்று கொண்டாள். முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

"என்னா, தொண்டையில என்னா சிக்கிக்கிட்டிருக்கு. அவஸ்தை படறீங்க. இந்த மாதிரி விஷயங்களை ஏதாவது பேசறபோது டக்குனு எழுந்து நகர்ந்து போயிடறீங்க. எங்கயோ தொலைதூரம் பார்க்கறீங்க. என்னா மனசுல இருக்கு. எங்க கிட்ட கூட சொல்லக் கூடாதபடிக்கு ஒரு விஷயத்த நீங்க நெஞ்சுல வச்சுகிட்டிருந்தீங்கன்னா இது நியாயமா. இது தர்மமா. நான் எதுனா மறைச்சுருக்கேனா. நான் ஏதாவது ரகசியம் வச்சுருக்கேனா. சகலமும் உங்க முன்னாடி கொட்டி வைக்கலை. நீங்க வச்சிங்கன்னா என்ன."

"சொல்லிடலாம். என்னை பிடிக்காதப் போயிடுமோன்னு பயம்."

"சொல்லலைன்னா தான் பிடிக்காது. சொன்னீங்கன்னாக்க ரொம்ப பிடிச்சுடும்."

"மஞ்சு எனக்கு பயமாத்தான் இருக்கு."

"என்னா பயம்."

"என்னை வெறுத்துடுவியோன்னு பயம்."

"அடச்சே. என்ன பேச்சு. யார் யாரை வெறுக்கறது. ஒன்பது வருஷம் குடித்தனம் பண்ணிட்டேன். எப்படி வெறுக்க முடியும் நீங்க யாருன்னு நல்லா புரிஞ்சுகிட்டிருக்கேன். எப்படி வெறுக்க முடியும். ரெண்டு குழந்தைகளுக்கு அம்மாவாகி அதை கொஞ்சற அப்பனா உங்களை பார்த்திருக்கேன். எப்படி வெறுக்க முடியும். இஷ்டப்பட்டதை வாங்கி கொடுக்கற, என்னை மரியாதை பண்ற ஒரு நல்ல புருஷனா நான் உங்களை கவனிச்சுருக்கேன். ஏன் வெறுக்கணும் உங்களை."

"நான் ஒரு பொண்ணை லவ் பண்ணியிருக்கேன், மஞ்சு."

"அவ்ளோதானே. இதென்ன பெரிய ரகசியம் வேண்டிக்கிடக்கு. வயசு நேரத்துல எல்லாரும் பண்றதுதான், யாரது."

"விமலா."

அழுத்தம் திருத்தமாக சேதுராமன் அந்தப் பெயரைச் சொன்னார்.

"ரொம்ப அழகா இருப்பாளா."

மஞ்சுவின் குரலில் மெல்லியதாய் ஒரு பொறாமை இழையோடியது.

"பார்த்தியா. முதல் கேள்வியே உங்கிட்ட என்னா வருது. அவ நல்லவளான்னு வரலை. அழகா இருப்பாளான்னு வருது. இதுலேர்ந்து என்ன தெரியுது. பொறாமை தெரியுது."

"இருக்குங்க. இல்லாம எல்லாம் போகாது. பொறாமை பொம்பளைங்களுக்கு சர்வசாதாரணமா இருக்கற விஷயம். சட்டுனு பொண்டாட்டிய ஆம்பளை இறுக்கி வச்சுக்கறதவிட என் புருஷன்னு பொம்பளை ஆம்பளைய இறுக்கி வச்சுக்கறதுக்கு ஆசைப்படுவோம். ஆனாலும் நீங்க சொல்றது நல்லது. நான் கேட்கறது எனக்கு நல்லது. அப்படி என்ன பண்ணி என் புருஷனை நீ மயக்கிட்ட. அதைவிட பிரமாதமா நான் பண்ணுவேன்னு எனக்குள்ள ஒரு வெறி வந்துடும். உங்களை நம்ம குடும்பத்தை நான் இன்னும் வேகமா நேசிக்க ஆரம்பிச்சுடுவேன். இந்த மஞ்சு நூறு விமலாக்கு சமம் அப்படின்னு பூ வைத்த தலைப்பை இழுத்து சொருகிட்டு கிளம்பிடுவேன்."

"நமக்குள்ள சண்டை வந்துடுச்சுன்னா."

"லேசா வரத்தான் வரும். சண்டை வந்தா ஆம்பளைக்கு பிடிக்காத போயிடும். சொல்லிட்டு நான் சட்டுன்னு விலகி வந்துடுவேன். உங்களை கொண்டாட ஆரம்பிச்சுடுவேன். யாரு, யாரு விமலா எங்க லவ் பண்ணிங்க. எந்த வயசுல லவ் பண்ணிங்க. நீங்க லவ் பண்ணும்படியா அந்த பொண்ணுகிட்ட என்ன இருந்தது. என்ன சொல்லுங்க."

"இன்னிக்கு ராத்திரி சிவராத்திரியா."

"ஆமாம். சிவராத்திரி. காலையில வில்வம் வாங்கிட்டு வந்து பூஜை பண்ணிட்டேன். சொல்லுங்க."

சேதுராமன் பதினோராம் வகுப்புக்குள் சந்தோஷமாக நுழைந்தான்.

"தம்பி, வாடா. இந்த செக்ஷனா நீ. வா. வா."

ஆசிரியர் அவனை மனமார வரவேற்றார்.

"இந்த செக்ஷனுக்கு சேதுராமன் வந்துட்டாம்ப்பா, பாடறது, ஆடறது, படம் வரையறது எல்லாத்துக்கும் ஒரு ஆள் வந்துடுச்சு."

ஆசிரியர் அவனை வரவேற்க, அவனுக்கு அடுத்த சீட்டு கொடுக்க பல மாணவர்கள் முன் வந்தார்கள்.

"இரு இரு. அவனை சரியான இடத்துல உட்கார வைக்கணும். பார்வை முன் சீட்லயும் வராது. பின் சீட்லயும் வராது. மத்திம சீட்லதான் வரும். டேய் மூணாவது பெஞ்சு கடைசி கார்னர்ல. ஆங். அந்த இடத்துல உட்கார்ந்துக்கோ. பெஞ்சு நல்லாயிருக்கா. சீட்டு வசதியா இருக்கா. ரொம்ப சந்தோஷம். நான் இன்னிக்கு பாடம் நடத்தப் போறதில்லை. முதன் முதல் க்ளாஸ் எதுனா பாட்டு பாடி ஜாலியா இருந் துட்டுப் போகலாம்டா. என்னா சொல்றீங்க."

ஆசிரியர் சொல்ல பையன்கள் கைகொட்டி வரவேற்றனர்.

"சேதுராமா எதுனா பாட்டு பாடலாமா."

"பாடலாம் ஸார்."

"என்னாது."

"கடவுள் வணக்கம்."

"பாடறா."

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நான்கும் கலந்துனக்கு நான் தருவேன். கோலம் செய் துங்கக்கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா."

என்று பாட அத்தனை மாணவர்களும் யாரும் சொல்லாமல் தானாக எழுந்திருந்து கை கூப்பினார் கள்.

"ஆங். அடுத்தது இன்னொரு பாட்டு பாடு."

ஆசிரியர் சொல்ல,

"அமுதும் தேனும் எதற்கு நீங்கள் அருகினில் இருக்கையிலே எனக்கு."

என்று ஆசிரியர் பார்த்துப் பாட பையன்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.



"இதான். இதான் சேதுராமன்" என்று ஆசிரியர் அவனை தட்டிக் கொடுத்தார்.

"வேற என்னடா பண்ணலாம்."

சேதுராமன் சட்டென்று "பேப்பர் படிக்கலாம் ஸார்."

"என்னது"

"பேப்பர் வாங்கிட்டு வந்து உரக்க படிக்கலாம் ஸார். அதைப்பத்தி பேசலாம் ஸார்."

"சபாஷ் சிங்கக்குட்டிடா. டேய். போய் பேப்பர் வாங்கிட்டு வா."

பாக்கெட்டில் கைவிட்டு ஒரு ரூபாய் தாளை ஒரு பையனிடம் நீட்ட ஐந்தாவது நிமிடம் தினசரி பேப்பர் வந்தது.

முதல் பக்கச் செய்தியை ஒருவன் வாசித்தான். அடுத்த பக்கச் செய்தியை ஒருவன் வாசித்தான். உள் பக்கத்தை ஒருவன் வாசித்தான். கடைசிப் பகுதியை ஒருவன் வாசித்தான். ஆறாவது பக்கத்திலுள்ள உலகச் செய்திகளை ஒருவன் வாசித்தான். பருவநிலை மாற்றத்தை இன்னொருவன் வாசித்தான். சேதுராமன் வாசிக்கும்போது இன்றைய நிகழ்ச்சிகள் என்கிற கடைசி பக்கத்து செய்திதான் இருந்தது.

"பரவாயில்லை வாசி. அதுவும் முக்கியமான விஷயம்தானே."

அரசியல் நிகழ்ச்சிகள் இருந்தன. ஆன்மீகமான கூட்டங்களைப் பற்றிய விவரங்கள் இருந்தன. கடைசியாக கட்டம் கட்டி ஒரு தகவல் இருந்தது.

ஈரோடு இளைஞர் பேரவை எல்லா பள்ளிகளையும் ஒரு கூட்டத்திற்கு அழைத்திருந்தது. பரஸ்பர அறிமுகங் களும், திட்டங்களும் என்று தலைப்பிடப் பட்டிருந்தது.

"சேதுராமா இங்க கொண்டா அதை"

ஆசிரியர் வாங்கி படித்தார்.

"டேய் போகலாமாடா சாயந்தரம். யார் யாருக்கு வரத்துக்கு விருப்பம் உண்டோ, யார் யாருக்கு வீடு கிட்டக்க இருக்கோ அவங்க வாங்க. அவங்க ஆரம்பிக்கறதே நாலரை மணின்னு போட்டிருக்கான். முடிக்கறதுக்கு ஏழரை எட்டு ஆயிடும். அப்புறம் தொலைதூரம் இருக்கறவங்க வீட்டுக்குப் போகமுடியாது. யார் யாருக்கு கிட்ட வீடு இருக்கோ அவங்க வாங்கப்பா" என்று சொல்ல பதினாறு பெயர்களை சேதுராமன் குறித்துக் கொண்டான். அதை எடுத்துக் கொண்டு போய் தலைமை ஆசிரியரிடம் பேசி அனுமதி பெற்றான்.

"யூனிப் பார்ஃம்லயா ஸார் வரணும்" என்று சேதுராமன் கேட்க, "சே, எல்லாம் யூனி பார்ஃம்ல தான் வரணும்" என்று ஆசிரியர் சொல்ல "இல்லை ஸார் வீட்டுக்கு போய் முகம் கை கால் கழுவிகிட்டு காபி, டிபன் சாப்பிட்டு வேற சட்டையில வரோம் ஸார்."

ஆசிரியர் யோசித்தார்.

"ஆமாம் உங்களுக்கு கவான் கவான்னு பசிக்கும் இல்ல; சரி அப்படியே பண்ணுங்க. பதினாறு பேரும் எங்க வந்துடறீங்க."

"நேரா அந்த இடத்துக்கே வந்துடறோம்."

"ஒரு குறிப்பிட்ட இடம் சொல்லுப்பா."

"மண்டபத்து வாசல்ல நான் பசங்களை நிக்க வைக்கறேன் ஸார். நீங்க வாங்க ஸார்."

சேதுராமன் வயது பதினேழு. ஆனால் வயதுக்கு மீறிய வளர்ச்சி. உடல் பருமன். நல்ல முதிர்ந்த குரல் உடைய இளைஞன். தன் வாழ்க்கை அனுபவத்தாலும் சிறந்து நின்றான். இளம் வயதிலேயே அப்பாவை இழந்து அம்மாவின் ஆதரவில் வளர்ந்து உறவுகள்



ஏதோ உதவி செய்ய அவர்களுக்கு நன்றி விசுவாசத்தோடு பதிலுக்கு உழைத்துப் போட்டு பள்ளியிலும் நல்ல மாணவனாக தேர்ந்து நின்றான்.

பத்தாவது படிக்கும்போது மொத்த மாநிலத்திலேயே நாப்பத்தேழாவது இடம். பள்ளியில் நாலாவது இடம்.

பத்தாவது படிக்கும் வரை இரண்டு உதவித் தொகை அவன் வாங்கித் தந்தான். ஒன்று தேர்வு எழுதி போட்டியிட்ட உதவித் தொகை. அரசு வழங்கிய உதவித்தொகை. மூன்றாவது உதவித் தொகையையும் கொடுக்க முன்வந்த போது இல்லை எனக்கு வேண்டாம். வேறு மாணவனுக்குக் கொடுங்கள் என்று இன்னொரு மாணவனை கைகாட்டினான்.

அந்த இரண்டு உதவித் தொகையும் அவன் படிப்புக்கு போதுமானதாய் இருந்தன. அம்மாவின் சம்பாத்தியம் வயிறு நிறைத்தது. ஒரு அண்ணனும், ஒரு தங்கையும் உடனிருந்து பேசி வாழ்க்கையை சந்தோஷமாக்கினார்கள்.

தொந்திரவில்லாத குழந்தைகள் என்று நல்ல உறவுகள் முடிந்தபோது முடிந்த உதவியை செய்தன. நன்றாகப் படிக்கிறான் என்று கேள்விப்பட்டு மனமுவந்து பாராட்டின. உதவி செய்ய முடியாதவர்கள் வார்த்தைகளால் உற்சாகப் படுத்தினார்கள்.

அப்பா இல்லை என்ற ஒரு குறையைத் தவிர வீடு மற்ற வேதனைகள் படாமல் ஏழ்மை இருப்பினும் எடுப்பாக இருந்தது. உணவுத் தட்டுப்பாடு இருப்பினும் அன்புத் தட்டுப்பாடு அறவே இல்லை.

இவையே சேதுராமன் பாடவும், ஆடவும், பேசவும், கட்டுரை எழுதவும் வைத்தன.

லஞ்சம் கொடுக்கின்ற பெற்றோர்களே என்று ஒரு கவிதை எழுதி அதில் பிள்ளைகள் படிப்புக்காக

லஞ்சம் கொடுக்கின்ற பெற்றோர்களை சாடியிருந்தான். இந்தப் பிள்ளைக்கு எப்படி படிப்பு வரும் என்று கேட்டிருந்தான்.

செடிக்கு விஷமூற்றி மரமாக்குங்கள்.

கனியும் அமிர்தமாகவா வரும்.

அதுவும் விஷமாகத்தானே வரும் என்று முடித்திருந்தான்.

மது குடியுங்கள் தவறேயில்லை என்று இன்னொரு கவிதை எழுதியிருந்தான்.

முதல் வரியை படித்துவிட்டு தலைமையாசிரியர் மற்ற ஆசிரியர்கள் எல்லோரும் எழுந்து விட்டார்கள். மாணவர்கள் கைகூப்பினார்கள்.

அவன் கையமர்த்திவிட்டு தொடர்ந்து படித்தான். அதிலுள்ள விஷயங்களை எடுத்துக் காட்டி இத்தனை விஷயங்களையும் கலக்கிக் குடிப்பது என்றால் ஏதோ காரணமாகத்தானே செய்வீர்கள். பரவாயில்லை குடியுங்கள். மனிதர்கள் எல்லோரும் மரணத்தை துரத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் நீங்கள் தழுவி சந்தோஷம் கொள்கிறீர்கள். ஆஹா மரணத்தை தழுவியவர்களே நீங்களே வாழ்க என்று முடித்திருந்தான்.

சம்மட்டி அடியாய் கவிதை இருந்தது.

திருவல்லிக்கேணி யானை தின்று போட்ட கரும்பு என்று பாரதியை ஒரு கவிஞர் வர்ணித்தார்.

யானை தின்று போட்ட கரும்பை தின்ன வந்த எறும்பு நான் என்று தன்னை சொல்லிக் கொண்டான்.

கை தட்டல்கள் குறைய வெகு நேரமாயிற்று.

ஆசிரியர்கள் எழுந்து நின்று பாராட்டினார்கள்.

கவிஞர் வாலி ஸாருக்கு இதை எழுதிப் போடுய்யா சந்தோஷப்படுவாரு என்று உற்சாகப்படுத்தினார்கள்.



அவன் எழுதிப்போட்ட கவிஞரிடமிருந்து அவனுக்கொரு பாராட்டுக் கடிதம் வந்தது. அந்தப் பாராட்டுக் கடிதம் வெகுநாள் பள்ளியின் கண்ணாடி பீரோவில் வைக்கப்பட்டிருந்தது.

பேஸ்கட்பாலில் அவன் பள்ளிக்கு மிகப்பெரிய பெயர் இருந்தது. அதில் அவனுக்கு முக்கிய பங்கு இருந்தது.

குழுவாக இருப்பதைவிட தனியாக இருப்பது சிறந்தது என்று பாட்மிட்டனுக்குப் போனான். ஒற்றையர் ஆட்டத்தில் வெள்ளிக் கோப்பைகள் வாங்கி வந்தான். தடகளப் போட்டியில் ஜாவலியன் த்ரோ என்ற ஈட்டி எறிதலிலும், குண்டு எறிதலிலும் முன்னால் வந்தான். விடுமுறை நாட்களில் அவன் அம்மா வேலை செய்யும் நெசவுப் பட்டறைக்குப் போய் அங்கு எடுபிடி வேலை செய்து ஒரு நாளைக்கு பத்து ரூபாய் சம்பாதித்தான். அந்தக் காசில் அம்மா மீனும், கறியும் வாங்கி ருசியாக சமைத்துப் போட்டாள்.

"எத்தனை பேருப்பா வந்திருக்கீங்க."

சேதுராமன் கேட்க மாணவர்கள் எண்ணிப் பார்த்துக் கொண்டான்.

"ரெண்டு பேர் குறையுது."

"அவுங்க அப்பா அம்மாவோட வந்திருக்காங்க. உள்ள போயிட்டாங்க."

"இன்னும் வாத்தியாரைக் காணோமே."

ஆசிரியர் மனைவியோடும், நாலு வயது பேத்தியோடும் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்க மாணவர்கள் ஆரவாரத்துடன் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"டேய், சேதுராமா, எதுனா கவிதை வச்சிருக்கியா. எடுத்து விடுறா."

"என்ன ஸார் இரான்னு கேட்கறீங்க."

"மூப்பது பள்ளிகூடத்துலேர்ந்து ரெண்டு ரெண்டு மாணவர்களா வந்திருக்காங்க. நம்ம பள்ளிக் கூடத்துக்கும் லெட்டர் அனுப்பியிருக்காங்க. அந்த சோமபேதினார்க் சுருட்டி கீழபோட்டுட்டான். நான் வரலைன்னு நினைச்சிட்டிருக்காங்க. நான் போன் பண்ணும் போது ஏன் ஸார் பதிலே அனுப்பலைன்னான். இல்லீங்க வந்து கலந்துக்கணும்னு சொல்லியிருக்கேன். இடமில்லையே கடைசி வரிசையிலதான் உட்காரணும் அப்படின்னு சொல்லியிருக்காங்க. அதனால என்ன அப்படின்னு சொல்லியிருக்கேன். டேய், கடைசி வரிசை கொடுத்தா கூட முதல் பரிசை தட்டிகிட்டு போயிடணும்டா. கவிதை வாசிப்பு இருக்கான்டா. ஏதுனா பண்ணுடா, டேய்" என்று தனியே கூட்டிக் கொண்டு போய் கிசுகிசுத்தார்.

மாணவர்கள் அவனையும், ஆசிரியரையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். என்ன என்று தொலைதூரத்திலிருந்து வியந்து கொண்டிருந்தார்கள்.

"வேணாம் ஸார். வெளிய யாருக்கும் சொல்லாதீங்க. நான் ஏதாவது பண்ணிடறேன்" என்று சேதுராமன் உறுதி மொழி அளித்தான்.

"கடைசியா கலந்துக்க முடியுமா. அப்படியொரு வாய்ப்பு கொடுத்தா அந்த நேரத்துலயும் எழுதலாம் ஸார்."

"அப்படித்தான் சொல்லியிருக்கேன். கடைசியா எங்க பையன் வருவான்னு, கவிதைக்கு என்ன தலைப்பு தெரியுமா."

"என்ன ஸார்."

"சொல்லும் மொழி... சொல். எனக்கு ஒண்ணும் புரியலையேடா."



"எனக்கு புரியுது ஸார்." சேதுராமன் சொல்ல அந்தப் பதினேழு வயது பையனை அந்த ஐம்பத்திரண்டு வயது வாத்தியார் வியப்போடு பார்த்தார்.

"நிஜம்தானா, புரியுதாடா."

"புரியுது ஸார்" அவன் பதில் சொன்னான்.

மொழி என்பது வழிவழியாக வந்த சந்தோஷம். மனிதன் தன் மனதிற்கு தானே நெய்த ஆடை. மொழி என்பது தங்க நகை வைர அட்டிகை. அது வெள்ளியாகவும் என்னைப் போல மின்னுவதுண்டு.

அவன் வராண்டாவில் உட்கார்ந்து எழுதத் துவங்கினான்.

உள்ளே வேறு ஏதோ நிகழ்ச்சிகள் ஓடிக் கொண்டிருந்தது.

யாரோ சில பெண்கள் அவனைக் கடந்து போனார்கள்.

"குழந்தைக்கு ஒரு மொழியுண்டு
தாய்க்கு அதன் லிபி தெரியும்
கன்றுக்கு ஒரு மொழியுண்டு
பசுவுக்கு அதன் தேவைபுரியும்
மலருக்கும் ஒரு மொழியுண்டு
வண்டுகள் வந்து குடிக்கும் போகும்
காற்றுக்கும் சொல்வதற்கு செய்தி உண்டு
மூங்கில் குழல்கள் அதை மொழி பெயர்க்கும்
சுருங்கச் சொல்வதென்றால் வழித்தபடி மொழிவதல்ல மொழி
வாழும்படி மொழிவது, வாழ்ந்தபடி மொழிவது
வாழ்ந்த அனுபவத்தை மொழிவது."

அவனுக்கு எழுத எழுத சந்தோஷமாக இருந்தது.

"ஒற்றைச் சொல்லுக்கு ஒன்பது அர்த்தங்கள்
பள்ளிக்கூட மணி காலையில் அடித்தால் வா வா என்று அர்த்தம்
மாலையில் அடித்தால் விடுதலை என்று அர்த்தம்
போதும் தொல்லை விட்டுது போ என்று அர்த்தம்

உடம்பு ஒரு மொழி அது இறுக்கத் தைத்த தோலாடை
வகிடு எடுத்து பின்னிய பின்னல்
வாரி முடிந்த குடுமி சகலமும் பேசும்
மொழியை தேடும்முன் மனதை தேடுங்கள்
உங்கள் மனது உங்களுக்கு என்ன
சொல்கிறது என்று உற்றுப் பாருங்கள்
ஓ என்று இரையும் மனம் உற்றுப்பார்க்க
மெல்ல சுருங்கும் ஓரிரண்டு வார்த்தைமட்டுமே பேசும்
அதைக் கவிதையாக்கினால் உலகம் புகழும்
அப்படிப்பட்ட கைவேலை கைவரவில்லை
மாறாய் உள்ளுக்குள் இரைந்த இரைச்சலை
உங்கள் முன் வைத்திருக்கிறேன்
கேட்டுக் கொண்டதற்கு நன்றி
இதில் நிறையிருப்பின்
அது என்குருவின் குணம்
குறையிருப்பின்
எனக்குள் இருக்கிற சினிமாத்தனம்.

சொல்லிவிட்டு அவனே சிரித்தான்.

தொலைவிலிருந்து யாரோ ஒரு பெண் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் மறுமுறை குனிந்து எழுதியதை படித்து விட்டு ஆசிரியரிடம் போய் சட்டென்று கால் தொட்டான்.

"என்னடா என்னாச்சு." ஆவலாகக் கேட்டார்.

"நல்லா வந்திருக்கு ஸார். பேயாட்டம் ஆடப் போறேன். நம்ம பசங்கள ஓயாத கை தட்டச் சொல்லுங்க."

"எத்தினி பக்கம். ஏழு பக்கமாடா. இவ்ளோ சீக்கிரமாவா ஏழு பக்கம் எழுதற?"

"பக்கம் முக்கியமில்லை ஸார். பதமா வந்திருக்காங்கறது தான் முக்கியம். கைதட்டறதுலதான் இருக்கு."



அவன் கடைசி பெஞ்ச்சில் உட்கார்ந்து கொண்டான். அவன் பெயரைக் கூப்பிட்டார்கள்.

அவன் தயங்கினான்.

இன்னொரு முறை கூப்பிட்டார்கள்.

எழுந்து நின்றான்.

எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

அவன் நடந்து மேடை நோக்கிப் போனான்.

அவனுடைய பட்டாளம் கைதட்டியது. மேடை ஏறும் வரை கை வலிக்கத் தட்டியது.

ஆசிரியர் போதும் என்று கை காண்பித்தார்.

அவன் கவிதை வாசிக் ஆரம்பித்தான்.

பெரிய உருவம். கனத்த உருவம்.

அவன் குரல் சபை முழுவதும் ஆக்ரமித்துக் கொண்டது. தமிழ் தங்கு தடையின்றி பாய்ந்தது.

எதை எதையோ கவிதை என்று ஏதோ மாணவர்கள் எழுதிக் கொண்டு வந்திருக்க, அதை பொறுத்துப் பொறுத்து கேட்ட கூட்டம் இந்தக் கவிதையினுடைய சிறப்பு நடையைப் பார்த்து ஹா.. என்று வியந்தது.

இரண்டு மூன்று இடங்களில் கைதட்டியது.

யாரோ ஒருவர் வாய் விட்டுப் பாராட்டினார்.

அந்தக் கூட்டத்தில் மாணவிகள் நன்றாக கைதட்டினார்கள். சபை வாய் விட்டுச் சிரித்தது.

கவிதையை படித்தவுடன் வாத்தியார் மாணவருக்கு சைகை செய்தார். அவர்கள் பிளந்து கட்டினார்கள். கூட்டம் எழுந்து நின்று கைதட்டியது.

அவன் சுருட்டிய பேப்பரோடு கீழிறங்க பல பெரிய மனிதர்கள் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தார்கள். கைகுலுக்கினார்கள். தலையில் வைத்து ஆசிர்வாதம் செய்தார்கள்.

அவ்வளவு வேகமான உண்மையான பாராட்டை அவன் அதுவரை அனுபவித்ததேயில்லை. அவனுக்கு உடம்பு நடுங்கியது. முகம் வெளிறியது. நாலா பக்கமும் கண்கள் அலைந்தன. என்ன செய்வது என்று தெரியாமல் கையில் இருக்கிற பேப்பரை மடித்து நீட்டி நீவி அவஸ்தை பட்டுக் கொண்டிருந்தான்.

யாரோ அந்தப் பேப்பரை வாங்கிக் கொண்டார்கள். யார் வாங்கிக் கொண்டார்கள் என்று பார்க்க முடியவில்லை.

இடது பக்கமும், வலது பக்கமும், பின்பக்கமுமாக பாராட்டிக் கொண்டிருந்தார்கள்.

ஆசிரியர் முன்னே வந்து அவனை கட்டித் தழுவிக் கொண்டார்

நான் இப்போ சொல்றேன் சேது. நீ பெரிய அளாவே, ரொம்ப ரொம்ப பெரிய ஆளா வருவ என்று தலையில் கைவைத்து ஆசிர்வதித்தார்.

அவன் கீழே குனிந்து ஆசிரியர் கால்களை கட்டிக் கொண்டான். கண்ணீர் பொங்கி சில துளிகள் ஆசிரியர் கால்களில் விழுந்தன.

முதல் பரிசு சேதுராமன் என்று அவன் பெயர் சொல்லி, அவன் பள்ளியின் பெயரைச் சொல்லி கவிதைக்கான பரிசை கொடுத்தார்கள்.

அது சுழற்கேடயம். அவனுக்கென்று சிறப்புப் பரிசாக சிவப்பு ரிப்பனில் கோர்த்த வெள்ளி பதக்கம், விவேகானந்தர் பொம்மையுடன், அட்லஸ் மேப்பும், பாராட்டு பத்திரமும் கொடுத்தார்கள்.

இந்த முறை மேடையில் ஏறும்போது ஒருவன் தன் பையிலிருந்த பேனாவை உருவி "நல்ல பார்க்கர் பேனா, அதிர்ஷ்டமானது. வச்சுக்கோ" என்று அவன் பையில் சொருகினான். வேறு யாரோ ஒருவர் ஐம்பது ரூபாய் தான் சொருகினார்.



"காசு வேணாங்க" என்று மறுத்த போது "காசு வேணாம்னு ஒரு போதும் சொல்லாத. தப்பா காசு சம்பாதிக்காதே. நல்லா வர காசை தள்ளாத," என்று அறிவுறுத்தினார்கள்.

அவன் வாங்கி கண்ணில் ஒற்றிக் கொண்டான். அவர் சந்தோஷமானார்.

காசை ஆசிரியரிடம் நீட்டும் போது, "அது உனக்கு. கொண்டு போய் உங்கம்மாகிட்ட கொடு. கால்ல விழுந்து நமஸ்காரம் பண்ணு," என்று சொல்ல அதே விதமாகச் செய்தான்.

அம்மா வெகுநாள் அந்தக் காசை மாற்றாமல் தடவித் தடவி வைத்துக் கொண்டிருந்தாள்.

அந்த விழா முடிந்த இருபத்தைந்தாவது நாள் அவனுக்கு ஒரு கடிதம் வந்தது.

வாழ்க்கையில் முதன் முதலாக மிஸ்டர் சேதுராமன் என்று விலாசம் எழுதி ஒரு கடிதம் வந்திருந்தது.

பிரித்தான். நான்கு பக்கங்களுக்கு முத்து முத்தாக எழுதியிருந்தது.

நீங்கள் கிழித்து விடுவீர்களோ என்று பயந்து உங்கள் கையில் இருக்கிற கவிதையை நான் தான் வாங்கிக் கொண்டேன். மறுபடியும் கொடுக்க வேண்டும் என்று முயற்சித்தபோது உங்களைச் சுற்றியிருக்கிற கூட்டம் குறையவேயில்லை. நீங்களும் உங்கள் மாணவர்களோடு வெளியேறிவிட்டீர்கள். நான் உடனடியாக ஊருக்கு திரும்ப வேண்டியிருந்ததால் கவிதையை கொடுக்க முடியவில்லை. எடுத்து வந்ததற்கு மன்னிக்கவும். கவிதையை பலமுறை படித்துப் பார்த்தேன். மிகவும் நன்றாக இருந்தது. இந்தக் கவிதையை நீங்கள் வராண்டாவில் அப்பொழுதுதான் உட்கார்ந்து எழுதினீர்கள் என்று எனக்குத் தெரியும். அதை நான் வேடிக்கை

பார்த்தேன். இவ்வளவு வேகமாக நீங்கள் கவிதை எழுதுவது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

என் பெயர் விமலா. திருச்சியிலுள்ள எங்கள் பள்ளியின் சார்பாக நான் அங்கு பல போட்டிகளில் கலந்து கொண்டேன். கவிதைப் போட்டியில் எனக்கு பரிசு கிடைக்கவில்லை. ஆயினும் ஓவியப் போட்டியில் எனக்கு பரிசு கிடைத்தது. உங்களுக்கு பாராட்டு கடிதம் எழுத வேண்டுமென்று வந்தவுடனே நினைத்திருந்தாலும் ஏதோ ஒரு தயக்கம், ஆயினும் பாராட்டுவது என்று முடிவு செய்துவிட்டேன். கவிதை மிகச் சிறப்பாக ஒலி நயத்தோடு உள்ளே ஆழ்ந்த அர்த்தத்தோடு இருந்தது. இதையும்விடச் சிறப்பாக நீங்கள் எழுதியிருக்க முடியும். கால அவகாசம் உங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்பதை நான் நன்கு உணர்ந்தேன். நீங்கள் வேறு ஏதேனும் கவிதைகள் எழுதியிருக்கிறீர்களா. அந்தக் கவிதைகள் புத்தகமாக வந்திருக்கிறதா. கவிதைகள் ஏதேனும் எழுதியிருப்பின் எனக்கு எழுதி அனுப்புங்கள். அவைகளைப் படிக்க ஆவலாக இருக்கிறேன். நல்ல கவிதைகள் படித்தால், நல்ல கவிதைகளை எழுத முடியும் என்ற நினைப்பில்தான் உங்கள் கவிதைகள் கேட்கிறேன்.

சேதுராமனுக்கு பூமியில் கால்கள் நிற்கவில்லை. சட்டென்று இரண்டு பெரிய வெண் சிறகுகள் முளைத்து அவை அவனை பூமியிலிருந்து வெகு உயரத்திற்கு தூக்கிக்கொண்டு போய் மெல்ல நந்தவனத்தில் இறக்கின.

சேதுராமன் மலையிலுள்ள புல் சரிவில் சறுக்கினான். ஓடைகளில் நீந்தினான். மரங்களில் ஏறினான். மிகுந்த மயக்கத்தில் இதைக் கொண்டு போய் யாரிடமாவது காட்டலாமா என்று பாக்கெட்டில் மடித்துக் கொண்டு பள்ளிக்குப் போனான்.



எந்த பள்ளி மாணவனிடமும் இதைப்பற்றி சொல்லக் கூடாது என்ற எண்ணம்தான் கடைசியாக இருந்தது. இதைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு கெட்டிக்காரனும், முதிர்ச்சி உள்ளவனுமாய் ஒரு மாணவனும் இல்லை. இங்குள்ளவர்கள் அத்தனை பேரும் மாணவிகள் என்றால் இளக்காரமாகவும், கொஞ்சம் அசிங்கப் புத்தியோடுமே இருந்தார்கள்.

"டேய்... அவ பார்க்கறாடா. என்னையே பார்க்கறாடா. டேய்... எனக்கு உயிரே போயிடும் போல இருக்கே. நான் செத்துடுவேன் போல இருக்கே."

நாடகம் போல ஒரு மாணவன் நடிக்க மற்றவர்கள் எல்லோரும் வாய்பிளந்து சிரித்தார்கள். செம கட்டை என்றார்கள். டக்கர் பிகர் என்றார்கள். ரொம்ப பெருசு என்றார்கள்.

இந்தக் கவிதையை காண்பித்தாலும் இதே வார்த்தைகளை டக்கர் பிகர், செமக்கட்டை என்று சொல்வார்களோ என்று அவன் பயந்தான்.

ஆசிரியரிடம் காட்டலாமா என்று யோசித்தான். ஆனால், ஆசிரியர் கடைசி பெஞ்ச் பையன்களைக் கூப்பிட்டு பொறுக்கி, பொம்பளை பொறுக்கி. தலையை தடவிகிட்டு தெருமுனையில நிக்கறயே தவிர உனக்கு படிக்கணும்கற எண்ணம் இருக்காடா என்று அடிப்பதுண்டு. ஒரு வேளை அதேவிதமாக தன்னையும் தீர்மானித்துவிட்டால், அவனுக்கு பயம் வந்தது.

வீட்டிற்கு வந்து பதினேழாவது முறையாக கடிதத்தைப் படித்துப் பார்த்தான். பதில் எழுத வேண்டும் என்று தீர்மானித்தான்.

அன்புடையீர் என்று ஆரம்பித்து கிழித்துப் போட்டான். அன்புமிக்க என்று ஆரம்பித்து எழுத முயன்றான். மதிப்பிற்குரிய என்று ஆரம்பித்து அதையும் அடித்து விட்டான்.

வெகுநேரம் யோசித்து செல்வி விமலா அவர்களுக்கு வணக்கம். வாழிய நலம் என்று கடிதம் எழுத கடிதம் சரசரவென்று நீண்டது. முழு விஷயங்களையும் மிகக் கோர்வையாக எழுத முடிந்தது. அதை இரண்டு முறை படித்துப் பார்த்து அன்று மாலையே போஸ்ட் செய்தான்.

மறுநாள் காலை போய் தனக்கு ஏதாவது தபால் இருக்கிறதா என்று தபால்காரரிடம் விசாரித்தான். அப்படிக் கேட்டதற்கு வெட்கப்பட்டான்.

எப்பொழுது பதில் வரும் என்று ஏங்க ஆரம்பித்தான். ஒவ்வொரு நாளும் வீட்டிற்குள் நுழைந்ததும் தபால் இருக்கிறதா என்று பார்க்க ஆரம்பித்தான். பத்து நாள் கழித்து இன்னொரு கடிதம் வந்தது.

சேதுராமனால் அந்தக் கடிதத்தை பிரிக்கவே முடியவில்லை. பிரித்தால் அந்தக் கடிதத்திற்கு வலிக்குமோ என்று தோன்றியது. பிறகு இந்த கடிதத்தை எப்படி பிரிப்பது என்று யோசித்து மெல்லிய பிளேடு எடுத்து கவரின் நுனியைப் பிளந்தான். கடிதத்தை உருவினான். கொண்டு போய் பூஜையறையில் வைத்து சாமி கும்பிட்டான்.

விமலாவும், அவள் பெற்றோரும் நன்றாக இருக்க வேண்டும். அவளுக்கு கவிதை எழுத வர வேண்டும். என்னைவிட நன்றாக கவிதை எழுதும்படியாக அவர்களுக்கு கடவுளே நீ ஆசிர்வாதம் செய்ய வேண்டும். கவிதை எழுத வேண்டும் என்று ஆசைப்படும் பெண்ணுக்கு, கவிதை எழுதக் கற்று கொடுப்பதைவிட, ஒரு கடவுளுக்கு வேறு என்ன வேலை என்று வேண்டினான்.

ஏன், எந்தக் காரணமும் இல்லாமல் சட்டென்று அவள் மீது இத்தனை ஈடுபாடு வந்துவிட்டதே என்று வியந்தான். அதிகம் ஆவலாதியைக் காட்டி விடக்கூடாது என்று தனக்குத்தானே கட்டுப்படுத்திக் கொண்டான். கட்டுப்படுத்திய சில நிமிடங்களிலேயே கட்டுப்பாட்டை இழந்தான்.



கணக்கு நோட்டின் கடைசி பக்கத்தில் விமலா... விமலா என்று எழுதியிருந்தான். பிறகு பயந்து போனான். எழுதிய பக்கத்தை கவனமாகக் கிழித்து, கசக்கியதை மறுபடியும் இழுத்து நீவி துண்டு துண்டாகக் கிழித்து குப்பைக் கூடையில் போட்டான்.

ஏன் தொடர்ந்து தவறு செய்கிறோம். தவறு செய்து விட்டு ஏன் கலவரப் படுகிறோம். நம்மால் ஏன் வழக்கம்போல சாதாரணமாக இருக்க முடியவில்லை. இது என்ன. என்ன நடந்தது. கவிதைக்குப் பாராட்டு அவ்வளவுதானே. இதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டியதுதானே. இதை வேறு யாரோ ஒரு கமலக் கண்ணனோ அல்லது கண்ணபிரானோ எழுதியிருந்தால் இத்தனை பரவசப்பட்டிருப்போமா.

சேதுராமன் அவனாகவே ஒருநோட்டுப் புத்தகம் தைத்தான். அவனுடைய கவிதைகளை அந்த புத்தகத்தில் மறுபடியும் எழுதினான். ஒவ்வொரு கவிதைக்கும் ஏற்றவாறு கருப்பு மையில் படங்கள் போட்டான். என் வழியில் பூத்த மலர்கள் என்று கவிதைப் புத்தகத்திற்கு தலைப்பு வைத்தான்.

முதல் ரசிகைக்கு சமர்ப்பணம் என்று முதல் பக்கத்தில் எழுதினான். அது கசங்காமல் இருக்க இரண்டு அட்டைகளை வைத்து அதைப் பேப்பரால் சுருட்டி பிறகு நல்ல கவர் போட்டு அவளுக்கு அஞ்சல் செய்தான். மறுபடி காத்திருந்தான்.

இந்த முறை நான்காம் நாளே கடிதம் வந்துவிட்டது. ஈரோடு மகாகவிக்கு என் இனிமையான வணக்கங்கள் என்று கடிதத்தின் முதல் வரி கூறியிருந்தது.

அவன் மீது தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். எக்காளங்கள் முழங்கின. முரசுகள் அதிர்ந்தன. போர் வீரர்கள் ஜெயவிஜயீபவ என்று குரல் கொடுத்தார்கள். அவன் அரசகுமாரன் போல கண்ணாடி முன்பு நின்று கொண்டான்.

உங்கள் கவிதைகள் அற்புதம். நீங்கள் எழுதவே பிறந்திருக்கிறீர்கள். குறிப்பாக இந்தக் கவிதை மிக நன்றாக இருந்தது. அந்தக் கவிதை கண்ணில் நீர் வரவழைத்தது. இந்த கவிதையை படித்து என்னையும் மீறி சிரித்து விட்டேன் என்றெல்லாம் பாராட்டப் பட்டிருந்தது. மிகக் கவனமாக கவிதையை படித்திருக்கிறாள் என்று தெரிந்தது.

உங்களுக்குத் தெரியுமா. இளைஞர் பேரவை மறுபடியும் கூட இருக்கிறது. இந்த முறை கோயம்புத்தூரில் கூடுகிறோம். உங்கள் பள்ளிக்கு செய்தி வரும். தயவு செய்து அந்த அழைப்பிதழை ஞாபகப்படுத்தி வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். அதிகம் மாணவர்கள் வேண்டாம். பத்துக்கும் குறைவாக இருந்தால் போதும். நல்ல கெட்டிக்கார மாணவர்கள் வேண்டுமென்று அதில் கேட்டிருக்கிறார்கள். உங்கள் பள்ளியிலிருந்து நீங்கள் ஒருவர் வந்தாலே போதுமானது. நூறு பேருக்குச் சமம் என்று எழுதியிருக்க, சேதுராமன் தலை கிறுகிறுக்கத் துவங்கியது.

பள்ளிக்குப் போக "சேதுராமா உனக்கு போன் வந்தது. கோயம்புத்தூர்ல இளைஞர் பேரவை நடத்தப் போறாங்க. உன்னை கண்டிப்பா வரச் சொல்லியிருக்காங்க. எனக்கு போன் போட்டு சொல்றாங்க. அடுத்த வாரம் அழைப்பிதழ் வந்துடும். நேரா என் வீட்டுக்கு வரும். நம்ம பசங்க ஒரு இருவது பேரை செலக்ட் பண்ணலாம்."

"எதுக்கு ஸார் பெரிய கும்பல்."



"ஜாலியா போயிட்டு வரலாம்டா. நான் மொத்த க்ளாஸையும் கூட்டிகிட்டு போலாம்னு நினைக்கிறேன்."

"உங்க இஷ்டம் ஸார்."

"ஏண்டா ஒரு மாதிரியா சொல்ற."

"அதெல்லாம் ஒண்ணுமில்லை ஸார். நல்லா கூட்டிகிட்டு போகலாம். ஆனா, இருபது பேரும் எதுனா ஒரு பிரமாதமான விஷயத்தை செய்யணும்."

"என்ன செய்யலாம். சொல்லு."

ஆசிரியர் ஆவலாகக் கேட்டார். அவன் ஏதாவது புதிதாக சொல்வான் என்று நிச்சயம் நம்பினார்.

"பிரமிடு பண்ணலாம் ஸார்."

"பிரமிடா."

"ஆமாம். ஸார். மனுஷப் பிரமிடு."

"ஸ்டேஜ்குள்ள மனுஷப் பிரமிடெல்லாம் எப்படிடா வரும். ஒருத்தர் மேல ஒருத்தர் ஏறி நிக்கறதுதானே சொல்ற. ஆறு பசங்க ஏறினீங்கன்னா உச்சி இடிக்கும்."

"இடிக்காது ஸார். இடிச்சதுன்னா ஒருவன் குறைச்சுடுவோம்."

"சரி, நான் ட்ரில் மாஸ்டர்கிட்ட சொல்றேன்."

"வேணாம் ஸார். நானும் வரேன்னுவாரு. ரொம்ப அலட்டுவாரு. லேடீஸ் டீச்சரைப் பார்த்தார்னாக்க ரொம்பவும் கை கால் ஆட்டிகிட்டிருப்பாரு."

"டேய்... அவர் வாத்தியாருடா. அப்படிப் பேசக் கூடாது."

"சரி ஸார். அப்படிப் பேசலை. ஆனா உண்மை இதுதான்" என்று சொல்ல, அவன் ஆசிரியர் வாய் விட்டுச் சிரித்தார். சொன்னதில் உண்மை இருப்பது அவருக்குத் தெரியும்.

"என்னா பண்ணப்போற."

"நானே பசங்களுக்கு எங்கேயாவது கிரவுண்ட்ல கூட்டிகிட்டு போய் டிரெயினிங் கொடுக்கறேன் ஸார்!"

அவனையும் சேர்த்து இருபது மாணவர்கள் சேர்ந்து மனிதப் பிரமிடு செய்தான்.

பூப்போல பூப்போல பிறக்கும் என்ற சினிமாப் பாட்டை போட்டான். அதற்கேற்றபடி மாணவர்களை நகரச் செய்து, பிரமிடு ஏறச்செய்து அதே விதமாக இறங்கச் செய்தான். பாட்டு முடியும்போது மூன்று விதமான பிரமிடுகள் உருவாயின. கலைந்தன. கடைசி வரிக்கு மாணவர்கள் வரிசையாக நின்று வணக்கம் சொல்லி சட்டென்று மேடையைவிட்டு காணாமல் போனார்கள்.

அவர்கள் போனதும் கவலையோடு கூட்டம் நடக்கும் பள்ளிக்கூட ஹாலுக்குப் போய் பார்த்தான். மிக உயரமான கூரை. அகலமான மேடை. அவன் சந்தோஷமானான்.

அவன் விளக்கு அலங்காரம் செய்யும் அமைப்பாளரிடம் போய் பேசினான். அவர் வயசாளி, அவர் கால் தொட்டு வணங்கினான்.

"நாங்க இந்த மாதிரி பிரமிடு பண்ணப் போறோம். எங்களுக்கு லைட்டிங் ஒரு மாதிரி பண்ணித்தரணும். வந்து நிக்கறபோது ஸ்டேஜ் இருட்டா இருக்கணும். மெல்ல மெல்ல லைட் பெருசாகணும். பண்ண முடியுங்களா."

"நல்லா பண்ணலாம். யாரு வாத்தியாரு."

"இருக்காரு."

"கூட்டிகிட்டு வாயேன்."

"எதுக்கு ஸார்."

"எதுனா கொடுக்கறதுக்கு."

"நான் தரேன்."



பாக்கெட்டில் கைவிட்டு, பதினைந்து ரூபாய் கொடுத்தான்.

அவர் சந்தோஷமானார்.

"உனக்கு துட்டு இருக்கா தம்பி."

உண்மையில் அவனிடம் அந்தப் பதினைந்து ரூபாய் தவிர வேறு காசு இல்லை. அம்மாவிடம் இருபது ரூபாய் கேட்க அம்மாவிடம் பத்து ரூபாய் மட்டுமே இருந்தது. ஐந்து ரூபாய் அடுத்த வீட்டில் கடன் வாங்கிக் கொடுத்தாள்.

சட்டென்று காசு கொடுத்து விட்டோமே என்று பயந்தான். திரும்ப பார்த்துக் கொள்ளலாம் என்று வந்து விட்டான். மற்ற மாணவர்களிடம் காசு இருக்கிறதா என்று விசாரித்து தெரிந்து கொண்டான்.

"அம்பது ரூபா வச்சுருக்கேண்டா கவலையே படாத" என்று இன்னொரு மாணவன் உற்சாகமூட்ட சந்தோஷமானான்.

"கவிதை வாசித்தல் உண்டா."

"இல்லை ஸார். வேணாம்."

"என்னாடா."

"நாங்கதான் பிரமிடு பண்றோமே ஸார்."

"ச்சு... உன்னை கவிதை வாசிக்கத்தாண்டா சொல்லப் போறாங்க."

ஆசிரியர் அலுத்துக் கொண்டார்.

"அந்த நேரம் பார்த்துக்கலாம் ஸார்."

"என்னா பண்ணுவ."

"நான் முன்னயே எழுதின கவிதை ஞாபகம் இருக்கு ஸார். அதை சொல்லிடுவேன்."

"ஞாபகம் இருக்கா. உளறமாட்டியே."

"இல்லை ஸார்."

"நான் பிராமிஸை ஒரு தடவை பார்த்துட்டேன்டா."

"வேணாம் ஸார். ஸ்டேஜில பாருங்க. அன்னிக்கும் லைட்டிங் வேற சொல்லியிருக்கேன். பதினைஞ்சு ரூபா கேட்டார் ஸார். கொடுத்துட்டேன்."

"கவலைப்படாதே நான் வாங்கித்தரேன்."

அவன் ஆதங்கத்திற்கு வாத்தியார் முற்றுப்புள்ளி வைத்தார்.

கவிதை வாசிப்பு கடைசியில், அதற்கு முன்பு மனிதப் பிரமிடு என்று பட்டியல் போட்டு ஆசிரியரிடம் காட்டப்பட்டது. ஆசிரியர் அவனிடம் காதோரம் சொன்னார். டேப்ரிக்கார்டுடன் தயாராக நின்றார்.

மேடை இருட்டாகியது மெல்ல கேசட் சுழல ஆரம்பித்தது.

பூப்போல பூப்போல பிறக்கும். பால் போல பால் போல சிரிக்கும் என்று பாடல் துவங்க மாணவர்கள் அடியெடுத்து உள்ளே வந்தார்கள். அசைந்து அசைந்து நடந்தார்கள். சட்டென்று வரிசையானார்கள். வரிசையில் உள்ளவர்கள் திரும்பினார்கள். திரும்பியவர்கள் ஒருவர்மீது ஒருவர் ஏறினார்கள். ஏறியவர்கள் பத்து வினாடியில் கோபுரம் கட்டினார்கள். கீழிருந்து பல கை தட்டல்கள் கேட்டது. கை தட்டல் கேட்டதும் ஒருவன் பல்தெரிய சிரித்தான். மெல்ல ஆடினான். கீழிருப்பவன் தோள்கள் லேசாக ஆடின.

"மேல எவனா பல்லு காட்டி சிரிச்சான்னா கொன்னுடுவேன்." அவன் கீழிருந்து உறுமினான்.

சட்டென்று சிரித்தவன் வாய் மூடிக் கொண்டான்.

மறுபடியும் பாட்டு தொடர அவர்கள் வேறு விதமான பிரமிடுக்குப் போனார்கள். மறுபடியும் விளக்குகள் மங்கலாக இன்னொரு விதமான பிரமிடு காண்பித்தார்கள்.



கூட்டம் அமைதியாக அந்த வித்தையை பார்த்துக் கொண்டிருந்தது.

சேதுராமன் ஒரு சுழல் பலகையில் கால்வைத்து உறுதியாக நிற்க, அவனுக்கு அண்டக் கொடுத்தபடி இரண்டிரண்டு மாணவர்கள் ஏறி நின்றார்கள். அவர்கள் மீது இன்னும் சில மாணவர்கள் ஏறினார்கள். கடைசியாக சின்னப்பையன் ஒருவன் தாவி ஏறி பையிலிருந்து தேசியக் கொடியை எடுத்து சட்டென்று பறக்க விட்டான்.

அந்த சுழல் பலகையில் நின்ற சேதுராமன் மெல்ல திரும்ப மற்ற மாணவர்கள் அவனை அணைத்தபடி சுழலத்துவங்க அந்தப் பிரமிடு சுழலத்துவங்கியது. பாரதக்கொடி நாலா பக்கமும் திரும்பியது.

கூட்டத்தினர் கைதட்டினார்கள்.

சட்டென்று கொடியோடு மாணவன் கீழே குதித்தான். மற்றவர்களும் கீழே குதித்தார்கள்.

பாட்டு முடியும் நேரம் மாணவர்கள் வரிசையானார்கள். விழுந்து வணங்கினார்கள்.

தடதடவென்று மேடையின் வலது பக்கமும், இடது பக்கமும் பிரிந்து போனார்கள்.

கூட்டம் மிகப்பெரிய கைதட்டியது.

ஒவ்வொரு தடவையும் அள்ளிவிட்டு போயிட்டான் கப்பா என்று யாரோ ஒருவர் சொல்ல, எல்லாம் அந்த ஒத்தப்பையன் பண்ற வேலை என்று ஒருவர் புரிந்து கொண்டு பேசினார்.

கடைசி நிகழ்ச்சியாக கவிதை வாசிப்பு தொடர்ந்தது.

இந்த முறை பெண் விடுதலையைப் பற்றி அவன் கவிதை எழுத வரிக்குவரி அரங்கம் கைதட்டியது.

**தாயைச் சீராடி தமக்கையைக் கொண்டாடி**
**தங்கைக்கு சீர் செய்து அத்தைக்கும்**

சிந்திக்கும் பாடிக்கும் மதனிக்கும்
துணிமணிகள் பல செய்யும்
விவரமான மனிதனே
மனைவி என்றால் மட்டும்
அவளைக் கொடுமைப் படுத்துவதே உன் சட்டமா
பெண்ணியம் என்ற பெருமரத்தின் நடுமரம் மனைவி
மற்றதெல்லாம் கிளைகள்
நடுமரத்தை வெட்டி விட்டு கிளைபரப்பும்
அறிவிலிகாள்

என்று முழங்கினான்.

அதற்கு தனிப்பரிசு கிடைத்தது.

சேதுராமன் சந்தோஷமாக வாங்கிக் கொண்டான். மற்ற மாணவர்களையும் நிற்க வைத்து போட்டோ எடுத்துக் கொண்டான்.

மாலையில் விருந்தும் கலந்துரையாடலும் என்று இருந்தது.

அவனை பல மாணவர்கள் சூழ்ந்து கொண்டார்கள். அவளையும் பல மாணவிகள் சூழ்ந்து கொண்டார்கள்.

மாணவர்களும், மாணவிகளும் தனித்தனி குழுவாகவே இருக்க விழா ஏற்பாடு செய்தவர்கள் கலந்து பேசுங்கள் என்று கட்டளையிட்டார்கள். மெல்ல மெல்ல மாணவிகள் முன்னேற மாணவர்கள் வெட்கப்பட அவன் வேகமாகப் போய் அவளுக்கு கைகூப்பி வணக்கம் சொன்னான். விமலாவும் பதில் வணக்கம் சொன்னாள்.

இரண்டு பேரும் போய் ஒரு மரபெஞ்சில் அமர்ந்து கொண்டார்கள். பெண்களும், மற்ற ஆண்களும் இதை பார்த்துவிட்டு பேசத் துவங்கினார்கள்.

"உங்க லெட்டர் கிடைச்சதுங்க."

அவன் பேசத்துவங்கினான்.

பதில் பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.



"ஏங்க உடம்பு சரியில்லையா. ஏன் பேச மாட்டேன் றீங்க."

"என்னால பேசவே முடியலை."

"என்னாச்சு. ஏதாவது தொந்தரவா?"

"ஒண்ணுமில்லைங்க. ரொம்ப நாளா உங்களோட பேசிட்டே னா. இப்போ என்னா பேசறதுன்னே தெரியலை. உடம்பெல்லாம் படபடன்னு இருக்கு. எனக்கு ஒண்ணுமே புரியலை. உங்களையே நினைச்சுகிட்டிருக்கேன்."

"என்னையே நினைக்கிற அளவுக்கு நான் என்ன பெரிய ஆள்."

"உங்க கவிதைகள் அற்புதமா இருந்தது. இன்னிக்கு கவிதை பிச்சு எடுத்துட்டீங்களே."

"அதுக்குக் காரணம் உங்க கவிதைங்கதான். இவ்ளோ நல்லா நீங்க எழுதறபோது நான் இன்னும் நல்லா எழுதணும்னு ராப்பகலா உழைச்சு இந்தக் கவிதையை எழுதினேன். நீங்க கேட்டு நல்லாயிருக்குன்னு பாராட்டணும்னே பண்ணினேன்."

அவள் மெல்ல பேசினாள். அவள் வீடு பற்றிச் சொன்னாள்.

தந்தைக்கு ரயில்வேயில் வேலை. வாரத்தில் இரண்டு நாள்தான் வீட்டில் இருப்பார். மற்ற நாட்களில் வண்டியோடு போய்விட்டு வருவார். அம்மா உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியை. ஒரு தங்கை, ஒரு தம்பி, சித்தியும் கூட இருக்கிறாள்.

ரயில்வே குவாட்டர்ஸ்தான் இப்போதைக்கு. வீடு கட்ட வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அவளை டாக்டருக்கு உற்சாகப்படுத்துகிறார். ஆனால், இன்ஜினியர் ஆக வேண்டும் என்ற ஆசை அவளுக்கு இருக்கிறது. குறிப்பாக கம்ப்யூட்டர் இன்ஜினியர் கனவாகவே இருக்கிறது.

அவர்கள் வீட்டில் ஒரு நாய் வளர்க்கிறார்கள். அந்த நாய்க்கு சாமிநாதன் என்று பெயர். அவள் அப்பா வைத்த பெயர். சாமிநாதன் என்பது அப்பாவின் உயர் அதிகாரி என்று அவள் சொல்ல அவன் வாய் விட்டுச் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

விசில் சத்தம் கேட்க எல்லோரும் நிமிர்ந்து பார்த்தார்கள். விழாவை ஏற்பாடு செய்தவர் நெருங்கி வட்டமாக உட்காரும்படிச் செய்ய வீட்டிற்குப் போன மாணவர்கள் தவிர மற்றவர்கள் வட்டமாக உட்கார்ந்து கொண்டார்கள்.

"நம்முடைய புத்திக் கூர்மையை தூண்டிவிடக் கூடிய சில விஷயங்கள் இப்பொழுது நடக்கப் போகின்றன. நான் கேட்கும் சில கேள்விகளுக்கு கேட்கும் விதமாக நீங்கள் பதில் சொல்ல வேண்டும். உதாரணமாக அதோ வெளியே இரண்டு ஆலமரம் இருக்கிறது. அந்த ஆலமரத்தைப் பற்றி ஒரு கதை சொல்லும்படி நான் உங்களைச் சொல்வேன். எவரையேனும் கட்டளையிடுவேன். உடனடியாக நீங்கள் ஒரு கதை சொல்லவேண்டும்."

ஒரு மாணவனைக் கேட்க அவன் ஆலமரம் வைத்து ஒரு கதை சொன்னான்.

தூரத்தில் ஒரு குடிசை இருக்கிறது. அந்தக் குடிசையைப் பற்றி ஏதேனும் கதை சொல்லுங்கள் என்று சொல்ல இன்னொரு மாணவி குடிசை வைத்து கதை சொன்னாள்.

பள்ளிக்கு அருகே இருக்கிற மாமரத்தை சுட்டிக் காட்ட நான் கதை சொல்கிறேன் என்று விமலா கைதூக்கினாள்.

அவர் சற்றுநேரம் விமலாவை உற்றுப் பார்த்து சரி சொல் என்று அனுமதித்தார்.



"ஒரு கிழவன் மாங்கன்று நடுவதையும், அரசன் வந்து கேள்வி கேட்பதையும். என் தாத்தா நட்ட மாமரத்தை நான் அனுபவித்தேன். அதன் பழங்களை உண்டு களித்தேன். இப்பொழுது நான் நடுவது என் பேரனுக்கு அதற்காக நடுகிறேன் என்று அவன் சொல்ல அரசன் அவருக்கு நன்றி சொல்லிவிட்டுப் போனான்.

அந்தக் கிழவர் நட்ட மாமரம் தான் இவ்வளவு பெரிதாக வளருகிறது. நீங்கள் யாரேனும் மாங்கன்று நடவேண்டாமா" என்று சொல்லி முடிக்க அவளை எல்லோரும் பாராட்டினார்கள்.

ஆசிரியர் பாக்கெட்டில் கைவிட்டு இருபத்தைந்து பைசாவை சுண்டிப் போட்டு கையில் பிடித்து இதைப் பற்றி யார் கதை சொல்வீர்கள் என்று கேட்க எல்லோரும் தயங்க சட்டென்று அவன் எழுந்தான்.

"எனக்கு பறவை பாஷை தெரியுங்க. குருவி பேசற பாஷை குறிப்பா நல்லா தெரியும். ஒரு நாள் நான் ரோடுல நடந்து போறபோது ஒரு குருவி வழி மறிச்சு சேதுராமா... சேதுராமா... இருவத்தஞ்சு பைசா கொடு அரிசி வாங்கி சாப்பிடணும்னு சொல்லிச்சு. என்கிட்ட இருந்தது ஒரு இருவத்தஞ்சு பைசா. நான் அதுல மிட்டாய் வாங்கி சாப்பிடணும் அப்படின்னு நினைச்சுகிட்டேன். இந்த குருவி மடக்கி மடக்கி கேட்குதே என்ன பண்றது. சரி, அந்த குருவிக்கு வேற யாராவது கொடுத்துடுவாங்க அப்படின்னு சொல்லிட்டு நடந்து போனேன்.

சேதுராமன் கஞ்சன். சேதுராமன் கஞ்சன் அப்படின்னு குருவி கத்துச்சு.

என்னடா இது. ஒரு குருவி நம்மள இழிவா பேசுது. நம்மகிட்ட வேற துட்டு இல்லை. நாம மிட்டாய் சாப்பிடறது முக்கியமா அல்லது இழிவுபடாதது முக்கியமா அப்படின்னு பார்த்தபோது மிட்டாய் எப்போ வேணா

னும் சாப்பிட்டுக்கலாம். ஒரு குருவி திட்டும்படியா வச்சுக்கக் கூடாதுன்னு சொல்லிட்டு காசைத் தூக்கி குருவிகிட்ட போட்டேன். குருவி வாயில எடுத்து கவ்வி கொண்டு போய் கூடையில வச்சுட்டு திருப்பி வந்து, 'சேதுராமன் பயந்துட்டான் சேதுராமன் பயந்துட்டான். சேதுராமன் சின்ன குருவிக்கு பயந்துட்டான்.' அப்படின்னு கத்துச்சு, இதுக்குன்னு சொல்லி கையில இருக்கற நாலணாவையும் தூக்கிப் போட்டு இப்போவும் அவமானப்படறோமே, இதுக்கு இல்லேன்னு சொல்லிட்டே அவமானப் பட்டிருக்கலாமேன்னு நான் ரொம்ப நொந்து போனேன். இனிமே இந்த மாதிரி குருவி ஏதாவது வந்து கத்துச்சுன்னா ஒண்ணுமில்லை, இப்படியே போய் எங்கனா தின்னு என்னைய விட்டுறுன்னு சொல்லுங்க" என்று சொல்ல கூட்டம் கைதட்டிச் சிரித்தது.

அவன் சிலாகித்துப் பேசினான். மறுநாள் காலை அவள் ஊருக்கு வண்டி ஏறினாள். அவனும் ரயில்வே ஸ்டேஷன் வரைபோயிருந்தான்.

அவனுடைய கவிதைப் புத்தகத்தில் அங்கங்கே குறிப்புகள் எழுதி திருப்பிக் கொடுத்தாள்.

அன்று இரவு அவனைப் புகழ்ந்து ஒரு கவிதை எழுதி அதையும் அதில் வைத்துக் கொடுத்தாள்.

கூட்டம் ஏற்பாடு செய்திருந்தவர் பெண்களை வண்டியில் ஏற்றிக் கொள்ளச்சொல்ல அவர்கள் ஏறி அமர்ந்தார்கள். அவள் ஜன்னலோரம் அமர்ந்திருந்தாள்.

"நீங்க சொன்ன மாமரக்கதை டக்கர்" என்று சேதுராமன் சொன்னான்.

"இல்லை. அதைவிட இருவத்தஞ்சு பைசா கதை தான் டக்கர்" என்று அவள் சொன்னாள்.



"டக்கு டக்குன்னு எல்லா கதையையும் சொல்லிடுவீங்களா."

"சொல்லுவேனே."

"இப்போகூட சொல்லிடுவீங்களா."

"ட்ரை பண்ணலாம்" என்று அவன் சொன்னான்.

அவள் சட்டென்று உள்ளங்கையை விரித்து "இப்போ கதை சொல்லுங்க பார்க்கலாம்."

"என்னா சொல்றது."

"இதோ பார்க்கறீங்களே என் உள்ளங்கை. இதை வச்சு ஒரு கதை சொல்லுங்க பார்க்கலாம்."

அவன் மெள்ள அவள் கையை பற்றிக் கொண்டான்.

ஒரு ஊர்ல ஒரு ஆடு இருந்தது. அந்த ஆடு ஒரு வளைந்த பாதையில போயிட்டு இருந்தது. அந்தப் பாதையினுடைய முடிவுல ஒரு பாலம் இருந்தது.

அவன் ஆயுள் ரேகையை பாதையாகவும் புத்தி ரேகையை பாலமாகவும் சொல்லிக் கொண்டு போனான். மேற்கொண்டு அவன் என்ன சொன்னான் என்று சேதுராமனுக்குத் தெரியவில்லை.

அவன் தன் கையைப்பிடித்த அவள் கையையே வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். விடுவிக்க லேசாக முயற்சித்த போது பிடி மேலும் இறுகியது. அந்தப் பிடியில் இறுகலில் அன்பு தெரிந்தது. அதுவரை அனுபவித்திராத ஒரு சிலிர்ப்பை சேதுராமன் உணர்ந்தான்.

"என்னா கதை நல்லாயிருந்துதா."

"நான் கேட்கவேயில்லை விமலா."

"ஏன்."

"முதல்ல முதல்ல கையைப்பிடிச்சு கதை சொல்ற போது என்னால கதை சொல்றதை எப்படி கவனிக்க முடியும்."

அவன் மெல்லியதாகச் சிரித்தான்.

"எனக்கு என்னமோ கையை பிடிக்கணும்னு தோணிச்சு. பிடிச்சுட்டேன். இப்போ பதிலுக்கு என்னா கதை சொன்னேன்னு நீங்க கேட்டா எனக்கு சொல்லத் தெரியாது. என்னமோ வாய் ஒரு கதை சொல்லுச்சே தவிர மனசு முழுக்க உன் கையையேதான் பார்த்துகிட்டிருந்தது."

"விமலா... இது என்ன விமலா."

"புரியலையே."

"விமலா விளையாடாத. நீ யாரோ, நான் யாரோ. நாம ரெண்டு பேரும் படிக்கறவங்க. இந்த நேரத்துல நாம சஞ்சலப்படறோமோன்னு பயமா இருக்கு."

"எனக்கும் பயமா இருக்கு. ஆனா, பயம் ஒரு பக்கம் ஆசை ஒரு பக்கம் அப்படின்னு சண்டைபோடுது."

"சண்டையில எது ஜெயிக்குது சொல்லு."

"பயம்."

"இல்லை ஆசை. உன்னைப் பார்க்கறதுக்காகவே வந்தேன். அம்மா திட்டினாங்க. அம்மா சும்மா எங்கயோ சுத்திகிட்டிருக்கேன்னு. நான் கண்டிப்பா போயே தீருவேன்னு சொல்லிட்டு ஒரு நாள் பட்டினி கிடந்து அம்மாவோட சண்டை போட்டு இங்க வந்துட்டேன். நான் போறதுக்குள்ள அம்மா வந்திருந்தா உதையே கிடைக்கும்."

"இதோ பார் நீ இந்த மாதிரியெல்லாம் சொல்லிட்டேன்னா என்னால ராத்தூக்கமே தூங்க முடியாது."

"என்னா சொல்லிட்டேன்."

"உதை கிடைக்கும்னு சொல்ற. நான் கவலைப்பட்டுகிட்டே இருப்பேன் இல்லை. நான் ஊருக்கு போனவுடனே போன் பண்றேன். ஏதாவது போன் நம்பர் சொல்லு."



"அப்படி ஒண்ணும் இல்லையே."

"சரி. ஊருக்கு போனவுடனேயே லெட்டர் எழுதுறேன்."

"போறாது."

"என்னா பண்ண சொல்ற."

"தந்தி அனுப்பு."

"என்னா தந்தி அனுப்பறது."

"சௌம்ப அப்படின்னு ஒரு வார்த்தை சொல்லு. அது போதும்."

தந்தி வந்தது. நலம் என்று தந்தி வந்தது. கடிதம் வந்தது. அவன் கடிதம் எழுதினான். அதற்கு பதில் வந்தது. பதிலுக்கு பதில் எழுதினான். மீண்டும் கடிதம் வந்தது.

இருபதாவது கடிதத்தில் அவள் தெள்ளத் தெளிவாக அவனைக் காதலிப்பதாய் எழுதியிருந்தாள். அவனும் அதை ஏற்றுக்கொண்டு தானும் அவளை காதலிப்பதாக பதில் எழுதினான்.

அடுத்த முறை சேலத்தில் இளைஞர் பேரவை கூடுவதாக அவனுக்கு அறிவிப்பு வந்தது.

அந்த முறை கவிதைப் போட்டியும் ஓவியமும் உடற்பயிற்சியும் முக்கியமில்லை. மனதில் தோன்றும் விஷயத்தை பொம்மையாக்கிக் கொண்டு வர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒவ்வொரு பையன்களும் ஒவ்வொரு விதமாக பொம்மை செய்யச் சொன்னார்கள். பசுவும் கன்றும், மேரி மாதா, விநாயகர், குதிரை, அப்பாவும் பிள்ளையும் என்றெல்லாம் சொன்னார்கள்.

மாதிரி கிராமம் என்று வடிவமைக்க சேதுராமன் ஆரம்பித்தான். யோசித்து யோசித்து நிதானமாகச் செய்தான். கருநீல பாவாடையும் வெளிர்நீல தாவணி

யும் இருக்கப் பெண் பொம்மையை நிறுத்தினான். முழுக்கை சட்டையும், முழுக்கை பேண்ட்டும் போட்ட சேதுராமனைப் போன்ற இன்னொரு பொம்மையை அதன் அருகே வைத்தான்.

எல்லா பொம்மைகளையும் மண்ணினால் செய்து காய வைத்தான். ஊரின் நடுவேயிருந்த கோபுர பொம்மை மட்டும் அடிக்கடி இடிந்து விழுந்தது. உள்ளுக்குள் மெல்லிய கம்பிகள் கொடுத்ததும் நின்றது.

இளைஞர் பேரவையின் புகழ் எல்லாத் திக்கும் பரவியது. இந்த முறை நூற்றிப் பதினேழு பள்ளிகள் கலந்து கொள்ளும் என்று சொன்னார்கள்.

ஒரு நாளைக்கு இருபது ரூபாய் தரவேண்டும் என்று எழுதியிருந்தார்கள்.

அம்மாவிடம் கேட்க பயமாக இருந்தது. அம்மா ஒவ்வொரு ஐந்து ரூபாய் காசுக்கும் பேரவஸ்தை பட்டுக் கொண்டிருக்கிறாள் என்பது தெரிந்தது. வேறு வழியில்லாமல் ஆசிரியரிடம் போய்ச்சொல்ல ஆசிரியர் நூறு ரூபாய் கொடுத்தார்.

"நீ பெரியவனாகி சம்பாதிச்சவுடனே எனக்கு கொடுத்துடு" என்று சொன்னார்.

"டேய்... இளைஞர் பேரவையை இதுக்கு மேல ஓட்டாத நிறுத்திக்க. அடுத்த வருஷம் ப்ளஸ்டு ஒழுங்கா படிக்கணும் தெரியுதா," என்று சொன்னார்.

சரி என்று தலையசைத்தான்.

எல்லா பொம்மைகளையும் துணி சுற்றி பெரிய பெட்டியில் போட்டுக் கொண்டு பலகை எடுத்துக் கொண்டு சேலம் போய் இறங்கினான். அவள் முன்னதாகவே வந்து அவனுக்காக காத்திருந்தாள். அவன் வரவில்லை என்றதும் சிணுங்கினாள். அவன் வந்தவுடனேயே இதயம் எம்ப்ராய்டரி செய்த கைக்குட்டையை பரிசாக வழங்கினாள்.



அவன் நெகிழ்ந்து போனான்.

"எனக்கொண்ணும் கொண்டு வரலையா" என்று கேட்க "கொண்டு வந்திருக்கேன் எக்ஸிபிஷன்ல வச்சுட்டுக் கொடுத்துடறேன்" என்று சொன்னான்.

எல்லோரும் அவரவர் பொம்மைகளை வைத்து நிற்க இவன் அப்பொழுதுதான் பெட்டியைத் திறந்து பலகையை வைத்து அங்கங்கே ஃபெவிகால் தடவி தன் பொம்மைகளை நிலைநிறுத்தினான். மொத்தம் நாற்பத்தேழு பொம்மைகள் நிலை நிறுத்தியதும் அங்கு அழகான கிராமம் உருவாகியது. கம்பளி நிலை பரப்பியதும் அது புல்வெளி போல் மாறியது. அதற்கு நீலபெயின்ட் செய்து அதன்மீது செலஃபோன் பேப்பர் ஒட்ட சலசலத்து வெய்யிலில் மின்னும் ஆறு தத்ரூபமாக தெரிந்தது. கோவில் இருந்தது. பஞ்சாயத்து அலுவலகம் இருந்தது. பொதுக்கிணறு இருந்தது. ஒரு பூங்கா இருந்தது. அந்த பூங்காவின் வாசலில் தாவணி அணிந்த பெண்ணும், பேண்ட் போட்ட பையனும் நின்றிருந்தார்கள்.

பொம்மையை வைத்த உடனேயே "ஐயோ நம்ம விமலா" என்று ஒரு பெண் கூவினாள்.

"ஆமாம் விமலாதான்" என்று எல்லோரும் குனிந்து பார்த்தார்கள்.

அவன் சங்கடமானான்.

"ஏய்... விமலா... விமலா இங்க வாயேன்." இரண்டு பெண்கள் ஓடிப்போய் அழைத்து வந்தார்கள். அவளுக்குக் காண்பித்தார்கள்.

அவள் மண்டிபோட்டு இரண்டு பொம்மைகளையும் பார்த்தாள். மற்ற எல்லா விஷயங்களையும் பார்த்தாள். அவனுக்கருகே வந்து நின்றாள். சட்டென்று திரும்பி மிக்க நன்றி என்று சொன்னாள்.

"உங்கிட்ட செலஃபோன் பேப்பர் இருக்கா" என்று கேட்டாள்.

அவன் செலஃபோன் பேப்பர் எடுத்துக் கொடுத்தான்.

அவளும் சிலவற்றை செய்திருந்தாள். இரண்டு மலைகளுக்கு நடுவே நீர்த்தேக்கம். அருவி விழ, அருவி நீர்த்தேக்கமாக மாற, நீர்த்தேக்கத்திற்கு குறுக்கே அணை கட்டப்பட அணையிலிருந்து அருவி பொங்கி வரும் படியாய் அமைத்திருந்தாள்.

வழக்கத்தைவிட இந்த முறை இளைஞர் பேரவைக்கு கூட்டம் அதிகமாக இருந்தது.

ஒரு பள்ளியிலிருந்து பத்து மாணவர்கள் வந்தால் போதும் என்பது மதிக்கப்படாமல் நூறு, நூற்றைம்பது மாணவர்கள் வந்து இறங்கினார்கள்.

பத்து பேர்தான் கலந்து கொள்கிறார்கள். மற்றவர்கள் உற்சாக மூட்ட வந்திருக்கிறார்கள் என்று சொல்ல உணவுக்கு ஏற்பாடு செய்வதில் தாமதமும், தகராறுகளும் ஏற்பட்டன.

கீச்... கீச் என்று சில கிழட்டு டீச்சர்கள் கத்திக் கொண்டிருந்தார்கள். வேண்டுமென்றே கத்திக் கொண்டிருக்கிறார்கள். "பாய்ஸ் ஆர் வெரி பேட்" என்று ஒரு டீச்சர் சொல்ல, மாணவர்கள் அந்தக் கிழவியை பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டார்கள். எல்லா இடத்திலும் எதன் பொருட்டோ ஒரு தகராறு இருந்தது. எரிச்சலும், கோபமும் குறைசொல்லுதலும் அங்கு அதிகம் இருந்தன.

ஆரம்பித்த வேளை சரியில்லையா அல்லது உண்மையிலேயே ஏதேனும் போதவில்லையா என்று நிர்வாகிகள் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

பார்த்துவிட்டு எதுவும் சொல்லாமல் போய் விட்டாளே என்று கொஞ்சம் சந்தேகத்தோடு இருந்தான்.



சரி ஏகப்பட்ட வேலைகள் இருக்கிறது. எல்லா இடத்திலும் தகராறு இருக்கிறது. எனவே தான் போய் விட்டாள் என்று சமாதானப்படுத்திக் கொண்டு அவன் அணைக்கட்டு செய்த இடத்திற்குப் போய் நிற்க அங்கு ஒரு மாணவன் அவன் அணைக்கட்டு பகுதிக்கு மெல்ல ஒயர் இணைப்பு கொடுத்துக் கொண்டிருந்தான்.

நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று வேகமாக அவனைக் கேட்க நீ யார் என்று கேட்டான்

அவனுக்கு திகைப்பாக இருந்தது. அவளைத் தேடினான். காணோம். ஆனால் தொடர்ந்து அந்த மாணவன் அந்த மலையின் மீது ஒயர் ஏற்றி அங்கங்கே பல்புகள் பொருத்திக் கொண்டிருந்தான். அணைக்கட்டின் மீதும் வழிந்தோடும் அருவியின் பக்கமும் விளக்குகள் இருந்தன.

அணையெல்லாம் விளக்குகளாக இருந்தன. அணைக்குக் கீழே பரவும் நதி மீதும் அதன் கரைகளிலும் தோட்டங்களிலும் விளக்குகள் இருந்தன.

"அபத்தமா இருக்கு இது."

கொஞ்சம் கோபமாக சேதுராமன் சொன்னான்.

"மலை உச்சியில எதுனா விளக்கு எரியுமா," சற்று ஆத்திரமாகக் கேட்டான்.

அந்த அற்புதமான விஷயத்தை இந்த இளைஞன் கெடுத்துக் கொண்டிருக்கிறான் என்று அவனுக்குப்பட்டது.

"திருவண்ணாமலை உச்சியில விளக்கு எரியறது இல்லையா" என்று அந்தப் பையன் கேட்க அவன் கோபம் இன்னும் அதிகமாகியது.

"முட்டாள் தனமா பேசாதீங்க. எப்பவோ ஒரு தடவை நெய்விளக்கு எரியும். மலையினுடைய அளவு

என்ன விளக்கிலுடைய அளவு என்ன இதெல்லாம் தெரிய வேணாமா. அணைக்கட்டு மேல எல்லாம் ஒரு மாதிரி விளக்கு போட்டிரியே."

"ஏதாவது அணைக்கட்டுல போய் பார். மேட்டூர் டேம்ல போய் பார் விளக்கு இருக்குது" என்று அந்த மாணவன் சொல்ல வெறுப்போடு அவனை பார்த்துக் கொண்டிருந்தான்.

"அவங்ககிட்ட கேட்டிங்களா."

"அவங்க சொல்லித்தான் பண்றேன்" என்று அந்த மாணவன் பதில் சொன்னான்.

அவன் சிறிய துணிகளை எடுத்து வந்தான்.

"விமலா என்னாத்துக்கு இது." அவன் வேகமாகக் கேட்க "தெரியலை மாஸ்டர்தான் பண்ணச் சொன்னாரு" என்று அவனை புறக்கணித்துவிட்டு அந்த இளைஞனின் கையைப் பற்றி இழுத்து மெல்லிய துணிகளை வைத்தாள்.

அவள் அந்த இளைஞனைத் தொட்டதும், துணியைக் கொடுத்ததும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

இன்னும் துணி வேணுமா என்று அவனைக் குனிந்து பார்த்து மிகக் கரிசனமாகக் கேட்பதும் சேதுராமனுக்கு ஆத்திரம் கொடுத்தது.

"எப்படியோ கெட்டுப் போங்க." என்று விலகினான்.

சட்டென்று நின்றான். மறுபடியும் வந்தான்.

"விமலா இப்படியெல்லாம் லைட் போட வேணாம். நல்லாயிருந்ததை ஏன் கெடுக்கறீங்க" என்று சொல்ல "எனக்கு தெரியாது வாத்தியாருதான் பண்ணச் சொன்னாரு. அவங்க சொல்லிதான் பண்றோம். நடுவுல நாம ஒண்ணும் சொல்ல முடியாது சேதுராமன்" என்று சொல்ல சேதுராமன் அந்த இடத்தை விட்டு வேகமாகப் போனான்.



"சும்மா சும்மா சேதுராமனுக்கே பரிசு கொடுக்காதிங்கய்யா மத்த ஆளுங்களையெல்லாம் என்கரேஜ் பண்ணுங்க."

வேறு எங்கோ வேறு எவரோ வேறு எவரிடத்திலோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மனிதருக்கு நேரம் நன்றாக இல்லாவிட்டால் இப்படித்தான் எந்த விஷயமும் எதிர்மறையாகப் போகும். சேதுராமனுக்கு அந்த முறை பரிசு கிடைக்கவில்லை. விமலாவுக்கு ஆறுதல் பரிசு கிடைத்தது.

"கஷ்டப்பட்டு லைட்டெல்லாம் போட்டிருக்கியேங்கறதுக்காக உனக்கு ஆறுதல் பரிசு கொடுத்தேன்" என்று சொன்னதும் அந்த இன்ஜினியர் பையன் மிக அலட்டலாகச் சிரித்தான்.

சேதுராமனுக்கு பற்றிக் கொண்டு வந்தது. பரிசு கொடுப்பவருக்கு சிறிதுகூட எந்த ரசனையும் இல்லை என்பதாகத் தோன்றியது.

"அந்த மாதிரி கிராமம் நல்லாயிருந்ததுங்களே."

அவனுடைய ஆசிரியர் பரிசு கொடுத்தவரிடம் சொன்னார்.

"எல்லோரும் தாங்க வருஷா வருஷம் மாதிரி கிராமம் செய்து கொண்டாராங்க, புதுசா ஏதாவது செய்திருக்கானா. அதுதான் நான் பார்க்கிறேன். அந்தப் பொண்ணு அணைக்கட்டுன்னு சொல்லிச்சு. நியாயமா அதுக்கு ரெண்டாவது பரிசு கொடுத்திருக்கணும். அப்படித்தான் ஆசை. மழை பெய்ஞ்சு மலையில அருவியா வந்து அது தேக்கமாகி அது பாசனத்துக்கு பயன்படுதுன்னு சொல்ற ஒரு விஷயம் எவ்வளவு நல்லா இருக்கு. ஆனா நடத்தனவனுங்களே கூடிக்கூடி அதுல புதுமை இல்ல அதுக்கு ஆறுதல் பரிசு கொடுன்னு சொல்லிட்டாங்க. நான் எங்க பரிசு கொடுத்தேன்.

நடத்தினவனுங்களே இவனுக்கு அவனுக்குன்னே பங்கு போட்டுகிட்டாங்க."

'சந்திரனுக்கு இந்தியன்' என்று ஒரு தலைப்பிட்டு ஒரு ராக்கெட் செய்து பக்கத்தில் கவசம் அணிந்த மனிதா செய்து அவன் கையில் இந்திய தேசியக் கொடியை பறக்க விட்டிருந்தார்கள். அதற்கு முதல் பரிசு கிடைத்தது.

சேதுராமன் புகைந்தான்.

இது என்ன சொல்கிறது. இதில் என்ன புதுமை என்று கத்தினான்.

"உனக்கு பரிசு கிடைக்கலேன்னா போய்யா. ஒரு இந்தியன் வந்து சந்திரனுக்கு போறது நல்ல விஷயமில்லையா. அதுவொரு பையனுக்கு தோணியிருக்கே, அது பிரமாதம் இல்லையா. முளைக்கிறபொழுதே பொறாமையோட முளைக்கிறீங்கய்யா" என்று யாரோ கத்த அவன் வாயை மூடிக் கொண்டு வெளியே போனான்.

மனதில் ஒரு கோபமும் ஒரு சலிப்பும் வந்தது. யாராவது ஆறுதல் வார்த்தை சொல்ல மாட்டார்களா என்ற எண்ணம் வந்தது. ஆனால் எவரும் சொல்லவில்லை.

அவன் ஆசிரியரும் அவசர வேலை இருக்கிறதென்று மனைவியோடு பஸ் ஏறிவிட்டார்.

மாணவர்கள் வெற்றி பெற்ற மாணவிகளோடு போட்டோ எடுத்துக்கொள்ள பறந்தார்கள். நிறைய மாணவர்கள், நிறைய மாணவிகளோடு சல்லாபித்துக் கொண்டிருந்தார்கள். ஓஹோ... என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒருவரையொருவர் கேலி செய்து கொண்டிருந்தார்கள்.

"எல்லா பேரவையிலும் ஒரு குத்துவிளக்கு டான்ஸ். அந்த குத்து விளக்கு டான்ஸ் பார்த்துப் பார்த்து



எப்படி ஆடறதுன்னு எனக்கு தெரிஞ்சு போச்சு" என்று ஒரு மாணவன் சொல்ல "ஆடு பார்க்கலாம்" என்று இன்னொரு மாணவி சொல்ல, அங்குள்ள ஆறு மாணவர்களும் தயாரானார்கள்.

மாணவிகள் போலவே குத்துவிளக்கு நடனம் ஆடிக் காண்பித்தார்கள். பெரிய கூட்டம் அங்கு கூடி மிகப்பெரிய சிரிப்பையும் சந்தோஷத்தையும் அனுபவித்துக் கொண்டிருந்தது.

சேதுராமன் மீண்டும் கோபமானான். விமலாவைத் தேடினான்.

விமலா வெளி வராண்டாவிலே இருப்பதாகக் கேள்விப்பட்டான். எல்லா பக்கமும் பார்த்தான் இல்லை. மாடி வராண்டாவுக்கு மேல ஒரு ஏணிப்படி இருந்தது. அந்த ஏணிப்படியில் யாரேனும் இருப்பார்களா என்று அடியில சென்று பார்த்தபோது யாரும் இல்லை. ஏணிப்படியில ஏறி ஏன் கூரையில போய் உட்கார்ந்து கொள்ளப் போகிறாள் என்று எண்ணம் வந்தது. திரும்பினான். சட்டென்று எதையோ பார்த்ததாக ஒரு எண்ணம் வந்தது. அந்த ஏணிப்படியில் மண்ணின் தடம் இருந்தது.

இந்த ஏணிப்படியில் புதிதாக ஒரு மண்தடம் ஏன் வருகிறது. யாரேனும் ஏறியிருப்பார்களோ?

அவன் மெல்ல ஏணிப்படியில் ஏறினான். உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. அமைதியாய் கேட்டான்.

விமலாவும் அந்த இன்ஜினியரிங் மாணவனும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள்.

சேதுராமனுக்கு தலை சுற்றியது. மூச்சடைத்தது. சட்டென்று கண்ணில் நீர் பொங்கியது. ஆத்திரத்தோடு போய் அந்தப் பையனை தாக்க வேண்டுமென்று

நினைத்தான். ஆனால், இதுவரை பொங்கிப் பொங்கி எழும்பிய கோபத்தால் அவனுக்கு அலுப்புதான் ஏற்பட்டது. மெல்ல ஏணிப்படியில் சறுக்கிக் கீழிறங்கினான். வேகமாகப் போனான்.

கீழே போய் தனியனாக நின்று கொண்டான்.

என்ன பார்த்தோம என்ன பார்த்தோம் என்று மறுபடி யோசித்தான். வெறும் நண்பர்களாக பார்த்தோமா, வேறுவிதமாகப் பார்த்தோமா, என்னிடம் இத்தனை காதல்வார்த்தை பேசிவிட்டு அவன் கைகளை கோர்த்துக் கொள்ள எப்படி மனம் வந்தது. இவள் என்ன விதமான பெண். ஏன் இப்படி செய்கிறாள். இது சாதாரணமான விஷயமா அல்லது மானங்கெட்டத்தனமா. இவள் நல்லவளா, கெட்டவளா, எதற்கு, எதற்காக என்னை இப்படி புறக்கணித்து விட்டாள்

உள்ளுக்குள் பெரிய அலறலும் வேதனையும் பொங்கின. ஆத்திரத்தோடு ஏதேனும் செய்ய வேண்டுமென்ற ஒரு வேகம் எழுந்தது.

அவர்கள் இரண்டு பேரும் படியில் இறங்குவதைப் பார்த்தான். போய் என்னடி என்று கேட்டு விடலாமா என்று பதைபதைப்பு ஏற்பட்டது. ஆனாலும் அடக்கிக் கொண்டான்.

அவள் அவனை நோக்கி வந்தாள்.

"நான் ஊருக்கு கிளம்பப் போறேன்" என்றாள்.

"என் கூட பேசணும்னு சொன்னியே."

"ஒண்ணும் பேசறதுக்கு இல்லை. போ போரடிக்குது. பரிசே கிடைக்கலை. இவ்ளோ கஷ்டப்பட்டும் உனக்கு ஆறுதல் பரிசு கிடைச்சது. எனக்கு அதுவும் கிடைக்கலை."



"ஏய். நீ போய் மாதிரி கிராமமெல்லாம் பண்ணிட்டு வருவியா. ஊசப்பண்டாரமா இருக்கியே."

"ஏய்.. என்ன பேசற."

அவன் கோபமடைந்தான்.

"உன்னைத்தான் சொல்றேன். ஊசப்பண்டாரம் மாதிரி, மாதிரி கிராமம் பண்ணிட்டு வர்றியே. உனக்கு வேற சப்ஜெக்டே இல்லையா. எங்கிட்ட கேட்டிருந்தா நான் எத்தனையோ சொல்லியிருப்பேன் இல்ல."

"எனக்கு தெரிஞ்சு நீர்த்தேக்கம் எல்லா எக்ஸிபிஷனலயும் வச்சுருக்காங்க. இதுவொன்னும் புதுசு இல்ல."

"இந்த மாதிரி லைட் போட்டு பார்த்திருக்கியா."

"என்ன லைட். அந்த நீர்த்தேக்கத்துக்கு லைட் நல்லாவேயில்லை."

"உனக்கு ஆத்திரம். அதனால அப்படி பேசற."

"எவனோ ஒருத்தன் லைட் போட்டான்னு அவன் கைய பிடிச்சுட்டு நிக்கறியே."

சட்டென்று அவனிடமிருந்து வார்த்தைகள் வெளி வந்தன. அவள் திகைத்தாள்.

"ஆமாம். கையப்புடிச்சேன். என்ன இப்போ."

"என்னை லவ் பண்றேன்னு சொல்லிட்டு அவன கைய கோத்துக்கறியே வெட்கமாயில்லை."

"இல்லை, நான் உன்னை லவ் பண்ணலை."

"ஏன்."

"நீ இன்னும் சின்ன பையன்."

செருப்பால் அடித்தார் போல் அவனுக்கு முகம் வெளிறியது.

"என்ன சொன்ன."

"நீ சின்ன பையன்."

"நீ பெரிய கிழவியா."

"உனக்கு புரியாது அவரு இன்ஜினியரிங் படிக்கறாரு."

"எவரு."

"எனக்கு லைட் போட்டாரே விஜயகுமார் அவரு இன்ஜினியரிங் படிக்கறாரு. ஃபைனல் இயர். நான் அவரைத்தான் லவ் பண்றேன்."

"இன்ஜினியரிங் படிக்கறவனை பார்த்தவுடனே என் கவிதை பிடிக்கலையா."

"உன் கவிதை நல்லதான் இருந்தது. ஆனா உன்னை கல்யாணம் பண்ணிக்க முடியாது."

"ஏன்."

"நீ சின்ன பையன்."

இம்முறை யாரோ நெஞ்சில் மிதித்தது போல இருந்தது.

அவள் மெல்ல நகர்ந்தாள்.

"போ. போயிட்டு வா. தப்பு என்னுது. நீ போட்ட சாதாரண லெட்டருக்கு நான் மகிழ்ந்து போனேன். நீ செய்த சின்ன சின்ன பாராட்டுக்களுக்கு நான் காணாத போனேன். யாராவது பாராட்ட மாட்டாங்களா, யாராவது ஃப்ரெண்டாக மாட்டாங்களான்ற ஏக்கத்துல நான் எல்லாத்தையும் பெரிசு படுத்தி லவ் லவ் லவ்வுன்னு நினைச்சுட்டேன். அதை நீயும் தூண்டி விட்ட. இன்னிக்கு வேற ஒரு ஆள் கிடைச்சவுடனே அவன் இன்ஜினியரு, அவரு இவரு அப்படின்ற உனக்கு காதல் விளையாட்டு. பொழுதுபோக்கு சூதாட்டம். சீட்டுக்கட்டை கலைச்சு போடறா மாதிரி நீ கலைச்சு கலைச்சு போட்டுகிட்டிருப்ப. ஆனா மாத்திகிட்டிருப்ப. என்னால அது முடியாது. என்னால தாங்க முடியாது. நான் உன்னை ரொம்ப நேசிச்சேன். அளவுக்கு அதிகமா நேசிச்சேன். அதான் என் தப்பு. போ. போய் ஸாரி அப்படின்னு லெட்டரெல்லாம் எழுதாத. இத்தோட முடிஞ்சு போச்சு. வீட்டுக்கு போன உடனே முதல் காரியம் உன்னுடைய லெட்டரையெல்லாம் எரிச்சு சாம்பலாக்கி அதை ஒரு பாக்ஸ்ல போட்டு உனக்கு அனுப்பிடுவேன். ஏன் உனக்கு அனுப்பறேன் தெரியுமா உன் லெட்டரை எரிச்சுட்டேன்னு நீ புரிஞ்சுகறதுக்குதான். சுத்தமா அழிச்சுட்டேன்னு நீ தெரிஞ்சுக்கணும்னுதான். ஏதோ ஒண்ணு ஞாபகம் வச்சுண்டிருக்கோம். ஏதோ ஒண்ணு இருக்கனும்கறதுக்காக இல்ல. உன் எல்லா லெட்டரையும் ஃபைல் பண்ணி வச்சிருக்கேன். அந்த லெட்டரை பொசுக்கிட்டு உனக்கு அனுப்பறேன். போயிட்டு வா. நல்லாயிரு."



தன் பெட்டியை திறந்து அதிலுள்ள மாதிரி கிராம பொம்மைகள் அத்தனையும் குப்பையில் போட்டு விட்டு பெட்டியையும் தூக்கி புதரில் வீசிவிட்டு வேகமாக நடந்தான்.

அவன் கையில் இருபத்தேழு ரூபாய் ஐம்பது காசுகள் இருந்தன. அவனுக்கு பசி வயிற்றைக் கிள்ளியது. ஒரு ஹோட்டலுக்கு போய் அவனுக்கு விருப்பமான மசால் தோசையை சாப்பிட்டான். ஐஸ்கிரீம் வாங்கி விழுங்கினான். இன்னும் இருபது ரூபாய் இருந்தன. ஊருக்குப் போக ஐந்து ரூபாய். மீதி பதினைந்து ரூபாயை அம்மாவிடம் கொடுக்கலாம். அம்மா கஷ்டப் படுகிறாள். இதற்கு மேல் அம்மா கஷ்டப் படவேண்டாம். இதில் பதினைந்து ரூபாய் பாக்கி வைத்து திருப்பிக் கொடுத்து விட்டேன் என்றால் அம்மா சந்தோஷப் படுவாள்.

இனி, வேறு எதுவும் வாழ்க்கையில் முக்கியமில்லை. அம்மாவின் சந்தோஷம்தான் முக்கியம்.

அவன் தீர்மானித்தான்.

பஸ்ஸ்டாண்டில் போய் உட்கார்ந்து கொண்டான். இந்த பஸ் போகட்டும் என்று அடுத்த பஸ்ஸுக்கு காத்திருந்தான். அடுத்த பஸ் போகட்டும் என்று இன்னொரு பஸ்ஸுக்கு காத்திருந்தான். இரவு முழுவதும் பஸ்ஸ்டாண்டில் நின்றிருந்தான். அவ்வப்போது அழுதான்.

ஏன், என்ன குறை எனக்கு. என் கவிதை இப்பொழுது எப்படி பிடிக்காமல் போயிற்று. என்னுடைய நடை உடை பாவனை எப்படி மறந்து போயிற்று. என் கம்பீரம் எப்படி காணாமல் போயிற்று. ஏன் பெண்கள் இப்படி பொய் சொல்கிறார்கள். இவள் மோசமான பெண்ணா. இவளை நான் காதலித்துவிட்டு கதறுகிறேனா அல்லது எல்லா பெண்களுமே மோசமா, சேதுராமா இந்த செருப்படி உனக்குத் தேவைதானா. நீ பாட்டுக்கு ஏதேனும் படித்துக் கொண்டு எழுதிக் கொண்டு உற்சாகமாக இருந்தாயே. அம்மாவுக்கு உதவியாக ஆயிரம் வேலை செய்தாயே. எல்லாவற்றையும் உதறிவிட்டு பொம்மை செய்து இப்பொழுது பார் உன்னையும் குப்பையில் வீசி விட்டார்கள் என்று தனக்குத்தானே பேசினான்.

எழுந்து நின்று அழுதான். உட்கார்ந்து அழுதான். நடந்து அழுதான். தூணைப் பிடித்துக் கொண்டு அழுதான்.

அந்த இரவு பஸ் ஸ்டாண்டின் இருட்டு அவனுக்கு அழுவதற்கு வசதியாக இருந்தது. சேதுராமன் வீட்டிற்குப் போனான்.

"என்னடா ஆச்சு."



"பரிசு கிடைக்கலைம்மா."

"போனா போவுது. அடுத்த தடவை வாங்கிக்கலாம்." அம்மா சர்வ சாதாரணமாகச் சொன்னாள்.

"நான் பரிசு வாங்கலைன்றது உனக்கு வருத்தமா இல்லை."

"இல்லைடா ரெண்டு மூணு தடவை காலை இடிச்சு கிட்டேன். ஒரு தடவை முழங்கால்ல இடிச்சுகிட்டேன். என்னாச்சு புள்ளைக்கு அப்படின்னு ஒரு கவலை வந்தது. நீ முழுசா வந்து சேர்ந்தாப் போதும் அப்படின்னு வேண்டிகிட்டேன். வந்துட்டேனவுடனே நிம்மதி ஆச்சு, பரிசு எப்போவேணா வாங்கிக்கலாம்டா. நீதான் முக்கியம்."

அம்மா நடந்துவந்து அவன் தலையைத் தடவினாள். அவன் அம்மாவின் கைகளைப் பிடித்து கண்ணில் ஒற்றிக் கொண்டான். போய் குளித்தான்.

அம்மா அன்று மூன்று விதமாக மாமிசம் சமைத்திருந்தாள். விரும்பி உண்டான். அப்படியே அயர்ந்து தூங்கினான்.

காலை பத்து மணிக்கு அவள் எழுதிய கடிதங்களையெல்லாம் ஒருமுறை படித்தான். சிரித்தான்.

தேதியை மட்டும் பிளேடினால் கிறிகிறி எடுத்தான். மற்றவையெல்லாம் எரித்தான். டப்பாவில் போட்டான். தேதிகளை அந்த டப்பாவுக்குள் திணித்தான். சின்னதாக பார்சல் செய்தான்.

எனக்கு நானே கட்டிய தாஜ்மஹால் என்று அதன் மீது எழுதினான். என் வெகுளித்தனத்தின் அஸ்திக் கலசம் என்று இன்னொரு பக்கம் எழுதினான்.

ஒரு பீனிக்ஸ் பறவையின் சாம்பல் என்று மறுபக்கம் எழுதினான். பறவை எங்கே கேள்விக்குறி போட்டான்.

அது மேலே மேலே பறந்து போய்விட்டது என்று தொடர்ந்து எழுதினான்.

இது என் மனம், சாம்பலாகி விட்டது. ஸ்நேகிதியே உன் தோட்டமெங்கும் இலைத் தீவு. அற்புதமான ரோஜா மலர்கள் மலரும். ஆயிரம் சாமந்திகள் பிறக்கும். முல்லையும் மல்லியும் மணக்கும். ஸ்நேகிதியே அவையாவும் என் மனம், என் குணம் என்று எழுதினான்.

தபாலில் அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்தான். அம்மாவிடம் பத்து ரூபாய் கொடுத்தான்.

"ஏண்டா... எங்கிட்ட ஏன் திருப்பிக்கற நீ எதுனா வாங்கிக்க."

"போதும்மா. கஷ்டப்பட்டு சம்பாதிக்கற. எல்லாத்தையும் நானா செலவழிச்சா எப்படி."

"செலவழிக்கத்தானே சம்பாதிக்கறோம்."

"இல்லைம்மா. நான் சம்பாதிக்கணும். நீ செலவழிக்கணும். நீ சம்பாதிச்சு நான் செலவழிக்கறது போதும்."

"என்னா திடீர்னு புத்தி வந்துடுச்சு."

அம்மா சிரித்தபடி கேட்டாள்.

"நான் உன் புள்ள இல்லையா. ஏதோ ஒரு இடத்துல நான் திருந்தி நல்லவனா இருக்க மாட்டேனா."

"நாயே... நீ எப்பவும் நல்லவன்தாண்டா. என் புள்ளை என்னிக்கு கெட்டுப் போனான். எவன் கெடுக்க முடியும் என் புள்ளையை" என்று வழித்து நெட்டி முறித்தாள் மகனை அணைத்துக் கொண்டாள்.

ஆனாலும் உள்ளுக்குள் இருந்த துக்கம் மறையவில்லை. அடிக்கடி மேலே வந்து வயிற்றுப் பொருமல் போல தொண்டைக்கு வந்து எரிந்தது. கண்களிலிருந்து நீர் கசிந்தது.



"சேதுராமனை நீ யார்."

அவன் எழுதினான்.

"நான் சேதுராமன். ஒரு இளைஞன்."

"நீ என்ன செய்கிறாய்."

"ப்ளஸ் டூ முடித்திருக்கிறேன்."

"உனக்கு என்ன தெரியும்."

"ஆடத்தெரியும், பாடத்தெரியும், பேசத்தெரியும், பொம்மைகள் செய்யத் தெரியும், நூல் தரம் பார்க்கத் தெரியும். ஆடை நெய்யத் தெரியும்" என்று விதம் விதமாகச் சொன்னான்.

"எல்லாம் தெரிந்து நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்"

"எதுவும் செய்யவில்லை."

"ஏதேனும் செய்."

"என்ன செய்வதாக உத்தேசம்."

மறுபடியும் கேள்வி எழுதினான்.

அந்த பதிலுக்கு தெரியாது என்று எழுதினான்.

"தெரியாது என்ற பதில் சரியான பதில் அல்ல. இன்னும் தெரிந்து கொள்ள வேண்டும். உன்னைப் பற்றி புரிந்துகொள்ள வேண்டும். உடனடியாக வேலை தேட வேண்டும்."

"என்ன வேலை தேடலாம்."

"எந்த வேலை உலகம் முழுதும் பயன்படுமோ அந்த வேலை தேடலாம்."

"இங்குள்ள கல்யாண சத்திரத்தில் குமாஸ்தா வேலை காலியாக இருக்கிறது. வருகிறாயா, எழுநூறு ரூபாய் சம்பளம் தருகிறேன் " என்றான்.

"அந்த வேலை சரிப்படாது"

"சாப்பாடு கிடைக்குண்டா" என்று ஆசை காட்டினான்.

"சாப்பாடு முக்கியமில்லை. அறிவு முக்கியம்" என்று எழுதினான்.

ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காக கல்லூரியில் சேரச் சொன்னான்.

"திரும்பவும் அம்மாவின் காசால் படிப்பும் அதற்குப் பிறகு வேலை தேடலும் வேண்டாம். நான் உடனடியாக வேலை தேட வேண்டும். ஆசிரியர் பயிற்சியும் மிகச்சிறிய வட்டமாக இருக்கிறது. எனக்கு ஆசிரியராக விருப்பமில்லை. மாணவர்களோடு நின்று நானும் மாணவர்கள் புத்தியையே வைத்துக் கொள்வேனே தவிர மலர மாட்டேன். வளர மாட்டேன். எனக்கு வளர வேண்டும். உலகம் முழுவதும் சுற்றுகின்ற வேலை வேண்டும்" என்று மறுபடியும் எழுதினான்.

"என்ன வேலை."

"ஈரோட்டில் அற்புதமான விஷயம் துணி ஏற்றுமதி. இது பிரமாதமாக வந்து கொண்டிருக்கிறது. இதைப் பற்றி நான் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே நான் கைத்தறி ஏற்றுமதி வேலையில் சேரப்போகிறேன்."

எழுதி முற்றுப்புள்ளி வைத்தான்.

"இருநூத்தி பத்து ரூபாதான் தருவாங்க."

"பரவாயில்லை."

"இப்போ இருநூத்தி பத்து ரூபா. பின்னால ரெண்டு கோடி ரூபா" என்று மறுபடியும் எழுதினான்.

அங்குள்ள ஒரு ஏற்றுமதி கடையில்போய் வேலை வேண்டுமென்று கேட்டான்.

"ஐய்ய... நீதான் கவிதை சொல்ற தம்பியில்ல."

"ஆமாம்."



"வேலையா வேணும்."

"ஆமாம்."

"கவிதைய சினிமாவுக்கு எழுதி பெரியாளா ஆகக் கூடாது."

"அதெல்லாம் சரிப்படாதுங்க."

"அடிச்சக்கை. கவிதை சரிப்படாதுன்னு கவிஞனே சொல்லலாமா."

"கவிதை எழுதி பார்த்து சரிப்படாதுன்னு முடிவு பண்ணிட்டேங்க."

"நம்ம கடையில உட்கார்ந்து கவிதை எழுத மாட்டியே."

"மாட்டேங்க."

"சரி வா. வேலைக்கு வா. நல்லா கத்துக்க. இது அற்புதமான தொழில். இந்தியாவுல நம்பர் ஒன் தொழிலா மாறப்போற ஒரு விஷயம். அதனால கவனமா கத்துக்க. எல்லா வேலையையும் கத்துக்க. எந்நேரமும் கடையிலயே இரு. அப்போதான் கத்துக்க முடியும். சினிமா போகணும். இங்க போகணும். அங்க போகணும்னு போயிட்டா கத்துக்கறதை கோட்டை விட்டுருவ."

"இல்லீங்க நான் எங்கயும் போக மாட்டேன்."

அவன் காலை ஒன்பது மணிக்குப் போனால் இரவு பத்து மணிவரை கடையில் இருந்தான். ஒருவருடம் அதிகம் பேசாமல் மற்றவர்கள் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்தான்.

ஒரு வருடத்தில் அந்த கடையின் எல்லா வேலைகளையும் மிகத்திறம்படச் செய்கிறவனாக மாறினான். அவனுக்கு சம்பளம் மெல்ல மெல்ல கூடி ஆயிரம் ரூபாய் ஆயிற்று.

அம்மா சந்தோஷமானாள்.

"நல்ல நிலைக்கு வந்துருவ போலிருக்கேடா."

"அம்மா இதெல்லாம் நல்ல நிலை இல்லை. உனக்கு தனி பங்களா கட்டணும். அதுல உன்னைக் குடித் தனம் பண்ண வைக்கணும்."

"தனி பங்களா குடித்தனத்துக்கு போய்... என்னடா இது. நான் உன் கூடவே இருக்கணும். சின்ன வீடா இருக்கட்டும்டா, அப்போதான் ஒருத்தரையொருத்தர் பார்க்கும்படியா இருக்கும். ஆளுக்கொரு ரூம்ல அடைஞ்சு கிடந்தோம்னா அது எனக்கு பிடிக்காது."

அம்மா திட்டவட்டமாகச் சொன்னாள்.

ஐந்தாவது வருடம் அந்த பார்ட்னருக்குள்ளே அபிப்ராய பேதம் வந்தது. அவன் சமாதானப்படுத்த முயற்சி செய்தும் அவர்கள் பிரிய வேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

"நீ யார் பக்கம் இருக்கப் போற" என்று இரண்டு பக்கமும் அவனை வலைவீசி இழுத்தார்கள்.

"கூட வா. அவன் எவ்ளோ தரான். ரெண்டாயிரமா. நான் ரெண்டாயிரத்து ஐநூறு தரேன்" என்று தொடை தட்டினார்கள். ரெண்டாயிரத்து ஐநூறு தரேன்றானா. நான் மூவாயிரம் தரேன் என்று இன்னொருவர் எகிறினார்.

அவன் யோசித்தான்.

"இல்லீங்க."

"ஏன்."

"மூவாயிரம் ரூபா கசக்குதா." அவர் கேட்டார்.

"நான் தனியா பிஸினஸ் பண்ணப் போறேன்."

"போடா..." என்று ஒரு கெட்ட வார்த்தை சொன்னார்.



அவன் சிரித்தான்.

அவர் முகம் பயத்தில் வெளிறியது.

தான் தனியாக வியாபாரம் செய்து விடுவேன் என்று அவருக்குத் தெரிந்துவிட்டது. அதனால்தான் இத்தனை பதட்டமாக கெட்ட வார்த்தை சொல்கிறார். தனக்கு உபயோகம் இல்லாமல் தனக்கு போட்டியாக வேறு வந்து விடுகிறானே என்ற ஆத்திரத்தில் கத்துகிறார்.

அவன் நிச்சயமாக தனியாக இயங்குவது என்று தீர்மானித்தான்.

கையில் சில நூறு ரூபாய்களே இருந்தன.

"என்னா அவன் கூப்டா நீ போகமாட்டேன்னு தனியா கடை வச்சிடுவேன்னு சொன்னியா. அதுக்கு கெட்ட வார்த்தை சொன்னானா. நாய் அவன் கிடக் கான். உனக்கு எவ்ளோ கடன் வேணும். தனியா கடை வை. அஞ்சுவருஷம் உழைச்சிருக்க. உனக்கு காசு கொடுக்க முடியாதா அந்த நாய்க்கு. நான் தரேன்டா. ஒரு லட்சரூபா தரேன். கடை ஆரம்பி. நல்ல இடமா பிடிச்சு அங்க வேலை செய். நான் எக்ஸ்போர்ட் ஆர்டர் எடுக்கறேன். எனக்கு நீ கொண்டாந்து துணி கொடு."

அவ்விதமே ஒத்துக்கொண்டான். ஒரு லட்ச ரூபாய் அவரிடம் கடன் வாங்கினான். அவரிடமே துணி விற் றான். வேறு சிலருக்கும் ஆர்டர்கள் எடுத்து தலை யணை உறையும், பெட்ஷீட்டும் தைத்து மற்றவருக்கு விற்றான். மற்றவர்கள் சொல்லுகின்ற விதமாக ஆர்டர் வாங்கி அதேவிதமாக தைப்பதற்கும் கற்றுக் கொண் டான்.

இளம் பையன்களையும், பெண்களையும் வேலைக்கு அமர்த்தினான். மற்றவர்களைவிட மரியா தையாக நடத்தினான்.

"லீவுல போங்க வேணாம்னு சொல்லலை. ஆனா, சொல்லிட்டு போங்க. சொல்லாத லீவு போட்டீங்கன்னாதான் பக்பக்குன்னுது" என்று தைரியமாகப் பேச அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்தான். கூச்சலிடாமல் வேலை வாங்கினான்.

கத்தி கத்தி வேலை வாங்கும் முதலாளிகள் இருக்க இதமாகப் பேசுகின்ற முதலாளியைப் பார்த்து பல பேர் வேலைக்கு வந்தார்கள்.

பகல் சோறு நான் போடறேனே என்று அம்மா விடம் சொல்ல அம்மா நிச்சயமாய் போடலாம் என்று சொல்ல, அங்கு ஒரு பெண்ணை வேலைக்கு வைத்து உள்ளே வேலை செய்கின்ற பதினாறு பேருக்கும் பகல்சோறு போட்டான்.

ஈரோட்டில் சோறு போடுகின்ற முதல் கம்பெனி யாக அவனுடைய கம்பெனி இருந்தது. சோறு போட்ட புண்ணியமோ என்னவோ அவன் எடுத்த ஆர்டர் எல்லாம் மிகச் சிறப்பாக மார்க்கெட்டுக்குப் போயிற்று.

"நாற்பது பர்செண்ட் ரிஜெக்ட் ஆயிடுச்சு. அது உன் லாட் இல்லை. உன் லாட் அத்தனையும் பாஸ் ஆயி டுச்சு. நாற்பது பர்செண்ட் அந்தாள்கிட்ட கொடுத்தேன். அவன் மேட்டர் அத்தனையும் ரிஜெக்ட் ஆயிடுச்சு. இனிமே நூறு பர்செண்ட்டும் உங்கிட்டயே கொடுக் கறேன் நீ வித்துடறியா."

சரி என்று சொன்னான்.

சென்னைக்குப் போனான். யார் வாங்குகிறாரோ அவரைப் பார்த்து கைகூப்பி "இந்த லாட் என்னுடை யது. எனக்கு ஆர்டர் தரக்கூடாதா" என்று கேட்டான்.

"புது ஆளை நம்பி தரதில்லையே" அவர் தயங் கினார்.



"காசு தரவேண்டாம். அட்வான்ஸ் தரவேண்டாம். ஆர்டர் வாங்கி அது பாஸ் பண்ண பிறகு கொடுங்க."

"நீங்க எப்படி காசு போடுவீங்க."

"வெளிய கடன் வாங்கி போடுவேன்."

"வட்டி ஆகுமில்லை."

"பரவாயில்லைங்க. உங்களுக்கு என் மேல நம்பிக்கை வந்தா போதும். லாபம் வராட்டி பரவா யில்லை" என்று சொன்னான்.

அவர் சரியென்று தலையசைத்தார்.

இரண்டரை லட்ச ரூபாய்க்கு ஆர்டர் கொடுத்தார். அதற்கு கடன் வாங்கி துணி வாங்கி டெய்லர்களை வைத்து அவர் சொன்னதைவிட அற்புதமான டிசைன் கள் செய்து, மேஜை விரிப்புகள் இரண்டாயிரம் தனித் தனியாக பிளாஸ்டிக் பையில் போட்டு அவரிடம் கொடுக்க, அவர் சகலமும் சோதனை செய்து வெளி யூருக்கு அனுப்பினார்.

அது அடுத்த வாரமே மிக நன்றாக இருக்கிறது என்ற பதிலை திருப்பிக் கொடுத்தது. அவருக்கு காசும் கிடைத்தது. அவர் சொன்னதைவிட அதிகமாகக் காசு கொடுத்தார். அடுத்த ஆர்டரும் கொடுத்தார்.

சேதுராமன் என்கிற இளைஞன் சேதுராமன் என்கிற முதலாளியானார்.

"சேதுராமா கல்யாணம் பண்ணிக்கோயேண்டா. உனக்கு சமைக்கறது, வீட்டை பார்க்கறது எல்லாமே என் தலையிலயே போடாதடா எனக்கு முடியலைடா, வயசாயிட்டுப் போறதுடா."

அம்மா கெஞ்சினாள்.

"நீ யாரைப் பார்த்து சரின்னு சொல்றியோ அவளை நான் கல்யாணம் பண்ணிக்கறேன்."

"நீ பார்க்க மாட்டியா."

"நீ பார்த்தா போதும்."

"நான் பார்த்தும், நீ பார்த்தும் மோசமான பொண் ணை க்கலாம். நான் இதை கடவுள் கிட்ட விட்டுட் டேன்."

அவனுக்கு மஞ்சுளா அறிமுகம் செய்து வைக்கப் பட்டான்.

மஞ்சுளாவின் வீடு அவனைப்பற்றி கேள்விப்பட்டு வெளியே விசாரித்து சந்தோஷமாகி மிக நல்ல முறை யில் திருமணம் செய்து கொடுக்கிறேன் என்று முன் வந்தது.

"எங்க குழந்தைய கண் கலங்காம நீங்க காப்பாத்தி னீங்கன்னா போதும். வேண்டிய உதவியை செய் வோம்," என்று உறுதியளித்தது.

"பாருங்க எனக்கு அப்பா இல்லை. உங்களையும் உங்க மனைவியையும் பார்க்கறபோது எனக்கு எங்க அப்பா அம்மாவை பார்க்கறாப்போல இருக்கு. உங்களுக்கு எதுனா செய்யணும் போல இருக்கு. உங்க பொண்ண கண்கலங்காம நான் பார்த்துக்கிறேன். நீங்க கூட என்னோடயே வந்து இருந்துடலாம்" என்று சொல்ல அவர்கள் வேண்டாம் என்று தலையசைத் தார்கள்.

அவனோடு சரளமாகப் பேசினார்கள்.

"இந்த வயசுல இப்படியொரு பொறுமை. திறமை எப்படி வந்தது. உனக்கு."

மஞ்சுவின் அண்ணன் கேட்டான்.

"தெரியலை. அனுபவம்தான். சிலவிஷயங்கள்வ பட்ற அடி உதைதான் நம்பள அனுபவசாலி ஆக்கிடுது."

வெளிப்படையாக சேதுராமன் பதில் சொன்னார்.



திருமணம் செய்து கொண்டார் குழந்தைகள் பெற் றுக் கொண்டார். இன்னும் இன்னும் என்று எற்று மதிகள் உயர்ந்தன. திருமண மண்டபம் வாங்கினார். அடுத்தடுத்து வியாபாரத்தை விரிவுபடுத்தினார்.

இந்த லவ் ஸ்டோரிக்கும் நீங்க ஜெயிச்சதுக்கும் நடுவுல ஒரு இடைவெளி இருக்கே அது என்னா."

மஞ்சு விடியற்காலை வேளையில் அவர் மீது சாய்ந்து கொண்டு கேட்டாள்.

"அதுதான் தபஸ். ஒரு பொண்ணு தூக்கிப்போட் டுட்டு போனதும், உன்னை விட பெரியாளோட நான் போயிடுவேன்னு சொன்னதும், உள்ளுக்குள்ள ஒரு ஆத்திரம் வந்துடுச்சு. நான் பெரியாளாகாத ஓயமாட் டேன். நான் ஒரு உச்சிக்கு வராத சாக மாட்டேன். அப்படின்னு ஒரு ஆத்திரம் வந்தது. ரௌத்ரம் வந்தது. பாரதி சொல்லியிருக்கானே ரௌத்ரம் பழகுன்னு அது என்னான்னு அப்போதான் புரிஞ்சது.

ரௌத்ரம்கறது அடுத்தவனை போய் அடிக்கற கோபமில்லை. ரௌத்ரம்கறது காலை வாரி விடற குணமில்லை. ரௌத்ரம்கறது உள்ளுக்குள்ள இருக்கற வைராக்கியத்தை உசுப்பி விடற விஷயம். எனக்கு நானே மத்தவனுக்கு தெரியாம பட்ற கோவத்துக்கு பேருதான், ரௌத்ரம். உள்ளுக்குள்ள கனிஞ்சிருக்கற ஒரு கலை. யாருக்கும் தெரியாத ஒரு வேகம். இது எற பட்டுப் போயிடுச்சுன்னா நிச்சயமா ஜெயிச்சுடலாம். காலம் காலம் கொஞ்சம் உதவி செய்தா போதும். காலம் எனக்கு நிறையவே உதவி செய்தது."

"அந்த லவ்வுலேர்ந்துதான் இதெல்லாம் வந்ததா."

"இது மட்டும் வரலை. அந்தப் பொண்ணுக்காக காத்திட்டிருந்தேன். அந்தப் பொறாமை, அந்த பொண் ணுடைய அன்பை பெறணும்னு நிறைய விஷயங்கள்

கஷ்டப்பட்டு செய்தேன். அந்த உழைப்பு அந்தப் பொண்ணோட பழகும்போது இதமா இனிமையா நல்லவனாவே இருக்கறதுக்கு எல்லா விதமாகவும் முயற்சி செய்தேன் அப்போ எங்கிட்ட இருக்கற வினை யாட்டுத்தனமான வார்த்தைகள், கோபமான சொற் கள் எல்லாம் போயிடுச்சு. நான் ஒரு ஜென்டில்மேனா பழக ஆரம்பிச்சேன். அந்த ஜென்டில்மேனாக நான் சின்ன வயசுலேயே பழக ஆரம்பிச்சதுனால நான் எந்தக் கடைக்குப்போய் என்ன விஷயம் கேட்டா லும் நல்லா சொல்லிக் கொடுத்தாங்க. யார்கிட்டயும் கோவமா பேசாத மிருதுவா பேச எனக்கு கை வந்ததே என்னுடைய காதல்னாலதான். லெட்டர் போஸ்ட் பண்ணிட்டு பத்து நாள்ல லெட்டர் வரும்னு படபடக் காம காத்துகிட்டிருக்கறதே பெரிய தபஸ். அந்த காத்துக்கிட்டிருக்கற புத்தியை காதல் கொடுத்தது.

மத்தியானம் பன்னெண்டு மணிக்கு போன முதலாளி திரும்பி எட்டரை மணிக்கு வருவாரு. நான் முதலாளி வரலையேன்னு ஆறு மணிக்கு வீட்டுக்கு போக மாட்டேன். முதலாளி வரவரைக்கும் கடையி லேயே இருப்பேன். ஏண்டா வீட்டுக்கு போகலையா அப்படின்னு கேட்டுகிட்டே இருப்பாரு. நீங்க வர லையே நீங்க வரக்காணோமே நீங்க வந்தா ஏதாவது வேலை செய்வீங்களோ அப்படின்னு நினைச்சுகிட்டே உட்கார்ந்து கிட்டிருப்பேன். முதலாளி சந்தோஷமாயிடு வாரு.

பாவம்ப்பா அவன் எனக்காக காத்துகிட்டிருக்கான். ஞாயிற்றுக்கிழமை பார்க்காத வந்து சாயங்காலம் முழுக்க கவான்கவான்னு உட்கார்ந்துகிட்டிருக்கான். ஏண்டா டீ வாங்கி சாப்பிட்டியா இல்லையா அப்ப டின்னுவாரு.



இல்லீங்க பசிக்கலை. அதெப்படி பசிக்காத இருக் கும். பசிக்கும்டா வா. உனக்கொரு தோசை, எனக் கொரு தோசை வாங்கிட்டு வந்துடு.

அவரே காசு கொடுப்பாரு. நானும் முதலாளியும் உட்கார்ந்து தோசையும் காபியும் சாப்பிடுவாம். அப்படி சாப்பிடறபோது எத்தினி விஷயம் சொல்லி கொடுத்திருக்காரு தெரியுமா. அப்படி காத்துகிட்டிருக் காது போனால் அந்த விஷயங்களை நான் காத்துகிட் டிருக்க முடியாது. வெறும் மசால் தோசை எனக்கு கிடைக்கலை மஞ்சு. அந்த மசால்தோசையோட வியா பாரம் எப்படிப் பண்ணணும்கற சூட்சமமும் சொல் லிக் கொடுத்தது. அந்த சூட்சமம் எப்படி வந்தது. நான் காத்துகிட்டிருக்கறதனால வந்தது. அந்த காத்திருத்தல் எப்படி வந்தது. அதை அந்த பொண்ணு சொல்லிக் கொடுத்தா. காதலில் ஈடுபட்டு நான் காத்திருக்க பழகிக் கொண்டேன்."

மஞ்சு அவரை ஆசையோடும் வியப்போடும் பார்த் தாள்.

"ஒரேயொரு கேள்வி. தப்பா எடுத்துக்காதீங்க."

"கேளு மஞ்சு."

"இன்னும் அந்த பொண்ண லவ் பண்றீங்களா."

"ஹா... ஹா... மஞ்சு நீயும் ஒரு சாதாரண பொண் ணுன்னு காமிச்சுட்டியே."

"சே... சே... அப்படியெல்லாம் இல்லை. பொறாமை யில கேட்கலை. அடிமனசுல முதல் லவ் இன்னும் இருக்குமோன்னு கேட்டேன்."

"ஒரு பரிதாபம்தான் இருக்கு."

"ஏன்."

"அந்தப் பொண்ணு நல்லாயில்லை மஞ்சு."

"என்ன சொல்றீங்க என்னாச்சு."

"நமக்கு பாப்பா பிறந்து ஆஸ்பத்திரியில இருந்தியே அப்போ பார்த்தேன்."

"ஐயோ... எங்கிட்ட சொல்லவில்லயே."

"என்னான்னு சொல்றது."

"என்ன பண்ணிகிட்டிருந்தாங்க."

"அவங்களும் அட்மிட் ஆயிருந்தாங்க."

"ஏன்."

"வயித்துல கட்டி. அது தவிர கருப்பையை ரிமூவ் பண்றதுக்காக வந்திருந்தாங்க."

"ஏன் அப்படி."

"அது என்னான்னு தெரியலை. நல்லாயிருக்கீங்களான்னு கேட்டேன். நல்லாயிருக்கேன்னு ஒரு தடவை சொன்னா அப்புறம் அழ ஆரம்பிச்சா. ஏங்க அழுவறீங்க என்ன பிரச்சினைன்னு கேட்டேன். நல்லாயில்லை அப்படின்னா. ஏங்க அப்படின்னேன். அவ வேற ஜாதி இவன் வேற ஜாதியாம். இப்போ அந்தாளு அவங்க ஜாதியிலயும் ஒரு பொண்ண கல்யாணம் பண்ணிகிட்டாராம். அப்போதான் இந்த பொண்ணை நாங்க ஏத்துக்குவோம்னு அவங்க சொன்னாங்களாம். அதுக்காக கல்யாணம் பண்ணாராம். அதுக்கப்புறம் அவளை அந்த வீடு ஒத்துக்கலையாம். ஒதுக்கியே வச்சருக்காங்களாம். அந்த சொந்த ஜாதி பொண்ணு இப்ப பொண்டாட்டி மாதிரி குடித்தனம் பண்றாளாம். இவளை ஒரு ஓரமா வாரத்துக்கு ஒரு தடவை வந்து பார்க்கற வைப்பாட்டி மாதிரி வச்சருக்காங்களாம். சொல்லி சொல்லி அழுவறா. எனக்கு ரொம்ப கஷ்டமா போச்சு.

ஐயோ. ஏன் இப்படி இருக்கீங்க. நல்ல வேலையா தேடிக்கக்கூடாதா அப்படின்னேன். டீச்சர் வேலை செய்யறாளாம். பசங்களுக்கு சொல்லிக் கொடுத்து



சொல்லிகொடுத்து உயிர் போகுதாம். எதுக்கு வந்தீங்க அப்படின்னு கேட்டாள். ஒரு நண்பரை பார்க்க வந்தேன்னு சொல்லிட்டேன்." உன்னைப்பத்தி சொல லைை.

"ஏன் என்னைப் பத்தி சொல்லலை."

"உன்னைப்பத்தி சொன்னா வந்து பார்க்கறேன்னு சொல்லும். வந்து பார்த்தா நீ இருக்கற வசதியை உன்னுடைய அழகை நம்ம குழந்தையை பார்த்து பொறாமைப்பட்டாலும் படலாம். அவங்களை வாழ்க்கைலேர்ந்து ஒதுக்கிட்டு மறுபடியும் எதுக்கு வரவேற்பானேன். அதனால நான் வழிப்போக்கன் மாதிரியே போயிட்டேன். அவங்க எப்படி சாமர்த்தியமா இன்னொருத்தரோட போயிட்டாங்களோ அதே சாமர்த்தியத்தை நான் அவங்ககிட்ட காட்டும்படியா ஆயிடுச்சு. ஒரு பொய் சொல்லும்படி ஆயிடுச்சு. அவங்க உன்னை பார்க்கறதையோ நீ அவங்களை பார்க்கறதையோ நான் விரும்பலை."

"ஏங்க, பார்த்தா என்ன தப்பு."

"நானே மறக்கற ஆளை நீ என்னத்துக்கு பார்க்கணும் மஞ்சு. நானே தூக்கிப் போட்ட ஒரு விஷயத்தை நீ எதுக்கு பேசணும். இது உனக்கும் எனக்கும் நடுவுல ஒளிவு மறைவுகள் இருக்கக்கூடாதுன்னு சொல்லிட்டு தான் இதைச் சொன்னேன். இதை மறந்துடு மஞ்சு. நமக்கு நிறைய வேலை இருக்கு."

"என்ன வேலை. கல்யாண மண்டபம்தான் கட்டி முடிச்சோமே."

"நாம துணி தச்சு ஒரு நிலத்துல மேடை போட்டு பார்த்தோமே ஞாபகம் இருக்கா."

"ஆமாம்."

"அந்த நிலம் விலைக்கு வருதாம். புன்செய் நிலம் நல்ல நிலம் அப்படின்னாங்க. வாங்கி போடலாமான்னு தோணுது. நாளைக்கு போய் பார்த்துட்டு வரலாமா."

"ஐயோ அந்த மாதிரி இடமா. காடு மாதிரி இருந்ததே."

"பார்க்கறதுக்கு காடு மாதிரி இருக்கு. வெட்டி சரி பண்ணோம்னாக்க பெரிய பழத்தோட்ட மரம் வச்சுடலாம். நீர் பாய்ச்சினோம்னா காய்கறிகூட விளைவிக்கலாம்."

"முடியுமா."

"உழைச்சா முடியும். சுத்தி சுத்தி பார்த்தா முடியும். விடாத முயற்சி செய்தா முடியும். நான் இல்லை, வெறும் கரம்பு காடா, முட்டாளா இல்லை. கடின உழைப்பு என்னை மாத்தலை. பழத்தோட்டமா கொண்டாரலை. அதே போல அந்த இடத்தையும் நாம மாத்தமுடியும் வாங்கிடட்டுமா."

"வாங்கிடுங்க. அந்த இடத்துக்கு என்னா பேர் வைப்பீங்க."

மஞ்சு தொடர்ந்து கேட்டாள்

"நீ சொல்லு."

"உங்க பேர்ல பாதி, என் பேர்ல பாதி."

மஞ்சு சிரித்தபடி சொன்னாள்.

"கரெக்ட். சேத்மான் தோட்டம், வைக்கலாமா."

"மான்னா."

"மஞ்சுளா. எம்.ஏ.என். மான், சேத்மான் தோட்டம்னு வைப்போம்."

"நல்லாயிருக்கு. புள்ளிமான் மாதிரி கடம்பை மான் மாதிரி கவரிமான் மாதிரி சேத்மான் நல்லாயிருக்கு."



"மான்னு சொன்னதும் இன்னொரு விஷயம் ஞாபகம் வருது."

"என்னா, பழைய விஷயமா."

"ஆமாம். சேலத்துலேர்ந்து காலையில ஈரோடுக்கு வந்தேன். அப்போ சேலத்துல ஒரு மலைகிட்ட பஸ் மொள்ள போச்சு. எல்லோரும் எட்டி எட்டி பார்த்தாங்க. என்ன பார்க்கறீங்கன்னு கேட்டேன். அதோ பார் மலை உச்சியில ஒரு மான் நின்னுகிட்டிருக்குன்னு சொன்னாங்க. எட்டிப் பார்த்தேன். கூர்மையாக பார்த்தேன். அங்க ஒரு மான் பெரிய காதோட பெண் மான் ஒண்ணு நின்னுகிட்டிருந்தது. ஆச்சரியமா இருந்தது. ஆமாங்க மான் நிக்குது அசையுதுன்னு சொன்னேன். அது மான் இல்லை. அது நிழல். ஒரு பாறையினுடைய நிழல். மலையேறி பார்த்தா அங்க ஒண்ணும் இருக்காது. ஒரு பாறை தான் இருக்கும். கீழேயிருந்து பார்த்தா மான் மாதிரி தெரியும். கிட்ட போனா நிழல் அது. பாறையினுடைய நிழலாத்தான் இருக்கும்னு சொன்னாங்க. எனக்கு ஆச்சரியமாப் போச்சு. பொய்மான். அந்த இடத்துக்கு பேரு பொய் மான் கரடு அப்படின்னாங்க. அந்த கரடுக்கு மேல இருக்கறது மான் இல்லை பொய். என்னுடைய காதலும் பொய்மான்தான். மான் இருக்காப் போல இருக்கு. ஆனா கிட்டப்போனா மான் இல்லை. காதல் இருக்குன்னு நினைச்சேன். ஆனா கிட்டபோறபோது அது காதல் இல்லைன்னு தெரிஞ்சது. காதல்னுடைய சாயல், காதல்னுடைய நிழல் அது. உண்மையில்லை. வெறும் நிழல்தான். பொய்தான். கண்ணால் பார்ப்பதும் பொய் காதால் கேட்பதும் பொய்யின்னு அன்னிக்கு புரிஞ்சுகிட்டேன். எதையும் தீர விசாரிக்கணும்னு நல்லா தெரிஞ்சுகிட்டேன். ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு விஷயத்தை அறிகிறபோதும் நான் அது உண்மையா அப்படின்னு பல தடவை தீர விசாரிக்கிற

புத்தியும் எனக்கு வந்தது. நான் ஜெயிக்கறதுக்கு அதுவும் காரணம். பொய்மானிலிருந்து கற்றுக் கொண்ட சேதுராமனின் கம்பெனிக்கு பெயர் சேத் மான் நல்லாயிருக்கு இல்ல."

மஞ்சு கைகொட்டினாள்.

"இன்னும் உங்ககிட்டேயிருந்து அந்த கவிதைக் குணம் போகலை. அது இருக்கு" என்று பாராட்டினாள்.

அவர் கண்ணில் மெல்ல கண்ணீர் வந்தது.

கவிஞனுக்கு தன்னை கவிஞன் என்று எப்பொழுது சொன்னாலும் சந்தோஷமாகத்தான் இருக்கும்.

35840